Registered as a News Paper in Sri Lanka
දිනමුරසු වාරමලර්
பக்கம் 24 ரூபா 20.00
மே. 25 - 31, 2006

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 663

## நான்காவது ஈழப் போரும் சர்வதேசத்தின் அழுத்தமும்!

புலிகளின் எச்சரிக்கையால் கதிகலங்கும் கண்காணிப்புக் குழு!




இலங்கை விவகாரத்தில் அமெரிக்காவின் ஈடுபாடு!



கடிதம் - போவோம்! ரசிப்போம்!

சிம்பு நயன்தாரா டபுள் ஓகே...

மாமா மாப்பிள்ளே -ஷ்ரேயா




# ஆன்மீகம்

## அன்பே சிவம்

இறைவன் துணையை வேண்டி நிற்பவாகள் துறவிகள் மட்டுமல்ல, துவ்வாதவர்களுந்தான். அதிலும் துறவிகளின் நிலையிலிருந்து மாறுபட்டு நிற்பது உலக வாழ்க்கையின் இயல்பு.

மொத்தத்தில் இறைவழிபாடு மனித சமுதாயத்தின் இன்றியமைதாததொன்றாகி விடுகிறது. குறிப்பாக இந்துக்களின் வழிபாடானது, உள்ளார்ந்த மன நிறைவை வெளிப்படுத்தும் தன்மையுடையது. 'அன்பே சிவம்' என்னும் கருப் பொருளை உணர்த்தி நிற்பது, மற்ற எல்லாவற்றிற்கும் வழி கோலும், அறத்தின் வாயிலுக்கு முதற்படியாக அமைந் திருப்பது; போற்றுதற்கரியது. அன்பின் வழியது உயிர்நிலை, உயிரற்ற உடலால் பயனில்லை. அந்த உயிரின் இயக்கமே அன்பில் உருவானதாயின், அது அனைத்து உயிரினங் களையும் வாழவைக்கும் என்பது ஆன்றோர் துணிபு. அன்பற்றார் உள்ளத்தில் அருள் அரும்ப வாய்ப்பில்லை. ஆதலின் அன்பே சிவம் என்பது இந்துக்களின் ஆழமான நம்பிக்கை என்பதில் ஐயமில்லை.

-என்.எஸ்.ராஜா, தம்பலகமம்.



## பிறப்பினைக் கொண்டாடுவோம்!

மார்கழி மாதம் தொடங்கிவிட்டாலே போதும் உலக நாடுகள் அனைத்திலும் நத்தார் (கிறிஸ்மஸ்) பண்டிகையின் ஆரம்பம் தொடங்கிவிடும். ஆலயங்களில் மட்டுமல்ல, வியாபார ஸ்தலங்கள், இல்லங்கள் தோறும் கிறிஸ்மஸ் (நத்தார்) மரங்கள் பல வர்ண அலங்காரப் பொருட்களால் அலங் கரிக்கப்பட்டு விதம் விதமான மின் விளக்குகள் பொருத் தப்பட்டு, மின் ஒளியின் பிரகாசம் நத்தார் மரத்தின் சோடினையை மேலோங்கச் செய்வதைக் காணலாம்.

எத்தனையோ ஏற்பாடுகளுடன் ஆலயங்களில் நத்தார் விழா குழந்தைச் செல்வங்களுடன் கொண்டாடப்படுவதும், நத்தார் தாத்தா குழந்தைகளுக்கு பரிசில்கள் வழங்குவதும் வருடா வருடம் நடைபெறும் நிகழ்வாகும்.

உலக நாடுகள் அனைத்திலும் இன, மத, மொழி வேறுபாடின்றி அனைவராலும் கொண்டாடப்படும் ஒரு விழாதான் கிறிஸ்துவின் பிறப்பின் விழா. கிறிஸ்து பிறப்பின் குடில்களும் நத்தார் தாத்தாவின் வர்ணப்படங்களும் வியாபார ஸ்தலங்களில் விற்பனையை மேலோங்கச் செய்ய நிறையவே வழி செய்ய உதவும். நாமும் கிறஸ்துவின் பிறப்பினைக் கொண்டாடுவோம்.

-ஜோசப் அருள்சாமி, இராஜவெல்ல.

## அல்லாஹ்வின் உறுதி

எமக்கு அத்தியாவசியமாகத் தேவைப்படும் பொருள்களை பதுக்கி வைத்துக் கொண்டு அவற்றின் விலையைத் தங்கள் விருப்பத்துக்கேற்ப அதிகப்படுத்தி பொருளீட்ட முயலும் அநியாயக்காரர்களை அன்றாடம் நாம் பார்க்கின்றோம்.

மனிதன் வாழ்வதற்கு வேண்டிய அத்தியாவசியப் பொருள்களை ஏராளமாக வைத்துக் கொண்டு, அவற்றைப் பொதுமக்களுக்குக் கிடைக்காமல் செய்பவன் சமுதாயத் துரோகி.

இத்தகைய கயவர்களைத் தண்டிக்க ஆட்சியாளர்களின் சட்டம் வலுவிழந்து இருந்தாலும் அல்லாஹ்வின் சட்டம் இவர்களைத் தண்டித்தே தீரும். மனிதன் இயற்றும் சட்டங்களை ஏமாற்றி விடலாம். ஆனால் மா பெரியோன் அல்லாஹ்வின் தண்டனையில் இருந்து இவர்கள் தப்பமுடியாது.


நபியே! இக் கொடுமைக்காரர்கள் செய்து வருவது பற்றி அல்லாஹ் பாராமுகமாயிருக்கின்றானே என்று நீர் ஒருக்காலும் எண்ண வேண்டாம்.

அல்குர் ஆன் 14:42

இவ்வாறு ஒவ்வொரு கொடுமைக்காரனையும் தான் கண்காணித்து வருவதாக அல்லாஹ் அல்குர் ஆனில் உறுதி கூறுகிறது.

-எம்.சீ.கலீல், கல்முனை - 05.

## கவிதைப் போட்டி இல.660



### பொம்மை

ஏட்டிக்குப் போட்டியாய்
இருதரப்பும் குண்டு வீசி
வீட்டையும் உடைத்து
வாழ்வையும் சிதைத்தனர்
வீதியிலே குந்தியென்ன
விதியை எண்ணி நொந்தென்ன
வீராணம் கொண்ட தரப்புகளின்
கைகளில் அகப்பட்ட
விளையாட்டுப் பொம்மை
நாங்கள்.

–சீ.தங்கவடிவேல், மட்டக்களப்பு.

### பரிசுக்குரிய கவிதை

### பாதையெங்கே?

அங்கே சென்றால்
போராளிகளென்று
பிடிக்கிறார்கள்!
இங்கே வந்தால்
ஆயுதப் பயிற்சியென்று
இழுக்கிறார்கள்!
எங்கேதான் செல்வதோ
நாங்கள்!

–கே.அல்.ஆஸாத்,
ஏறாவூர் – 06.

### விலங்கு

முந்தை நாள்
ஓர் கோர
விலங்கின் கொடுமையால்
வீதியில் இன்று
ஓர் நன்றியுள்ள
விலங்கின் காலடியில்
தஞ்சமடைந்தோம்.

–சு.சண்முகராஜா,
துண்டசாலை.

### கதியற்ற அகதிகளாய்

விதி வரைந்த ஓவியத்தில்
வறுமையின்
வண்ணங்களாய்
உணவின்றி பரிதவித்தோம்
மதியற்றோர் புரியும்
சதித்திட்ட யுத்தங்களால்
கதியற்ற அகதிகளாய்
கலக்கமுடன் இப்படியே
எத்தனை நாள்
காத்திருப்போம்?

–மொகிதீன் எம்.சரீப்,
திருகோணமலை.

### புரியவில்லை

தெருவிலே அனாதரவாகி விட்டோம்
பசிப்பது எம் குற்றமா?
படைத்த - அல்லது
இறைவன் குற்றமா?
ஒன்றுமே புரியவில்லை
உலகத்திலே...

–ஏ.எஸ்.எம்.ரவூப், கொழும்பு – 15.

### பதற்றம்

இதோ...
பாருங்கள்
சமாதானத்தின்
நாடி நரம்பு
அறுபட்டு
மீண்டும்
நாட்டில்
பதற்றம்.

–காமீம் செய்னுலாப்தீன்,
கிண்ணியா – 05.



### வழி விடுங்க

பிச்சை எடுக்கப்போகும் பாதையெல்லாம்
பிணங்கள்
பிறரை குற்றம் சொல்லி பலன் இல்லை.
மீண்டும் அகதிமுகாமில் இருக்க வேண்டி வருமோ.
நாங்களும் வாழ சமாதானக் கொடி பறக்க
வழி விடுங்க.

–ஏ.சி.எம்.ரிஸ்வான், கொழும்பு – 11.

## கவிதைப் போட்டி இல.663



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி 30.05.2006.

கவிதைப் போட்டி இல.663
தினமுரசு வாரமலர், த.பெ. இல–1772, கொழும்பு.

### தூக்கத்திற்கு ஹர்த்தாலா?

இரவில் காவலிருக்கும்
நாய்கூட
நன்றாய் தூங்கிவிட்டது
ஏன்?...மனிதமும்தான்
ஆனால் அவ்வப்போது
யுத்தம் வெடிப்பதால்
மனிதனாகிய
எமக்கு மட்டும்தான்
தூக்கம் தொலைகிறது.

–அ.கா.மு.றிஸ்வின்,
மூதூர் – 01.

### வீரம்

தீராத சண்டைகளால்
தூரம்போய்
தொல்லைகளை மறந்தவர்கள்
'வீரம்' காட்டியதால்
வீதிக்கு
வந்துவிட்டார்களோ...?

–நா.ஜெயபாலன், பிபிலை.

### மனிதர்களாவ்

நன்றி
கெட்ட மனிதர்களாவ்
இன்று
நாங்கள் வாடுகிறோம்
நாயுடன்
சேர்ந்து!

–எம்.மைக்கல், லிந்துல.

### அனாதையோ?

அப்பாவி மனுசங்க
நாங்க
இந்த மண்ணுக்கே
பார(வ)மாச்சு ஏங்க
கண்தொறந்து
பார்த்தோம் நாங்க
இந்த மண்மேல
யாரும் நிலை இல்லிங்க
சொந்த பந்தம்
இல்லாத நாங்க
தெரு நாய் போல
கிடக்கிறோம் பாருங்க.

–ஏ.ஆர்.எம்.நதார், ஜின்னாநகர்.

## உங்கள் பக்கம்

### புதுக்குடியிருப்பு ஆயுள் வேத மருந்தக ஊழியர்களின் பரிதவிப்பு

புதுக்குடியிருப்பு ஆயுள் வேத மருந்தகத்தின் வைத்தியர்கள், அங்கு வேலை செய்யும் சிற்றூழியர்களை சிகிச்சைக்கு வந்திருக்கும் பல மக்கள் முன்னிலையில் அவதூறாக ஏசி அவமானப்படுத்துவது மட்டுமின்றி, அவர்களை மரக்கறி வியாபாரி, போத்தல் வியாபாரியாகவும் நியமனம் வழங்கியுள்ளார்கள். மற்றும் ஆண், பெண் பேதமின்றி காட்டிற்குள் மரம் தறித்தல் மற்றும் சாப்பாடு, தண்ணீர் இன்றி வெளிவேலை என்று சொல்லி 8.30 தொடக்கம் 4 மணி வரை வெயிலிற் கருவாடு போடுகிறார்கள். எதிர்காலத்தில் விடுதியில் தங்கி இருக்கும் நோயாளிகளுக்கு என்ற போர்வையில் ரோட்டில் நின்று கையேந்தி பிச்சை எடுத்து தரும்படியும் கூறுவார்கள் போல எனவே சுகாதார வைத்திய அதிகாரி அவர்களே; சுதேச வைத்தியத்துறை அதிகாரி அவர்களே! இப்படிப்பட்ட வைத்திய அதிகாரிகளின் துன்புறுத்தலில் சிக்கியிருக்கும் ஆயுள் வேத சிற்றூழியர்களுக்கு விடிவு காலம் பிறக்க வழிவகுப்பீர்களாக.

–மட்டக்களப்பு மக்கள்.

# வாசகர் சாலை

### தினமும் வா!

இலக்கியத்தில் பவனிவரும் முரசே
பவனிப்பாதையில் சீக்கிரம் வந்திடு
யுகத்தை உன்னுள் மூடி வைத்து
காத்திருக்க வைப்பது ஏன்?
அகிலத்தின் அறுசுவைகளை அலங்கரித்து
நீ வைத்திருக்கும் செய்திகளை தினமும்
படித்து சுவைத்திட தினமும் வா தினமுரசே!

–கியாஸ் எம்.மிப்ராஸ், மூதூர் – 07.

அன்பின் தினமுரசே!
அறிவின் தினமுரசே!
உன்னை பாராத நெஞ்சங்கள்
இல்லை. உன் பெயர் சொல்லாத
மனிதர்கள் இல்லை.
உன் புகழ் பாடா கவிதைகள் இல்லை.
பிரிந்த நெஞ்சங்களை சேர்த்து வைக்கும்
நீ உன்னை மறக்க முடியுமா
மறைக்கத்தான் முடியுமா!
நீ இல்லாமல் நான் இல்லை.

–ரிவ்சான், அனுராதபுரம்.

### வீரமுடன் முரசுக்கு

பல இன்னல்களுக்கு மத்தியில் 'தினமுரசு' வாரமலரை மிகத் திறம்பட தாங்கள் கொண்டு செல்வது தமிழ் கூறும் நல்லுலகத்திற்கு பேருதவியாக விளங்குகின்றது. உங்கள் சேவை என்றென்றும் தேவை. அதற்கு எல்லாம் வல்ல இறைவன் துணையிருப்பான். மீண்டும் எனது வாழ்த்துக்களும் பாராட்டுதல்களும் முரசுக்கு உரித்தாகட்டும்.

–சுதன், கிராண்ட்பாஸ்.

வாழ்க முரசே!
மிச்சமின்றி மெய்ச்செய்திகளை
அச்சமின்றி துணிவாய்த்
தருவதில்
உச்சம் நிற்கும் தினமுரசே! நீ
வாழ்க! வாழ்க! வாழ்க! வாழ்க!
சிந்தனையில் சீர் கொண்டோரை
நிந்தனையின்றி தேர்ந்தெடுத்தே
சந்தம் பாடும் எம்முரசே! உன்
வஞ்சனையில்லா சேவை
தொடர எம்
நெஞ்சம் நிறைந்த
வாழ்த்துக்கள்!
வாழ்க! வாழ்! வாழ்க!

–எம்.ஏ.பாத்திமா ஷானாஸ்,
கிண்ணியா.

தித்திக்கும் முரசிற்கு
தினந்தோறும் நீ தரும்
திகிலான செய்திகள்
திசைகள் எல்லாம்
திரும்பி பார்க்க வைக்கிறது.

திருடாத செய்திகளை
திடீரென தருகின்றாய்
திருமுகத்துடனே
திரும்பத்திரும்ப வாசிக்க
தின் பண்டமாய் இனிக்கிறது.

தித்திப்பாய் இருக்கிறது
'தில்' உள்ளது உன்னில்
தினந்தோறும் என் கரத்தில்
தினமுரசே நீ தான்!

–ஜெ.முகுந்தகுமார், வவுனியா.

மடல்கள் மற்றும்
ஆக்கங்கள்– உட்பட சகல
தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:–1772, கொழும்பு.
தொலைபேசி: -011 4-514282
தொலை நகல் (Fax):–011 4-513266
ஈ–மெயில்: (E-mail):–
murasu@sltnet.lk

# போர் அபாயம்: தமிழகத்துக்குப் படகு அகதிகள் படையெடுப்பு!

இலங்கையின் வடக்கு - கிழக்குப் பகுதிகளில் இடம்பெறும் வன்செயல் சூழ்நிலைகளால் பாதிக்கப்பட்டுத் தஞ்சம் தேடி தமிழகத்துக்கு வரும் அகதிகளுக்கு உரிய மனிதாபிமான உதவிகளை வழங்குமாறு தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார். மன்னார், திருகோணமலை, யாழ்ப்பாணம் ஆகிய பகுதிகளிலிருந்து ஆயிரத்துக்கு மேற்பட்ட அகதிகள் படகுகள் மூலம் இராமேஸ்வரம் போன்ற தமிழகக் கரையோரப் பகுதிகளுக்கு வந்து சேர்த்துள்ளதாகக் கிடைத்த தகவலையடுத்தே தமிழக முதல்வர் இந்த உத்தரவை விடுத்துள்ளார். ஏற்கனவே சுமார் அறுபதாயிரத்துக்கு மேற்பட்ட அகதிகள் தமிழகத்திலுள்ள சுமார் நூறு நலன்புரி முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கான அடிப்படை வசதிகளை தமிழக அரசு வழங்கி வருகிறது. மன்னாரிலிருந்து சென்ற அகதிகளின் படகொன்று கடலில் கவிழ்ந்ததால், அதில் பயணம் செய்த பதினெட்டுப் பேரில் ஒன்பது பேர் காப்பற்றப்பட்டமையும் மற்றும் ஒன்பது பேர் கடலில் மூழ்கி மரணமானமையும் குறிப்பிடத்தக்கது. யுத்தம் வெடிக்கலாமென்ற அச்சம் காரணமாகவே பெருந்தொகைப் பணம் கொடுத்து படகுகள் மூலம் தமிழகத்துக்கு அகதிகள் தப்பிச் செல்கின்றனர். படகுகளில் அளவுக்கதிகமாக மக்கள் ஏற்றப்படுவதாலேயே படகுகள் கவிழக்கூடிய ஆபத்துக்கள் ஏற்படுவதாகவும் தமிழக அதிகாரிகள் தெரிவித்தனர். அண்மையில் சிலாபக் கடலில் நீரில் தத்தளித்துக் கொண்டிருந்த இருபது பேரை மீனவர்கள் காப்பாற்றியமை குறிப்பிடத்தக்கது.

மட்டுப்படுத்தப்பட்ட அளவில் இப்போது இடம்பெற்று வரும் தாக்குதல்கள் யுத்தமாகவோ இனக்கலவரமாகவோ வெடிக்கலாமென்ற அச்சம், தமிழ் மக்கள் மத்தியில் நிலவுகிறது. திருமலையைச் சேர்ந்த சுமார் நான்காயிரம் குடும்பங்கள் உள்ளூரிலும் வெளி மாவட்டங்களுக்கும் இடம்பெயர்ந்திருப்பதாக ஊர்ஜிதமற்ற தகவல்கள் கூறுகின்றன. தமிழகத்துக்குப் படகுகளில் அகதிகளை ஏற்றிச் செல்லும் பணிகளில் புலிகளும் ஈடுபடுவதாகவும், ஆளொருவருக்குத் தலா பத்தாயிரம் ரூபா வீதம் அறவிடுவதாகவும் திருமலைத் தகவல்கள் கூறுகின்றன. படகுகள் மூலமாக மட்டுமல்ல, விமான மூலமாகவும் தமிழகம் செல்வதற்குக் கொழும்பிலுள்ள இந்திய உயர் ஸ்தானிகராலயத்தில் வடக்கு, கிழக்கு தமிழ் மக்கள் முண்டியடிப்பதையும் காணக்கூடியதாக இருக்கிறது.

## விவசாயியைச் சுட்டுக் கொன்ற சிப்பாய் கைது

யாழ்ப்பாணம், தென்மராட்சி, விடத்தல்பளையைச் சேர்ந்த அருணாசலம் சுரேஷ் குணபாலன் என்ற 42 வயது விவசாயி சுட்டுக் கொல்லப்பட்டமை தொடர்பாக படைச் சிப்பாயியொருவர் கைது செய்யப்பட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ளார். படையினர் மீது கைக்குண்டு வீசியதையடுத்தே சம்பந்தப்பட்ட விவசாயி மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாக ஏற்கனவே சிப்பாய் குறிப்பிட்டிருந்தார். இது குறித்து விசாரணை நடத்திய சாவகச்சேரி நீதிவான் திரு.பிரேம்சங்கர் விடுத்த உத்தரவையடுத்து கொடிகாமம் பொலிஸார் குறிப்பிட்ட சிப்பாயைக் கைது செய்தனர்.

## சுகாதார சுத்திகரிப்பு தொழிலாளர் முறையிடலாம்

வடக்கு, கிழக்கில் நடத்தப்பட்ட சுகாதாரச் சுத்திகரிப்புத் தொழிலாளர்களுக்கான நேர்முகப் பரீட்சையில் பாதிக்கப்பட்டவர்கள், தமது முறைப்பாடுகளை எழுத்து மூலம் தமக்கு அனுப்பி வைக்குமாறு சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கேட்டுள்ளார். இலக்கம் 61, இசிப்பத்தான மாவத்தை, கொழும்பு - 05இலுள்ள சமூக சேவைகள், சமூக நலத்துறை அமைச்சுக்கு நேரடியாகத் தமக்கே விலாசமிட்டு அனுப்புமாறு அமைச்சர் கோரியுள்ளார். ஏற்கனவே இது தொடர்பாகப் பல முறைப்பாடுகள் அமைச்சருக்குத் தொலைபேசி மூலம் தெரிவிக்கப்பட்டதையடுத்தே இக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

## நிதி மோசடி பற்றியும் பிரட்ஸ்கர் கேள்வி

யாழ்ப்பாணத்திலுள்ள 'உதயன்' பத்திரிகைக் காரியாலயத்துக்குச் சென்றிருந்த நோர்வே தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர், "யார் இந்தத் தாக்குதல்களை நடத்தினரென்று கருதுகிறீர்கள்?" என்று பத்திரிகை முக்கியஸ்தர்களைக் கேட்டபோது, "துணைக்குழுக்கள்" என்று பதில் வந்தது. "துணைக்குழுக்களென்றால் யார்?" என்று மறு கேள்வியைத் தூதுவர் தொடுத்தபோது, "அப்படித்தான் சந்தேகிக்கிறோம்" எனப் பதில் வந்தது. "அதற்கு ஆதாரங்கள் இல்லையா?" என்று மீண்டும் தூதுவர் கேட்டார். "முகங்களை மூடி வந்த இனந்தெரியாதவர்கள்" என்று பதில் வந்தது. "நிதி மோசடி சம்பந்தமாக ஏதாவது பிரச்சினைகள் உங்களுக்கு இருக்கிறதா" என்றும் கேட்டு வைத்தார் பலே பேர்வழியான பிரட்ஸ்கர்.

## நோர்வேயிலிருந்து தமிழ் இளைஞர்கள் வெளியேற்றம்

நோர்வேயிலிருந்து 31 தமிழ் இளைஞர்கள் அண்மைய சில வாரங்களில் இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டுள்ளனரென்று ஒஸ்லோ வட்டாரங்கள் தெரிவித்தன. நோர்வேயில் பல்வேறு குற்றச்செயல்களில் ஈடுபட்டவர்களே இவ்வாறு நாடு கடத்தப்பட்டுள்ளனர். கடந்த நான்கு வாரங்களுக்குள் இவர்கள் நோர்வேயை விட்டு வெளியேற்றப்பட்டுள்ளனர். இலங்கையில் நிகழும் அண்மைய வன்செயல்களுக்கும் இவர்கள் வெளியேற்றப்பட்டமைக்கும் தொடர்பிருக்கலாமென நம்பப்படுகிறது.

# சர்வதேச மன்னிப்புச் சபையின் கருத்து ஆதாரமற்றது; உண்மைக்கு மாறானது

## -ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி கண்டனம்

"தமிழ் பேசும் மக்கள் சந்தித்து வரும் மனித உரிமை மீறல்கள் குறித்து சர்வதேச மன்னிப்புச் சபை அக்கறை காட்டி வருவதற்கு நன்றி. ஆனால், ஆதாரங்களையும் அதற்கான தகவல்களையும் சரிவர உறுதிப்படுத்தாமல் அறிக்கை வெளியிட்டிருக்கும் சர்வதேச மன்னிப்புச் சபையின் அவசர நடவடிக்கை, அந்த அமைப்பின் மீதான நம்பகத்தன்மை மீது சந்தேகங்களை கிளப்பியிருக்கின்றது.

மே 13 ஆம் திகதி யாழ். தீவகத்தில் அப்பாவிப் பொது மக்கள் மீது நடத்தப்பட்ட படுகொலை சம்பவங்கள் மனச்சாட்சியை அடகு வைத்து விட்ட மனித மிருகங்களின் மிலேச்சத்தனமான நடவடிக்கையாகும்.

இது குறித்து ஈ.பி.டி.பி. யினராகிய நாம் எமது கண்டனத்தையும் சொல்லித்தீராத கவலையினையும் பகிரங்கமாகத் தெரிவித்திருக்கின்றோம். யாழ். தீவகத்தில் படுகொலை செய்யப்பட்ட அப்பாவி குடிமக்கள் எமது நீண்ட கால கட்சி உறுப்பினர்களது உறவினர்களாவர். அத்துடன் எமது கட்சியின் ஆதரவாளர்களாகவும் இருந்திருக்கின்றார்கள் என்ற துயரத்தையும் நாம் வெளிப்படுத்தியிருக்கின்றோம். இந்நிலையில் எமது உறுப்பினர்களும் இந்தப் படுகொலை சம்பவ இடத்தில் நின்றிருப்பதாகத் தமக்கு தகவல் கிடைத்திருப்பதாக சர்வதேச மன்னிப்புச் சபை விடுத்திருக்கும் அறிக்கை உண்மைக்கும் நேர்மைக்கும் மாறான கருத்தாகும்", - இவ்வாறு ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

பருத்தித்துறையிலிருந்து புத்தளம் ஈறாக பொத்துவில் வரைக்கும் அகன்று பரந்திருக்கும் தமிழ் பேசும் மக்களின் தாயக நிலப்பரப்பெங்கிலும், கொழும்பிலும் பணிமனைகளை அமைத்து, மக்களுக்காக உழைத்து வருகின்றவர்கள் நாம். இங்கெல்லாம் நாமும் இருக்கின்றோம் என்பதால் இங்கு நடக்கின்ற படுகொலைகளோடு எம்மையும் சம்பந்தப்படுத்திவிட முடியுமா? எமது பணிமனைகள் சட்டவிரோதமாக எங்கும் அமைக்கப்பட்டிருக்கவில்லை! எமது உறுப்பினர்களின் நடவடிக்கைகளும் நடமாட்டங்களும் ஜனநாயக வரம்புகளை மீறியதாகவும் இல்லை. நாம் அரசியல் ரீதியாக மட்டுமே அரசில் பங்கெடுத்து வருபவர்கள்! படை நடவடிக்கைகளில் எமக்கு எந்தவிதமான சம்பந்தமும் இல்லை. மனிதப் படுகொலைகளின் மூலம் குறித்த இலக்கை அடைய முடியாது என்பதும், அவை மக்கள் விரோத நிலைப்பாடு என்பதும் எமது அரசியல் ஆதார கருத்தியல். ஆகவேதான் தொடரும் படுகொலைகள் யாரால் நடத்தப்பட்டாலும் அதை நாம் வன்மையாகக் கண்டித்து வருகின்றோம். எமது மண்ணில் நடக்கும் படுகொலைகளை சர்வதேச அரங்கில் பகிரங்கப்படுத்துவதிலும் அம்பலப்படுத்துவதிலும் ஈ.பி.டி.பி. முடிந்தளவு பங்காற்றி வந்திருக்கின்றது. காணாமல் போனவர்கள், கண்ட இடத்தில் சுட்டுக் கொல்லப்பட்டவர்கள், சிறைவைக்கப்பட்டவர்கள், அச்சுறுத்தப்பட்டவர்கள் என அனைத்து மனித உரிமை மீறல்கள் குறித்தும் சர்வதேச சமூகத்திற்குக் கொண்டு சென்றவர்கள் நாங்கள்!

தொடரும் படுகொலைகளுக்கான பொறுப்பையும், தாமே புரிந்துவிட்ட படுகொலைகளுக்கான பழியையும் எம் மீது சுமத்துவது புலிகளின் பொய்யான பரப்புரைகளாகும்!

தமிழ் பேசும் மக்களின் அரசியல் உரிமை குறித்தும், அபிவிருத்தி மற்றும் அன்றாடப் பிரச்சினைகள் குறித்தும் நடைமுறைச்சாத்தியமான வழியில் நின்று ஈ.பி.டி.பி.யினராகிய நாம் முடிந்தளவு உழைத்து வருவதால் யுத்தத்தின் விளைவுகளினால் துயரப்படுகின்ற மக்கள் எம்மை நோக்கி அணி திரண்டு வருவதனால்..... அதற்கான உள் மன விருப்பங்களைக் கொண்டிருப்பதால்... ஜனநாயக பன்மைத்துவ அடிப்படையிலும், சர்வதேச நாடுகளெங்கும் காணப்படுகின்ற அரசியல் ஜனநாயக கட்டமைப்பின் அடிப்படையிலும் புலிகளின் ஏகப்பிரதிநிதித்துவ எண்ணங்களை நிராகரித்து எமது தளத்தில் நின்று உழைத்து வருவதால் எம்மீது படுகொலைகளை நடத்துவதும் எம்மீதான பொய்யான பரப்புரைகளைச் செய்து வருவதும் புலிகளின் நீண்ட கால நடவடிக்கையாகும்.

இந்த வரிசையில் யாழ். தீவகத்தில் நடத்தப்பட்டிருக்கும் படுகொலைகளுக்கான சம்பவத்தையும் எம்மீது இன்று புலிகள் சுமத்தியிருக்கின்றார்கள். - இவ்வாறு அந்த நீண்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## யுத்தச் சாபக்கேடுகளில் பட்டினியும் ஒன்று

உலக நாடுகளில் யுத்தம் இடம் பெறும் பிரதேசங்களிலேயே பட்டினி மோசமாக இருப்பதாகவும் இந்த வகையில் இலங்கையில் ஏனைய இடங்களை விடப் வடக்கு கிழக்குப் பகுதிகளில் பட்டினி ஏழு சதவீதம் அதிகமாக இருப்பதாகவும் உலக உணவுத் திட்டத்தின் வதிவிடப் பிரதிநிதி ஜெப்ரால்ற்டிக் தெரிவித்தார். யுத்தம் நிறுத்தப்படும் பட்சத்திலேயே காத்திர மான பட்டினி ஒழிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும்; அதுவரையும் நாம் சும்மா வாளாவிருக்காது பட்டினி ஒழிப்பு வேலைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் அவர் சொன்னார்.

## பேராசிரியர் கூல் குடும்பத்துடன் அமெரிக்காவில்!

யாழ். பல்கலைக்கழக உப வேந்தராக நியமிக்கப்பட்ட பேராசிரியர் ரட்ணஜீவன் கூலுக்கு மரண அச்சுறுத்தல் விடுக்கப்பட்டமைக்கும் அவர் குடும்பத்தோடு நாட்டைவிட்டு வெளியேறியமைக்கும் புலிகள் அமைப்பே பொறுப்பென்று மனித உரிமைகளுக்கான புத்திஜீவிகள் அமைப்பு வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளது.

ஜனாதிபதியினால் சட்டபூர்வமாக யாழ். பல்கலைக்கழக உப வேந்தராக நியமிக்கப்பட்ட ஜீவன் கூல், பதவியைப் பொறுப்பேற்றால் படுகொலை செய்யப்படுவாரென்று புலிச்சார்பு உதிரிகளான சில பல்கலைக்கழக மாணவர்கள் எச்சரிக்கை விடுத்திருந்தனர். இதனையடுத்து பேராசிரியர் கூல், தமது குடும்பத்தாரோடு அமெரிக்காவுக்குச் சென்றுவிட்டாரென்று பிந்திக் கிடைத்த தகவல்கள் தெரிவித்தன. இதேவேளை கொழும்பைச் சேர்ந்த தமிழ்ப் பேராசிரியரொருவருக்கும் மரண அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாகவும் மேற்படி அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி அமைப்பின் பொதுச் செயலாளர் பேராசிரியர் ராகுல அட்டலகே கைச்சாத்திட்டு வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது

மக்களின் மனித உரிமைகளையும் அவர்களின் உயிர்களையும் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு இலங்கையிலுள்ள சகல கட்சிகளையும் சார்ந்ததாகும். புலிகளின் அச்சுறுத்தல் காரணமாக பேராசிரியர் கூலும் அவரது குடும்பத்தாரும் நாட்டைவிட்டு வெளியேற நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர். புலிகளின் இச் செயல் வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டியதாகும். இன்றைய அரசியல் சூழ்நிலையில் சுதந்திரமான கல்விமான்களுக்கு அச்சுறுத்தல்கள் விடுக்கப்படுவதை நாம் கண்டிக்கிறோம். கிளர்ச்சிவாதிகளின் ஆணையை மதிக்கத் தவறியதாலேயே பேராசிரியர் கூலுக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது. தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகள் தாங்களேயென்று புலிகள் கூறிக்கொள்கின்றனர். ஆனால் அவர்களது கொள்கைகளை ஏற்றுக் கொள்ளாதவர்களை அவர்கள் அச்சுறுத்துகின்றனர். புலிகளின் கொள்கைளுக்கு விரோதமாகக் கருத்துக் கூறும் அரசியல் கட்சிகளுக்கும் அச்சுறுத்தல்கள் விடுக்கப்படுகின்றன. - இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இப்போதைக்குப் பேச்சு இல்லை

புலிகளை ஜெனீவாப் பேச்சுவார்த்தை மேசைக்கு அழைத்துச் செல்வதற்கான முயற்சிகளில் செல்வாக்குப் பெற்ற சர்வதேச, தேசிய சக்திகள் வலுவான முயற்சிகளை மேற் கொண்டு வருகின்ற போதிலும்,அது இப் போதைக்குச் சாத்தியப்படாதென அரசியல் ஆய்வாளர்கள் கூறுகின்றனர். ஐரோப்பிய ஒன்றியம் புலிகள் மீது முற்றுமுழுதான தடையை விதித்தாலும் பேச்சுவார்த்தைக்குத் தயாரென அரசு அறிவித்துள்ளபோதிலும் அதற்கான சாத்தியங்கள் மிகக் குறைவாகவே இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## கோமா நிலைக்கு வித்திட்ட மிரட்டல்

சுன்னாகம், மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியின் முன்னாள் அதிபரான திருமதி மங்கையற்கரசி திருச்சிற்றம்பலம் என்பவர் தொலைபேசி மூலம் விடுக்கப்பட்டு வந்த கொலை மிரட்டல்களையடுத்து, படுத்த படுக்கையாகி தற்போது மயக்க நிலையை அடைந்துள்ளார். யாழ். பல்கலைக்கழக உபவேந்தரான பேராசிரியர் ரட்ணஜீவன் கூல் நியமிக்கப்பட்டதை இவர் பகிரங்கமாக ஆதரித்ததையடுத்தே இவருக்கு கொலை மிரட்டல்கள் விடுக்கப்பட்டு வந்தன.

## அல்லைப்பிட்டி மக்கள் சொந்த இடங்களுக்குத் திரும்புகின்றனர்

ஊர்காவற்றுறை, அல்லைப்பிட்டியில் கடந்த 13ஆம் திகதி இடம்பெற்ற படுகொலைச் சம்பவங்களையடுத்து, அச்சம் காரணமாக யாழ்ப்பாணத்துக்கு இடம்பெயர்ந்த ஆயிரக்கணக்கான மக்களில் சுமார் இருநூறு பேர் மீண்டும் தமது சொந்தக் கிராமத்துக்குத் திரும்பியுள்ளனர். அல்லைப்பிட்டியில் ஒரே வீட்டில் ஒன்பது பேர் கொல்லப்பட்டதையடுத்து ஆயிரக்கணக்கான மக்கள் இடம்பெயர்ந்து யாழ்ப்பாணம் அடைக்கல மாதா தேவாலயத்திலும், யாழ். நாவாந்துறையிலுள்ள பொது இடங்களிலும் தஞ்சம் புகுந்துள்ளன. சுமார் பத்துக் குடும்பங்கள் மட்டுமே கிளிநொச்சிக்கு இடம்பெயந்துள்ளன. வட பிராந்திய கடற்படைக் கட்டளைத் தளபதி வைஸ் அட்மிரல் ஜே.எச்.யூ. ரணவீர தலைமையில் வேலணை மைதானத்தில் நடைபெற்ற கூட்டத்தில் கடற்படைத் தளபதியளித்த உறுதிமொழியையடுத்தே மக்கள் மீண்டும் அல்லைப்பிட்டிக்குச் செல்லத் தொடங்கியுள்ளனர். அல்லைப்பிட்டிப் பங்குத் தந்தை உட்பட தீவகத்தைச் சேர்ந்த நான்கு பங்குத் தந்தைகள், கடற்படையதிகாரிகள், ஈ.பி.டி.பி. முக்கியஸ்தர்கள் ஆகியோர் இக் கூட்டத்தில் கலந்துகொண்டனர். சொந்த இடங்களுக்குத் திரும்பும் மக்களுக்கு உரிய பாதுகாப்பு வழங்கப்படுமென்று கடற்படைத் தளபதி உறுதியளித்தார்.

"அல்லைப்பிட்டிப் படுகொலைச் சம்பவத்தையடுத்து, அச்சம் காரணமாக வீடுகளை விட்டு வெளியேறி, அங்குள்ள தேவாலயத்தில் தஞ்சம் புகுந்தோம். அல்லைப்பிட்டியை விட்டு வெளியேறுமாறு மக்கள் படை என்ற பெயரில் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தன. சிலர் அங்கு வந்து வன்னிக்கு இடம்பெயருமாறு எம்மைக் கேட்டனர். அது ஆபத்தானது மட்டுமல்ல, யுத்தச் சூழ்நிலை இருப்பதால் அங்கு சென்றால் நாம் பெரும் கஷ்டங்களை எதிர்நோக்க வேண்டியேற்படலாம் என்பதால் மறுப்புத் தெரிவித்தோம்" என்றார் கடற்றொழிலாளியான அந்தோனிப் பிள்ளை சகாயராசா.

## புலிகளின் துணைத் தளபதி ரமணன் பலி

புலிகளின் மட்டக்களப்புப் புலனாய்வுப் பிரிவுத் தலைவர் ரமணன், வவுணதீவிலுள்ள புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பாகப் பல்வேறு குற்றச்சாட்டுகள் மற்றும் உரிமை கோரல்களுக்கு மத்தியில் பிரபா அணியின் உள் இயக்க மோதலே இதற்குக் காரணமென்ற வலுவான புதிய தகவல் இப்போது கிடைத்துள்ளது. மட்டக்களப்பு, பழுகாமத்தைச் சேர்ந்த கந்தையா உலகநாதன் என்ற இயற்பெயர் கொண்ட ரமணன், 2004ஆம் ஆண்டு ஏப்ரலில் முற்றிவெடித்த கருணா அணி மோதலுக்குப் பின்னர் வன்னிக்கு அழைக்கப்பட்ட மட்டக்களப்பைச் சேர்ந்த முக்கியஸ்தர்களில் ஒருவரென்பது குறிப்பிடத்தக்கது. கருணா அணியுடனான மோதலுக்கு முன்னர் மட்டக்களப்புக்குப் பொறுப்பாகவிருந்த ரமேஷ் என்ற புலி இயக்க முக்கியஸ்தரோடு நெருங்கிச் செயற்பட்டவர் ரமணன். கிழக்கில் கருணா தரப்பு மீது காத்திரமான நடவடிக்கை எடுக்கவில்லையென்ற குற்றச்சாட்டின் பேரில் ரமேஷ், ரமணன் ஆகியோரோடு கொக்கட்டிச்சோலையைச் சேர்ந்த விசு, துரை, திருமலையைச் சேர்ந்த பதுமன், புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த கீர்த்தி குயிலின்பன், ஜிம்கெலி தாத்தா போன்ற கிழக்குப் புலி முக்கியஸ்தர்கள் வன்னிக்குப் பிரபாகரனால் அழைக்கப்பட்டிருந்தனர்.

கருணா, பிரபாவோடு இணைந்து செயற்பட்ட காலத்தில் கருணாவின் வலக்கரமாக திகழ்ந்த இவர்கள், கருணாவுக்கு ஆதரவாக நடந்து கொண்டார்களென்று வன்னித் தரப்புக் குற்றச்சாட்டியிருந்தது. இவர்களில் ரமேஷைத் தவிர, ஏனைய அனைவருக்கும் இதுவரை என்ன நடந்ததென்று தெரியவில்லை.

ரமேஷ், கடற்புலித் தலைவர் சூசையின் மைத்துனர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. ரமேஷ் விவகாரத்தில் பிரபாகரனுடன் முரண்பட்டுக் கொண்டு, சூசை சிங்கப்பூர் சென்றதும், பின்னர் சிங்கப்பூரில் புலிகள் மேற்கொண்ட சமரசத்தையடுத்து சூசை வன்னிக்குத் திரும்பியதும் குறிப்பிடத்தக்கது. இதனால் ரமேஷின் பதவியிறக்கப்பட்டு, உயிர்ப்பிச்சையும் அளிக்கப்பட்டது. ரமேஷின் அழுத்தத்தின் பேரில் சூசை ஊடாக ரமணன் பாதுகாக்கப்பட்டார். கருணா தரப்பின் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற உத்தரவோடு வன்னியிலிருந்து ரமணன் மீண்டும் மட்டக்களப்புக்கு அனுப்பி வைக்கப்பட்டார். ஆயினும் கருணா தரப்பின் தாக்குதல்கள் அதிகரித்துக் கொண்டே வந்துள்ளன. கருணா தரப்புப் பற்றிச் சரியான புலனாய்வுத் தகவல்களைச் சேகரிக்கவில்லையென்றும், கருணா தரப்புக் குறித்து மெத்தனமாக நடந்து கொள்கிறாரென்றும் ரமணன் மீது குற்றச்சாட்டுகள் தெரிவிக்கப்பட்டனவென்றும் புலி இயக்கத் தரப்புகள் தெரிவிக்கின்றன. இதனால் புலிகளின் மட்டக்களப்பு இராணுவப் பொறுப்பாளர் பானுவுக்கும் இவருக்குமிடையில் முரண்பாடுகள் எழுந்ததாகவும் மட்டக்களப்புத் தலைமையை அழிக்கும் நோக்கில் பிரபாகரனே இக் கொலைக்கு உத்தரவிட்டிருக்கலாமென்றும் தெரியவருகிறது.

தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலைபேசி: -011 4-514282
தொலை நகல் (Fax):-011 4-513266
ஈ-மெயில்: (E-mail):-
murasu@sltnet.lk

# முரசம்

## இந்தியா அல்லது சர்வதேசம் துரிதமாக செயலில் இறங்க வேண்டும்

**அன்புள்ள உங்களுக்கு, வணக்கம்.**

ஆயிரத்துக்கும் அதிகமான இலங்கைத் தமிழர்கள் இந்தியாவுக்கு அகதிகளாக சென்றுவிட்டனர். இன்னும் சென்றுகொண்டிருக்கின்றனர். பெரும் ஆபத்து நிறைந்த கடல் வழிப் பயணத்தில் அகதிகளாக நாட்டை விட்டு ஓடும் அவலம் தொடர்கிறது. அதிலும் கடலில் விபத்துக்கள் காரணமாக இறந்து போனவர்களின் நிலை இன்னும் மோசமாகும். எஞ்சியிருக்கக் கூடிய மக்களையும் யுத்தப் பீதி துரத்திக் கொண்டிருக்கிறது. அரசாங்கமும் - புலிகளும் இன்னும் சமாதான முயற்சிகளில் அக்கறை கொண்டிருப்பதாகக் கூறுகின்றபோதும், இருதரப்பு மோதல்கள் அதிகரிப்பதைத் தடுப்பதாக இல்லை. தவிரவும், சர்வதேசத்தின் விருப்பு வெறுப்புகளைக் கவனத்தில் கொண்டு சமாதானம் பற்றி கருத்துக்கள் வெளியிடப்படுகிறதே தவிர, இதய சுத்தியோடு அதற்காக எந்தத் தரப்பும் நகர்வுகளை மேற்கொள்வதாகத் தெரியவில்லை. இதற்கிடையே புலிகளை ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் தடை செய்யக்கூடிய நிலைமையும் ஏற்பட்டுள்ளது. அநேகமாக இம் மாதத்தின் இறுதிப் பகுதியில் ஜப்பானில் நடைபெறவிருக்கும், இலங்கைக்கு உதவி வழங்கும் இணைத்தலைமை நாடுகளின் கூட்டத்தைத் தொடர்ந்து இலங்கையின் இனப்பிரச்சினை விவகாரத்தில் குறிப்பிடத்தக்க மாற்றம் நிகழும் என எதிர்பார்க்கப்படுகிறது. இல்லையெனில் இந்தியாவைப் போல், சர்வதேச சமூகமும், இலங்கை விவகாரத்தில் கையைச் சுட்டுக் கொண்டதாகவே அமையும். தவிரவும் நோர்வேயின் அபிவிருத்தி அமைச்சர் எரிக் சொல்ஹெய்ம் மற்றும் சமாதானத் தூதுவர் ஹேன்சன் பவர் ஆகியோரின் வருகை பாரிய திருப்பங்களை ஏற்படுத்தாத போதும், சர்வதேச சமூகத்தின் எதிர்பார்ப்புகளை வெளிப்படுத்தும் விதமாக அமையும் என்ற எதிர்பார்ப்பும் நிலவுகின்றது.

எப்படி இருப்பினும் இலங்கையின் இனப் பிரச்சினை விவகாரத்தில் முக்கியமான இருதரப்பான அரசும் - புலிகளும் நெருங்கி வரும் வாய்ப்பு நாளுக்கு நாள் அருகி வரும் நிலையில் - நம்பிக்கை முற்றாக இல்லாது போய்விட்ட ஒரு சூழலில் - பதற்றமான நிலைமையை தனிக்கக் கூடிய ஒரு நிலையை உருவாக்குகின்ற வலிமை புலிகளுக்கோ, அரசுக்கோ இல்லை என்பது நிரூபிக்கப்பட்டு வருகிறது. ஆகவே சர்வதேச சமூகத்தின் அடுத்தகட்ட நடவடிக்கையைப் பொறுத்தே தற்போது நிலவும் பதட்டமான நிலையின் மாற்றங்கள் நிகழக்கூடும் எனலாம்.

இந்த முக்கியமான காலகட்டத்தில் சர்வதேச சமூகம் எத்தகைய பணியை ஆற்றப் போகிறது? நிதி வழங்கும் நாடுகள் நிதியை முடக்குவதாலோ, இருதரப்பும் பேச்சுக்கு வரவேண்டுமென வலியுறுத்துவதாலோ, புலிகளைத் தடை செய்வதாலோ இலங்கையில் இன்னொரு யுத்தத்தைத் தடுக்க முடியாது. இதனையும் தாண்டி சர்வதேச சமூகத்தால் என்ன செய்ய முடியும் என்பதுவே இலங்கையில் சமாதானத்தை விரும்பும் மக்களினது பெருங் கேள்வியாகவுள்ளது.

இந்தியா தன் பிராந்தியத்தின் பாதுகாப்புத் தொடர்பில் கவனமாக இருப்பதாக பீற்றிக் கொண்டாலும் அருகிலேயே பயங்கரவாதம் தலைதூக்குவதை கட்டுப்படுத்தமுடியாத ஊனமான நிலையிலுமுள்ளது என்ற மேற்குலக நாடுகளின் விமர்சனத்தையும் எவரும் மறுக்க முடியாது. அதேபோல் மேற்குலக நாடுகள் - குறிப்பாக அமெரிக்கா பயங்கரவாதத்துக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதாக ஓலமிட்டுக் கொண்டு திரிந்தாலும், இலங்கையில் அமெரிக்கா இனம் கண்ட பயங்கரவாதத்தை ஏன் கண்டு கொள்ளாமல், அதற்கு எதிராக நடவடிக்கை எடுக்காமல், இந்தியாவை சாட்டு சொல்லிக் கொண்டு இருக்கிறது. அது கூட இரட்டை வேடந்தானே என்ற விமர்சனமும் பரவலாக இருந்து வருகிறது.

இலங்கை விவகாரத்தில் இந்தியாதான் வெட்டிச் சரிக்க வேண்டுமென்று யாரும் தப்பித்துக் கொண்டாலும் இந்தியா அர்த்தமற்ற மௌனத்தை அளவுக்கு அதிகமாகக் காத்து வருவது இந்தியாவின் இயலாமையா அல்லது தந்திரமா என்பது தொடர்பில் குழப்பத்தை ஏற்படுத்துகிறது.

இலங்கை தொடர்பில் இந்தியாவின் ஸ்திரமான முடிவு இல்லாமையே மீண்டும் இலங்கையிலிருந்து அகதிகள் இந்தியாவுக்குச் செல்வதற்கும் காரணமான சூழ்நிலையைத் தோற்றுவித்துள்ளது என்பதையும் இந்திய அரசு கவனத்தில் கொண்டு துரிதமாக செயலில் இறங்க வேண்டும் என்பதே எஞ்சியிருக்கும் மக்களின் எதிர்பார்ப்பாகும்.

■ ■

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

*என்றென்றும் அன்புடன்,*
*ஆசிரியர்.*

---

## எக்ஸ்ரே ரிப்போர்ட்

# நான்காவது ஈழப் போரும் சர்வதேச அழுத்தமும்

**இலங்கையில்** ஏற்பட்டுள்ள முறுகல் நிலை மீண்டுமொரு யுத்தத்துக்கு வழிவகுக்கலாமென்றே சர்வதேச மட்டத்திலும் தேசிய மட்டத்திலும் அச்சம் தெரிவிக் கப்படுகிறது. ஐ.நா.செயலாளர் நாயகம் கொபி அனானிலிருந்து ஊர்காவற்றுறை, அல்லைப்பிட்டியிலிருந்து பாதுகாப்புத் தேடி உள்ளூரிலேயே இடம்பெயர்ந்த சின்னக்குட்டி வரை இந்த அச்சத்தையே தெரிவித்துள்ளனர். யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவும் களைத்துப் போய், கடல் வலயக் கண்காணிப்பு வேலையைச் செய்ய முடியாதெனக் கையை விரித்து விட்டது. மட்டுப்படுத்தப்பட்ட யுத்தம் அல்லது மினி யுத்தமொன்று நடைபெற்று வருவதாகச் சண்டையில் சம்பந்தப்பட்ட அரசும் புலிகளும் மட்டுமல்ல, சம்பந்தப்படாத சகல தரப்புகளுமே அச்சம் தெரிவித்துள்ளன. ஆக, முழு அளவிலான மற்றொரு யுத்தம் வெடிக்கலாமென்ற அச்சமே சர்வ மட்டத்திலும் வியாபித்து நிற்கிறது.

முழு அளவிலான யுத்தமொன்று வெடிக்குமென்றால், அது நான்காவது ஈழப் போராக அமையும். ஏற்கனவே அரசாங்கப் படைகளுக்கும் புலிகளுக்குமிடையில் மூன்று யுத்தங்கள் நடைபெற்று முடிந்திருக்கின்றன. இந்த மூன்று யுத்தங்களும் அதனையொட்டிய நிகழ்வுகளும், இதுவரை ஓர் இலட்சத்துக்கு மேற்பட்ட மனித உயிர்களைக் காவு கொண்டுள்ளன. அரசாங்கப் படையினர், புலிகள் அப்பாவிப் பொதுமக்களென முத்தரப்புகளைச் சேர்ந்தவர்களுமே இந்தக் கொடூர யுத்தத்துக்குக் காணிக்கைப் பொருட்களாகி விட்டனர். இதற்கும் மேலதிகமாக இலட்சக் கணக்கானோர், அகதிகளாக வாழ்வோடும் சாவோடும் அல்லாடிக் கொண்டிருக்கின்றனர். நான்காவது ஈழ யுத்தமொன்று வெடிக்குமானால் மனித உயிர்கள் மிஞ்சப் போவதில்லை அவலங்களே மிஞ்சும் என்பதற்கு ஆங்காங்கே அவ்வப்போது இடம்பெற்று வரும் சம்பவங்கள் கட்டியம் கூறுகின்றன.

யுத்தக் கோரத்தின் அண்மைய வடுக்களை அல்லைப்பிட்டி சுமந்து நிற்கிறது. உயிரைப் பாதுகாப்பதற்காக மூட்டை முடிச்சுகளுடன், துன்ப துயரங்களையும் சுமந்து கொண்டு அல்லைப்பிட்டி மக்கள் இடம்பெயர்ந்து செல்லும் காட்சியை ஊடகங்களில் பார்த்தவர்கள், மனம் பதறி நிற்கிறார்கள். அந்த மக்களின் அகதி வாழ்வுக்கு அங்குரார்ப்பணம் நடத்திய வேட்டுகள், இடம்மாறி, திசைமாறி வெவ்வேறு இடங்களில் வெடித்துக் கொண்டிருக்கின்றன. யுத்தம் நிறுத்தப்படவில்லையென்றால் அல்லைப்பிட்டிப் பட்டியலில் பல கிராமங்கள் இணைக்கப்படுவது தவிர்க்க முடியாததாகி விடும்.

ஜே.ஆர்.ஜெயவர்த்தனா, ஆர்.பிரேமதாசா, சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்கா ஆகிய மூன்று இலங்கை ஜனாதிபதிகளோடு புலிகள் பேச்சுவார்த்தை நடத்தியிருக்கிறார்கள். இந்தியாவின் முன்முயற்சியினால், இலங்கை இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண எடுக்கப்பட்ட முதலாவது முயற்சி திம்புப் பேச்சுவார்த்தை. அதனைக் குழப்பியடித்தவர் முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனா. பின்னர் சிங்கப்பூரிலிருந்து புலி முக்கியஸ்தர்கள் 'ஹிந்து' பத்திரிகை இணையாசிரியர் என்.ராம் ஊடாக எடுத்த முயற்சியின் மூலம், இந்திய தரப்பு ஜெயவர்த்தனா அரசுடன் பேசியது. ஜே.ஆருடன் புலிகள் நேரடியாகப் பேசவில்லையென்ற போதிலும், புலிகள் இந்தியாவூடாக இலங்கை அரசுடன் பேசினர். இது இலங்கை - இந்திய ஒப்பந்தத்துக்கும் வழிவகுத்தது. 1987 ஜுலை 29ஆம் திகதி இலங்கை - இந்திய ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டது. புலிகளும் யோகியின் தலைமையில் இரு லொறிகளில் பாவனைக்குதவாத ஆயுதங்களைக் கையளித்து ஒப்பந்தத்துக்கு இணக்கம் தெரிவித்தனர். ஆனால் ஹபரணை பஸ் படுகொலை உட்பட, அப்பாவிச் சிங்கள மக்கள் மீது படுகொலைகளைக் கட்டவிழ்த்துவிட்ட புலிகள் அக்டோபர் மாதமளவில், இந்தியப் படையோடு மோதலை ஆரம்பித்தனர். இதனையே முதலாவது ஈழ யுத்தமென வரலாறு வர்ணிக்கிறது. ஏனெனில், இதற்கு முதல் பல்வேறு தமிழீழ இயக்கங்கள் இலங்கை அரச படைகளுக்கெதிரான போராட்டத்தில் 1983முதல் தொடர்ச்சியாக ஈடுபட்டு வந்திருக்கின்றன. புலிகள் ஒரு தரப்பாகத் தனித்து நின்று நடத்திய முதலாவது யுத்தம், இந்தியப் படைகளுடன்தான் நடத்தப்பட்டது.

பிரேமதாசா, 1989இல் ஜனாதிபதியானதும் அவரோடு கூட்டுச் சேர்ந்து, இந்தியப் படை மீதான தாக்குதலை உக்கிரப்படுத்தி, இந்தியப் படையை வெளியேற்ற உதவியது புலிகள் அமைப்பு. கொழும்புக்கு வந்து பிரேமதாசா அரசோடு ஒன்றரை வருடங்கள் பேச்சுவார்த்தை நடத்திய புலிகள், பிரேமதாசாவுக்கெதிராகத் தமது துப்பாக்கிகளைத் திருப்பி இரண்டாவது ஈழ யுத்தத்துக்கு முதல் வேட்டுகளைத் தீர்த்தனர். இந்த இரண்டாவது ஈழ யுத்தம் 1990இல் ஆரம்பமானது.

1994இல் சந்திரிகா அரசு பதவியேற்றதும் மீண்டும் புலிகள் சந்திரிகா அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தினர். பின்னர் சந்திரிகா அரசின் முகத்தில் காறி உமிழ்ந்து விட்டு, துப்பாக்கிகளை உயர்த்திப் பிடித்தனர். இது மூன்றாவது ஈழ யுத்தத்துக்கு வழிவகுத்தது. இந்த மூன்று யுத்தங்களையும் ஆரம்பித்தவர்கள் புலிகளே. சிங்கள அரசுகள் தமிழ் மக்களின் அபிலாஷைகளை ஏற்றுக்கொள்ள வில்லை என்பதுவே, இவற்றுக்கெல்லாம் அவர்கள் கூறிய காரணம். இன்றும் அவர்கள் கூறும் காரணமும் இதுதான். எந்த அரசும் ஏற்றுக் கொள்ள முடியாத கோரிக்கைகளை முன்வைப்பதும் அப்பாவிச் சிங்கள மக்கள் மீதோ அல்லது ஓய்ந்திருக்கும் படையினர் மீதோ தாக்குதல்களை நடத்தி யுத்தத்துக்கு 'ஆரம்ப பூஜை' செய்வதும் புலிகளின் வரலாறாகி விட்டது. பூநகரி இராணுவ முகாமை அப்புறப்படுத்தக் கோரியும் கிழக்கில் புலிகள் ஆயுதங்களுடன் நடமாட அனுமதி கோரியும் பிரேமதாசாவோடு மோதிக்கொண்டனர். சிங்களத் தலைவர்களோ அல்லது வேறெந்த சக்திகளோ தமிழர்களின் அபிலாஷைகளைத் தங்கத் தட்டுகளில் வைத்துக் கொடுக்க முனைந்தனரென்று நாம் கூறவரவில்லை.

தமிழ் தேசியத்தை இன்னமும் புலிகள் தமது கைகளில் வைத்துக் கொண்டிருக்கிறார்களென்றால், அவர்கள் கட்டவிழ்த்து விட்டிருக்கும் வன்செயல்கள் ஒரு காரணம், ஜனநாயகம், பன்முகத்தன்மைக்குப் புலிகள் இடம்கொடுக்காமை மற்றொரு காரணம். பதவிக்கு வந்த அரசுகள் தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்கக் காத்திரமான நடவடிக்கைகளை எடுக்கத் தயங்கியமை மற்றொரு காரணமென்று ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா ஒரு தடவை குறிப்பிட்டிருந்தார். இது நியாயமான அரசியல் கணிப்பீடு. ஆனால் கிடைத்த சகல சந்தர்ப்பங்களையும் வேண்டுமென்றே தட்டிக் கழித்து விட்டு, தமிழ் மக்களின் சடலங்களுக்கு மேலாகத் தமிழீழம் அமைக்கப் புலிகள் முயற்சிப்பதே தமிழ் மக்களின் துயரங்களுக்கு மூல காரணமாகிறது.

இலங்கை - இந்திய ஒப்பந்தம் தமிழ் மக்களின் அபிலாஷைகள் அனைத்தையும் ஈடேற்றுவதற்கான 'சர்வரோக நிவாரணி' அல்ல. ஆனால் அதனைப் பயன்படுத்திப் படிப்படியாகத் தமிழ் மக்களின் அபிலாஷைகளை ஈடேற்றுவதற்கு அதனையொரு சந்தர்ப்பமாகப் பயன்படுத்தியிருக்க முடியும். இல்லையேல், மாகாண சபை அமைப்பை விடக் கூடுதலாக அதிகாரங்களை வழங்கும் சந்திரிகா அரசின் தீர்வுப் பொதியைப் பயன்படுத்தியிருக்க முடியும். ஆனால் புலிகளின் முகவர்களான தமிழ் எம்.பி.க்களும் ஐ.தே.க.வினரும் இதனைக் குழப்பியடித்தனர்.

இலங்கையின் சிவில் யுத்த வரலாற்றில், என்றுமில்லாதவாறு தற்போது சர்வதேச அழுத்தம் அதிகரித்துள்ளது. இலங்கை அரசு மனித உரிமைகளை பாதுகாக்க வேண்டுமென்று வலியுறுத்தப்பட்டுள்ள போதிலும், 'புலிகள் மீது சர்வதேச சமூகம் நெற்றிக்கண்' பார்வையைத் திருப்பியுள்ளது.

புலிகள் நடத்துவது விடுதலைப் போராட்டமல்ல, பயங்கரவாத யுத்தமேயென்று சர்வதேச சமூகம் வலுவாக நம்புகிறது. அமெரிக்கா, பிரிட்டன், இந்தியா, மலேசியா, கனடா, அவுஸ்திரேலியா ஆகிய நாடுகள் ஏதோ ஒருவகையில் புலிகள் மீது தடைகளை விடுத்துள்ளன. 25 நாடுகளை அங்கத்தவர்களாகக் கொண்டுள்ள ஐரோப்பிய ஒன்றியம், புலிகள் மீது முற்றுமுழுதான தடையை விதிக்க வேண்டுமென்று அமெரிக்க வலியுறுத்தியுள்ளது. இத் தடையை விதிப்பது குறித்து ஐரோப்பிய ஒன்றியப் பாராளுமன்றம் எதிர்வரும் 29ஆம் திகதி முடிவெடுக்கவுள்ளது. சுவீடன், டென்மார்க், பின்லாந்து போன்ற நோர்டிக் நாடுகள் இத் தடைக்கு ஆரம்பத்தில் எதிர்ப்புத் தெரிவித்து வந்தபோதிலும் அவையும் இணக்கத்துக்கு வந்திருப்பதாகத் தெரியவருகிறது. அநேகமாக ஐரோப்பிய ஒன்றியம் முற்றுமுழுதான தடையை விதிக்கலாமென எதிர்பார்க்கப்படுகிறது. இல்லையேல், ஐரோப்பிய நாடுகளிலுள்ள புலிகளின் சொத்துக்கள், நிதி சேகரிப்பு ஆகியன முடக்கப்படும். அத்துடன் வன்செயல்களைக் கைவிட்டு, பேச்சுவார்த்தை மேசைக்குத் திரும்ப காலக்கெடு விதிக்கலாமென்றும் வேறு சில தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஐரோப்பிய யூனியன் முற்றுமுழுதான தடையை விதித்தால், அது பாரிய பின்விளைவுகளை ஏற்படுத்துமென்று அன்ரன் பாலசிங்கம் கூறியுள்ளார். புலிகள் தொடர்ச்சியாக மேற்கொண்டுவந்த வன்செயல் நடவடிக்கைகளே, புலிகள் மீது முற்றுமுழுதான தடையை விதிக்குமளவுக்கு எதிர் விளைவுகளை ஏற்படுத்தியுள்ளது என்பது புலிகளின் 'தத்துவ வித்தகருக்கு'ப் புரியாமல் போனது ஏனோ?

புலிகள் நடத்துகின்ற யுத்தம் நியாயமானதா? இல்லையா? என்பதே அவர்களின் வெற்றி, தோல்வியை நிர்ணயிக்கப் போகும் முதலாவது அளவு கோலாகும்.

புலிகளின் செயற்பாடுகள், பயங்கரவாதமாகச் சர்வதேச சமூகத்தால் முத்திரை குத்தப்பட்டு விட்டது. அவர்கள் எச்சரிக்கை விடுக்கும் அளவுக்குப் புலிகளின் ஜனநாயக விரோத நடவடிக்கைகள் வளர்ச்சி பெற்று வருகின்றன. அரசாங்கத்துக்கு ஆதரவாக இந்தியா, பாகிஸ்தான், சீனா போன்ற அயல்நாடுகளும் தயாராகவுள்ளன. யுத்தப் பாதிப்புகளுக்கு முகங்கொடுக்கும், வடக்கு - கிழக்கு மக்களும் புலிகளின் செயற்பாடுகள் குறித்து அதிருப்தி கொண்டுள்ளனர்.

"பிச்சை வேண்டாம், நாயைப் பிடி" என்ற நிலைக்கு தமிழ் மக்கள் வந்து விட்டனர். எனவே தேசிய, சர்வதேசச் சூழ்நிலைகள் காட்டும், சிவப்புக் கொடியைப் புலிகள் உணர்ந்து கொள்ளத் தவறினால் புதைகுழிகள்தான் மிஞ்சும். போதாக் குறைக்கு, யுத்தம் வெடிக்கும் பட்சத்தில் கிழக்கில் கருணா அணி, உயிர்ப்புப் பெறும். புலிகளே! உங்கள் சொந்தப் புதைகுழிகளை நீங்களே தோண்டாதீர்கள். அப்பாவித் தமிழ்மக்கள் மீது இனிமேலாவது கொஞ்சநஞ்ச அபிமானம் இருக்குமென்றால், உங்கள் நான்காவது ஈழப்போரை சமாதான மேசைக்குத் திருப்புங்கள். ■

நரன்

## வன்னியும் 'வோட்டர்லூ'வும்

**பிரான்ஸ் பேரரசன் நெப்போலியன் பொனபார்ட், தனது இறுதித் தோல்வியை தழுவிய யுத்தகளமே 'வோட்டர்லூ'வென அழைக்கப்படுகிறது. டியூக் ஒப் வெலிங்டன் தலைமையிலான படைகள் பிரஸ்ஸியப் படைகளுடன் இணைந்து நடத்திய தாக்குதலில் நெப்போலியன் இறுதியாகத் தோற்கடிக்கப்பட்டான். களத்தில் சண்டையிட்ட இங்கிலாந்துப் படைகள் தண்ணீர் கேட்டு Water, Water என்று கத்தியதாகவும் பிரெஞ்சுப் படைகள் தண்ணீர் கேட்டு Loo, Loo என்று கத்தியதாகவும் அந்தளவுக்குச் சமர் கொடுமையாக இருந்ததாகவும் கூறப்படுகிறது. இதுவே Water loo 'வோட்டர் லூ' ஆகியது எனவும் தெரிவிக்கப்படுகிறது.**

## ஊரிலிருந்து....



யாழ்ப்பாணத்தில பிரபல வர்த்தகர் ஒருவர் வவுனியாவிற்கு போறதுக்கு எண்டு யாழ் - கொழும்பு விமான சேவையில டிக்கட் பதிய நிண்டார். A9 ரோட்டு போக்குவரத்து நடக்கையில உதில இருக்கிற வவுனியாவிற்கு ஏன் தலையைச் சுத்தி மூக்கைத் தொடுகிறமாதிரி கொழும்பு போய் சுத்திறியள் எண்டு கேட்டன். யாழ்ப்பாணத்தில நிண்ட வருவாய்த் துறையினர் ஆமிக்காரன் இப்ப எடுக்கிற அதிரடி நடவடிக் கையால துண்டக்காணம் துணியைக் காணம் எண்டு ஓடிப்போய் முகமாலையில கூடாரம் அடிச்சிருக்கீனமாம். பாஸ் எடுக்கப்போற வியாபாரிமார் அவையளிட்டையும் கிளியரன்ஸ் எடுத்தாத்தான் பயணத்தை தொடரலாம். ஏன் வீண் சோலி எண்டுபோட்டு பிளேனிலேயே போய்ட்டு வாறன் எண்டார்.

அப்படியோ சங்கதி?

## தமிழ் மக்களின் கவனத்துக்கு!

* பெரிய பிரித்தானியாவைப் போல, ஒற்றையாட்சியின் கீழ் அதிகாரப் பரவலாக்கல்.

* இந்தியா, சுவிற்சர்லாந்து, பெல்ஜியம் போல சமஷ்டித் தீர்வின் கீழ் அதிகாரப் பகிர்வு.

* ஹொங்கொங்கும் சீனாவும் போல, அல்லது வளர்ச்சி பெற்றுவரும் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளைப் போல, நாடுகளின் சம்மேளனம்.

இன, மதப் பிரச்சினைகளுக்கான உயிர்த்துடிப்பு மிக்க தீர்வாக இம் முறைகளையே அரசியல் ஆய்வாளர்கள் முன்வைக்கின்றனர். நூறு வருடங்களாகப் பிரிட்டிஷ் ஆட்சியின் கீழிருந்த ஹொங்கொங்கும் 57 வருடங்களாக சோஷலிஸ ஆட்சியிலிருக்கும் மக்கள் சீனமும் ஒரே அமைப்புக்குள் கொண்டுவரப் பயன்படுத்தப்பட்டதே நாடுகளின் சம்மேளனம். இந்த இரண்டுமே இரு வேறுபட்ட சமூக, பொருளாதார, அரசியல், கலாசாரத் தன்மைகள் கொண்டவை. புலிகள் கோருவது தனிநாடென்றால் அது கடைசி வரைக்கும் சாத்தியப்படாது.

* ஐக்கிய நாடுகள் சபையில் 191 நாடுகள் அங்கம் வகிக்கின்றன. அங்கம் வகிக்காத நாடுகளும் உண்டு. உலக நாடுகளில் நான்கு சதவீதமானவை மட்டுமே ஒரே இன, மொழி, கலாசாரத்தைக் கொண்ட நாடுகளாகும். தற்போது 76 நாடுகளில் சிவில் யுத்தம் நடைபெறுவதாகவும் கணக்கிடப்பட்டுள்ளது.

* ஸ்பெயினில் பாஸ்க் பிரிவினைகோரி போராட்டம் நடத்தி வந்த, ஈ.ரி.ஏ. பிரிவினைவாதிகள் அண்மையில் தமது பிரிவினை யுத்தத்தைக் கைவிடத் தீர்மானித்துள்ளனர்.

தமிழ் மக்களே! சிந்தியுங்கள்!

புலிகள் நடத்துவது விடுதலைப் போரா? அல்லது சரியான நோக்கமற்ற பயங்கரவாத யுத்தமா?

# புலிகளின் எச்சரிக்கையால் கதிகலங்கும் கண்காணிப்புக் குழு

**போர்** நிறுத்தத்தை அவதானிக்க வருகை தந்த கண்காணிப்புக் குழுவினர் இப்போது போரை அவதானித்துக் கொண்டிருக்கின்றனர். எனினும் போர் நிறுத்தத்தை அவதானித்த அளவில் போர் ஒன்றை அவதானிக்க முடியாது என்பதை யதார்த்தம் உணர்த்தியுள்ளது. நாட்டு மக்கள் கண்காணிப்புக் குழுவின் நடுநிலை தொடர்பில் எப்போதோ நம்பிக்கை இழந்துவிட்டிருந்த நிலையில் இப்போது அரச தரப்பும், புலிகளும் கூட கண்காணிப்புக் குழுவின் மீதான நம்பிக்கையை இழந்துள்ளனர். ஒப்பந்தத்தில் இருதரப்பும் ஏற்றுக்கொண்ட விடயங்களைக் கூட வலியுறுத்திக் கூற முடியாத கையறு நிலையிலிருக்கும் கண்காணிப்புக் குழுவை எந்தத் தரப்பும் மதித்து நடக்'காத நிலையும் தோன்றியுள்ளது. இதில் அரச தரப்பு, வெளிநாடுகளின் அழுத்தம் காரணமாக வரம்புகளை மீறாமல் இருந்தாலும் புலிகளுக்கு அந்தப் பிரச்சினையில்லை. ஆகையால் அவர்கள் வெளிப்படையாக தமது நிலைப்பாட்டை கூறியிருக்கிறார்கள். தமது கட்டுப்பாட்டுப் பகுதியில் இருக்கும் கடல் வலயம், தமது கட்டுப்பாட்டுக்குள் இருப்பதாகவும், அதை யாரும் தடுக்க முற்பட்டால் தாக்கப்படுவார்கள் என்றும், அது தவிரவும், கடற்படையினரின் படகுகளில் கண்காணிப்புக் குழுவினர் பயணிக்கக் கூடாது என்றும், அப்படி பயணித்தால் தமது தாக்குதலுக்கு இலக்காக வேண்டிய நிலை ஏற்படும் என்றும் கூறியநிலையில், கண்காணிப்பாளர்கள், புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்படி புலிகளுக்கு கடல் வலயத்தில் உரிமை இல்லை என்றும், அவ்வாறு நடமாடினால் அது ஒப்பந்த மீறல் என்றும் தெரிவித்த போதும், புலிகள் அதை நிராகரித்துவிட்டனர். புலிகளின் இந்த நிராகரிப்பையும் எச்சரிக்கையையும் கண்டு கண்காணிப்புக் குழுவினர் உண்மையில் ஆடிப்போய் விட்டனர். வெற்றிலைக்கேணி, மூதூர், நெடுந்தீவு ஆகிய இடங்களில் படையினரின் படகுகளில் கண்காணிப்பாளர்கள் இருந்தபோது புலிகள் தாக்குதல் நடத்தியது அதற்குக் காரணமாக இருக்கலாம். இப்போதோ கண்காணிப்பாளர்களை மீறியும் நடந்துவரும் தாக்குதல் சம்பவங்களைக் கண்டு என்ன செய்வது என்று தெரியாமல் இருக்கும் கண்காணிப்பாளர்கள், தமது கண்காணிப்புப் பணி தொடர்பில் புதிய புதிய நடைமுறை ஒன்றை செயற்படுத்தவுள்ளதாகவும், அது பற்றி அரச தரப்புக்கும், புலிகளுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளதாகவும், இருதரப்பு ஆலோசனைகளும்

**கண்காணிப்பாளர்கள் நாட்டை விட்டுப் போகப் போவதில்லை என்றும் தாம் போய்விட்டால் சமாதானத்துக்கான பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்படுவதற்கு எவ்விதத் தளமும் இல்லாமல் போய் விடும் என்றும் தெரிவித்துள்ளனர். ஒரு வகையில் இக் கூற்று ஏற்றுக்கொள்ளக்கூடியது என்றாலும் வெறுமெனவே தளமொன்றுக்காகப் படுகொலைகள் தொடரவும், தாக்குதல்கள் நடக்கவும் பார்த்துக் கொண்டிருக்கப்போகிறார்களா? என்ற கேள்வியும் எழுகிறது.**

வந்தபின்னர் அது நடைமுறைக்குக் கொண்டுவரப்படுவது பற்றி சிந்திக்கப் போவதாகவும் அறிவித்துள்ளனர். அதேவேளை கண்காணிப்பாளர்கள் நாட்டை விட்டுப் போகப் போவதில்லை என்றும் தாம் போய்விட்டால் சமாதானத்துக்கான பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்படுவதற்கு எவ்விதத் தளமும் இல்லாமல் போய் விடும் என்றும் தெரிவித்துள்ளனர். ஒரு வகையில் இக் கூற்று ஏற்றுக்கொள்ளக்கூடியது என்றாலும் வெறுமெனவே தளமொன்றுக்காகப் படுகொலைகள் தொடரவும், தாக்குதல்கள் நடக்கவும் பார்த்துக் கொண்டிருக்கப்போகிறார்களா? என்ற கேள்வியும் எழுகிறது.

சமாதானத்துக்கான சாதகமான நிலைமை ஆபத்துக் கட்டத்தை அடைந்துவிட்டதையும், கண்காணிப்பாளர்கள் முடக்கப்பட்டுவிட்டதையும், புலிகளின் ஆத்திரமூட்டும் செயற்பாடுகளையும் சர்வதேச சமூகம் மிக உன்னிப்பாக அவதானித்து வருவதையும் உணர்ந்து கொள்ளமுடிகிறது. ஆகையால்தான் அமெரிக்காவின் நடவடிக்கைகள் இப்போது புலிகள் தொடர்பில் திரும்பி வருவதையும், ஐரோப்பிய ஒன்றிய நாடுகளில் புலிகளைத் தடை செய்ய எடுக்கப்பட்டு வரும் தீர்மானங்களையும் கருத இடமுண்டு. அமெரிக்காவைப் பொறுத்தவரை ஐரோப்பிய ஒன்றிய நாடுகளில் புலிகளைத் தடை செய்வதோடு தனது பயங்கர வாதத்துக்கு எதிரான நடவடிக்கையை நிறுத்திக் கொள்ளும் என்று எதிர்பார்க்க முடியாது. தொடராகப் பல விதமான நெருக்கடிகளை ஏற்படுத்தக்கூடும். புலிகளுக்கு எதிரான அமெரிக்காவின் முன்னெடுப்புக்களை இந்தியா பெரியளவில் விரும்பாவிட்டாலும், பிராந்தியத்தின் பாதுகாப்பை உறுதி செய்து கொண்டு கசப்பான மருந்தை இந்தியா குடிக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது.

புலிகள் தொடர்பாக இந்தியா நடவடிக்கை எடுத்தால், தமிழர்களுக்கு எதிராக இந்தியா நடந்து கொள்கிறது என்ற குற்றச்சாட்டு எழுவதோடு, தமிழக மக்களினதும், இலங்கை மக்களினதும் அதிருப்தியையும் தூண்டிவிடும். ஆகவே இன்னொரு நாட்டின் தலையீடு பயங்கரவாதத்துக்கு எதிரான நடவடிக்கையை மேற்கொள்ள வாய்ப்பை வழங்கினாலும், இனப்பிரச்சினைக்கான தீர்வு இந்தியாவின் பிரசன்னத்தோடையே காணப்படும் என்பதை இந்தியா உறுதிப்படுத்தும்.

ஐரோப்பிய ஒன்றியத் தடையும் அமுலுக்கு வருமானால், புலிகளின் விடுதலைக்கான போராட்டம் என்ற பொய்மை சர்வதேசத்துக்கு முன்னால் முற்றாக நிராகரிக்கப்படுவதோடு பயங்கரவாதச் செயற்பாடு என்ற முத்திரை குத்தப்படும். அதற்குப் பிறகு இலங்கையில் தமிழ் மக்கள் பயங்கரவாதப் போராட்டத்தை நடத்தியதாகவும், அது சர்வதேச சமூகத்தின் அழுத்தத்தைத் தொடர்ந்து முடிவுக்குக் கொண்டு வரப்பட்டதாகவும் வரலாறு பதிவு செய்து வைத்திருக்கும். அப்போது தமிழ் மக்களின் உரிமைகளுக்கும், கௌரவமான தீர்வுக்கும் எதிரானவர்களாகப் புலிகள் ஆளாக வேண்டியிருக்கும் இந்த நெருக்கடி மிகுந்த சவாலை புலிகள் எவ்வாறு எதிர்கொள்ளப் போகிறார்கள். சக அமைப்புக்களையும், தமிழ் தலைவர்களையும் துரோகிகள் என்று சுட்டிக்காட்டி சுட்டுக் கொன்ற புலிகளின் தமிழ் தேசியத் துரோகம் தமிழ் மக்களிடம் என்னவிதமான அலையை உண்டு பண்ணப்போகிறது? என்பதையும் புலிகள் நிச்சயம் எண்ணிப்பார்க்க வேண்டும்.

இவ்வாறு புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் வாழும் தமிழ் மக்கள் அச்சமின்றி கேள்வி எழுப்புகிறார்கள். இதே கேள்விகள் நாட்டில் இருக்கும் மக்கள் மத்தியில் இருக்கின்ற போதும் வாய் திறந்து பேசுகின்ற உரிமை மறுக்கப்பட்டு வாழ்வதாக இந்தியாவுக்குப் புலம் பெயர்ந்த மக்கள் அங்கு வழங்கியிருக்கும் தமது வாக்குமூலத்தில் மிகத் தெளிவாக தெரிவித்துள்ளனர். தவிரவும், மிக விரைவில் பாரிய யுத்தமொன்று நடைபெறப் போவதாகவும், அதிலிருந்து உயிர் தப்பிக்க வேண்டுமாக இருந்தால் தமது கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குள் வரவேண்டும் என்றும் இல்லையெனில் இந்தியாவுக்குச் சென்று விடுமாறும் புலிகள் வற்புறுத்துவதாகவும் தெரிவித்துள்ளனர். அவ்வாறு இந்தியாவுக்குப் போக வேண்டுமாக இருந்தால் ஒருவருக்குத் தலா பத்தாயிரம் ரூபா வீதம் தமக்குத் தரும்படியும் கூறி புலிகள் அறவிட்டு வருவதாகவும் மக்கள் கூறியுள்ளனர்.

இச் சம்பவமும் மக்களின் வாக்குமூலமும் 1992ஆம் ஆண்டு ஞாபகத்தைத் தருகிறது. அப்போதும் மூன்றாம் ஈழப்போர் ஆரம்பிக்கப்பட்ட அந்த காலப்பகுதியில் வன்னிக்கு வருவதாகவோ அல்லது இந்தியாவுக்குப் போவதாகவோ இருந்தால் குறைந்த பட்சம் ஒரு பவுண் தங்கம் தரவேண்டும் எனப் புலிகள் அறவிட்டனர் என்பதையும் மக்கள் நினைவு கூருகின்றனர். இதுவரை திருகோணமலையிலிருந்து புலம் பெயர்ந்து அல்லது இடம் பெயர்ந்து 1700க்கும் அதிகமான குடும்பங்கள் தமது சொந்த வாழ்விடங்களை விட்டுப் போய்விட்டன. அதேபோல் தீவகத்திலிருந்தும் யாழ். மாவட்டத்திலிருந்தும் கணிசமான குடும்பங்கள் தமது இருப்பிடங்களை விட்டுச் சென்றுள்ளன. மக்களின் இந்த இடப்பெயர்வையும், நேரடியாகவே இருதரப்பும் நடத்திவரும் தாக்குதல்களையும் கவனித்தால் இன்னொரு போர் ஆரம்பித்துவிட்டதன் அறிகுறியாகவே கருதலாம்.

இந்தக் கள நிலைமையை மிகவும் தெளிவாகப் புரிந்துகொண்ட கண்காணிப்புக் குழுவினர், மீண்டுமொரு பேச்சுக்கான தளத்தை தாம் தக்க வைத்திருப்பதாகத் தெரிவிப்பது

அலசுவது
- மதியூகி -

வேடிக்கையானதாகவேயுள்ளது. உண்மையில் கட்டுக்கடங்காது சென்றுவிட்ட சமாதானப் பேச்சுக்கான சூழல் நிச்சயமாக ஜெனிவா பேச்சின் தொடர்ச்சியாக இடம்பெறப்போவதில்லை. அது பழைய கதையாகிவிட்டது. இனிமேல் சமாதானப் பேச்சு என்பது இருதரப்பு நம்பிக்கையின் அடிப்படையில் ஆரம்பிக்க வாய்ப்பு அற்றுவிட்ட நிலையில், புதிய தளத்தில் புதிய அழுத்தத்துக்கு மத்தியில் புதிய திட்டத்தின் அடிப்படையிலேயே நடைபெற முடியும். அது கூட மிகவும் சிரமமான காரியமாகி வருவதையே நாட்டு நிலைமையின் போக்கு மேலும் மேலும் உணர்த்தி வருகிறது.

ஆகவே, கண்காணிப்புக் குழுவின் பணியானது சர்வதேச சமூகத்தின் நேரடித் தலையீட்டை இலங்கை மீது திருப்புவதே தவிர, ஒன்றுக்கும் உதவாத தளத்தை பாதுகாப்பதல்ல.

# அதிரடி அய்யாத்துரை



**அல்லைப்பிட்டியில** நடந்த படுகொலைகளுக்குப் பிறகு சனம் சாரை சாரையா இடம் பெயருதுகள் எண்டு நியூஸ் காட்டுத்தீ மாதிரி பரவிக் கொண்டிருக்குது. இடையில இவர் கூத்தமைப்பு எம்.பி.ரவியானராயரும் நிண்டு விலாசம் காட்டிக் கொண்டு ஏதோ ஏஜென்சி வேலைசெய்யுமாப் போலை சனத்தை வன்னிக்குள்ள அனுப்பிக் கொண்டிருக்கிறார். அதுவும் போற சனத்துக்கு தங்கட சாமான்களைக் கொண்டு போறதுக்கு அரசாங்க அதிபரைப் புடிச்சி பாஸும் எடுத்துக் குடுக்கிறாராம். சனத்தை உப்பிடி அங்காலை அனுப்புற வேலை ரொம்ப நேர்த்தியா நடக்குதே எண்டு வாத்தியாரைக் கேட்டதுக்கு என்ன சொல்லுறார் தெரியுமோ?

என்ன நோக்கத்தில அல்லைப்பிட்டியில படு கொலைகள் நடந்திருக்குமெண்டு தான் சந்தேகப் பட்டேனோ அது ஒழுங்கா நடந்துகொண்டிருக்கு. மொத்தத்தில அவை போட்ட திட்டம் நூறு வீதம் சக்ஸஸ் ஆயிட்டுது எண்டு எதையோ விக்கி விழுங்கிக் கொண்டு சொல்லுமாப்போலை வாத்தியார் சொல்லுறதைப் பாத்தால், அல்லைப்பிட்டி சம்பவத்தில பாவம் ஒரு பக்கமும், பழி ஒரு பக்கமுமாகப் போட்டுது எண்டது மட்டும் தெரியுது. ம்...சனத்தை வன்னிக்கு கிளப்புறதுக்குப் பதின்மூன்று பேரின்ர உயிர் விலையாக்கப்பட்டிருக்கு எண்டு வாத்தியார் பெருமூச்சு விடுறாருங்கோ...

**திருவாணமலையில** இருந்துதான் அதிகமான சனங்கள் அண்டை நாட்டுக்குப் போகினமாம். சாமான் சக்கட்டுக்களை அரை விலைக்கு வித்துப் போட்டு நகையாகவோ, பணமாகவோ குடுத்தால் அவையை கடல் வழியாகவே கூட்டிக் கொண்டு போய் விடுறம் எண்டு ரெண்டெழுத்தார் சொல்லினமாம். அதிலையும் அரை விலைக்கு, முக்கால் விலைக்கு விக்கிற பொருளை வேண்டக்கூட சனம் இல்லையாம் எண்டதுதான் பெரும் கொடுமையாக இருக்குதாம்.

சரி, தமிழ்ச் சனம் உப்பிடி ஓடுதுகளே அங்க இருக்கிற சிங்கள, முஸ்லிம் சனம் என்ன செய்யினம் எண்டு கேட்டால், அவை தங்கட தங்கட இடத்தில இருக்கினமாம் எண்டாலும் அவைக்கும் கொஞ்சம் பயமும் இருக்குதாம். என்ன விசேஷம் எண்டால் அவையை யாரும் துவக்கோடை நிண்டுகொண்டு சண்டை வரப் போகுது, சண்டை வரப்போகுதெண்டு வற்புறுத்தின மில்லையாம். முல்லைத்தீவுக்கு கடலாலை போய், அண்டை நாட்டுக்குக் கொண்டு போய் விடுறம் எண்டு விரட்டினமில்லையாம். பாவம் தமிழ்ச் சனத்தை இடம் பெயரச் செய்யிறதெண்டே கங்கணம் கட்டிக் கொண்டு ஒரு கூட்டம் இரவிரவா பயமுறுத்துதாம். ஆமிக்காரன் வருவான். பிடிப்பான்; தலை வேறையா முண்டம் வேறையா வெட்டிப் போடுவான் எண்டு ஓடாத சனத்தையும் உசுப்பேத்தினமாம். என்ன செய்யிறது? தேசியம் துரத்தேக்க ஓடத்தானே வேணும்.

**நடந்து** முடிஞ்சு போன தலை நகரத்தின்ர மாநகர சபை தேர்தலில போட்டியிட முடியாமப் போன யானைக் கட்சிக்காரரிட்ட இருந்து முதல் தடவையா அதிகாரத்தைப் பறிச்சுப் போடலாமெண்டு ஆளுந்தரப்பார் ரொம்பவும் பேராசை பட்டிருந்திருக்கினம். யானைச் சின்னம் இல்லாட்டில் சனம் குழம்பிப் போடும் எண்டதுதான் அவையின்ர கணக்காம். அந்தக் கணக்கையே தலைகீழா மாத்திப் போட்டினம் யானைக் கட்சிக்காரர். மூக்குக் கண்ணாடியில கேட்டாலும் பின்னாடி இருக்கிறது யானைச் சின்னக்காரர்தான் எண்டு அவை முன்னாடியே ஒழுங்கா பிரசாரம் செய்திருக்கினம் எண்டதை முன்னாடியே புரிஞ்சு கொள்ளாததாலதான் பின்னாடி வருத்தப்பட்டிச்சினமாம் எண்டு உந்தத் தேர்தலையும் முடிவுகளையும் பத்தி கிரேசி மோகன் சினிமாக் கதை எழுதின மாதிரி மூக்குக் கண்ணாடிக்கு வாக்குப் போட்டவை சொல்லிச் சிரிக்கினமாம்.

இன்னொரு தரப்பார் என்ன சொல்லினம் தெரியுமோ? வாசியான நாணயக்காரரும் முன்னாள் அதிகார அம்மணியின்ர தம்பியாரும் எந்தப் பக்கம் இருக்கினமோ அந்தப் பக்கம் வெற்றியெண்டது இழுத்துக் கொண்டு இப்பவோ, பிறகோ எண்டுதான் சீவனைப் பிடிச்சுக் கொண்டு கிடக்குமாம். என்ன ஆகியிருந்தாலும் சுதந்திரம் கிடைச்சதில இருந்து தலைநகரின்ர அதி காரத்தை தங்கட பக்கம் தக்க வச்சிக் கொண்டிருக்கும் யானைக் கட்சியின்ர பலம் பலமானது தான் எண்டதை மீண்டும் ஒரு தடவை நிரூபிச்சிருக்கினம். அதுக்காக ஒரு சபாஷ் போடலாம். விரும்புறவை கூடவே ஒரு ஓ..வும் போடலாம். மக்களின்ர தீர்ப்பை ஏற்றுக் கொள்ளுறவைக்கு எப்பவும் வெற்றிதானுங்கோ.

**உயர்தரப்** பரீட்சைகள் ஆரம்பமாகியுள்ள நிலையில் திருவாணமலையில் இருக்கும் மாணவர்கள் அநேக மானவர்கள் பரீட்சை எழுத முடியாமல் இருக்கினம் எண்டு சொல்லினம். பாவம் அந்தப் பிள்ளைகள். ஒழுங்கா ஒரு இடத்தில இருந்து படிக்கவும் இயலாமல், இடப்பெயர்வுகள் காரணமாகவும் அந்த மாணவர்கள் பரீட்சையை எழுதாமல் விட்டிட்டினமாம். அவையின்ர நிலைமையை கவனத்தில எடுத்து அதிகாரத் தரப்பு ஏதுவான இன்னொரு திட்டத்தை அறிவிக்க வேணு மெண்டும் பெற்றோர் எதிர்பார்க்கினமாம். பரீட்சைக்குத் தோற்றியிருக்கிற பிள்ளைகளிலையும் எத்தினைபேர் பாஸ் பண்ணுவினமோ எண்ட சந்தேகமும் பெற்றோருக்கு இருக்குதாம். ஆள் சேக்கிறவைக்கு வேணுமெண்டால் பிள்ளையளின்ர படிப்புக் கெட்டுப்போறது சந்தோசமாக இருக்கும். பெத்ததுகளுக்கு வேதனையாகத் தானேங்கோ இருக்கும் எண்டினம் ஊர் பெருசுகள். என்னங்கோ அவை சொல்றதும் நியாயந்தானே? ஆகையாலை சம்பந்தப் பட்டவை அதிகாரத் தரப்பாருக்கு அழுத்தம் குடுங்கோ. பாதிக்கப்பட்ட பிள்ளையளுக்கு உதவியா இருக்கட்டும் புரியுதோ.

**தலை** நகரில நடந்த எலக்ஷனில ரெண்டு பெரும் கட்சிகளும் வெண்டிச்சினமோ, தோத்துச்சினமோ எண்டதுக்கு முன்னாலயே எங்கட தமிழ் தரப்பு ஆக்களின்ர போட்டி தானுங்கோ பெரிய முஸ்பாத்தியா இருந்துச்சுது. மலையகத்தில முன்னணி நடத்திறவரும், மேலகத்தில முன்னணி நடத்திறவரும், தங்களுக்குள்ள கடும்போட்டி போட்டிச்சினம். அவையளுக்கு நானும் சளைச்சவனில்லை எண்ட கணக்கா தோசைக் கடை அக்காச்சி உட்பட தன்ர அவை இவை எண்டு பிடிச்சி போட்டிபோட வச்சு மண்ணெண்ணையாரும் தனக்கும் தலைநகரில பலமும், பவரும் இருக்கெண்டதை காட்டிப் போட்டாருங்கோ. மண்ணெண்ணையார் தன்ர ஆக்கள் நாலுபேரை போடுற அளவுக்கு அவருக்கு கட்சிக்குள்ள இடம் இருக்குதோ எண்டு கேட்டதுக்கு அப்புடி ஒண்டுமில்லையுங்கோ. யார் குத்தியெண்டாலும் அரிசியானால் சரிதான் எண்டுதானாம் அவர் சிபாரிசு பண்ணினவையை லிஸ்டில போட்டிச்சினமாம். பாத்தியளோ, கட்சியின்ர வீக் பொயிண்டை சரியா கண்டு புடிச்சி அதில தன்ர படத்தை எப்புடி ஒட்டிப் போட்டார் எங்கட மண்ணெண்ணையார். உவரோடை ஒப்பிட்டால் மண் வெட்டித்தலையரும், கேக்காத கணேசனாரும் மூடிக்க மூக்கை விட்டு மூச்சுப் புடிக்க வேணுமோ இல்லையோ எண்டு சனம் கேக்குதுங்கோ.

**பிள்ளைகளை** பள்ளிக் கூடங்களில சேர்க்கிறதில பெற்றோர்கள் படாத பாடெல்லாம் படுகினமுங்கோ. டொனேசன் எண்டினம், சிபாரிசு எண்டினம், உதவி எண்டினம், உதுக்கெல்லாம் ஒரு படி மேல போய் லஞ்சமும் கொடுக்கும் படியாக கல்லூரிகளில பிள்ளைகளுக்கு இடம் கிடைக்கிறது குதிரைக் கொம்புக் கதையாகிக் கொண்டிருக்கு. உப்பிடி இலஞ்சம் கொடுத்த பெற்றோர்கள் பதின்மூன்று பேருக்கு எதிரான வழக்கு தொடுக்கப்பட்டு தலா 2500ரூபா கட்டுங்கோ எண்டு தண்டப்பணம் கட்டச் சொல்லிச்சினமாம்.

பிடிபட்டவை 13 பேர். இன்னும் பிடிபடாமல் எத்தினை பேர் இருக்கினம்? உந்தச் சம்பவம் நடந்தது தலைநகரில இருக்கிற பேர்போன கல்லூரியான ஆனந்தமான கல்லூரியில தான். அது சரி, கல்விக்காக கையூட்டல் வாங்கக்கூடாதெண்டதும், கொடுக்கக் கூடாதெண்டதும் சரிதான். ஆனால் உந்தக் கல்லூரியில மட்டுமே உது நடக்குது? இல்லையே. அந்தஸ்தில இருக்கிற கல்லூரிகளில எல்லாமே உது ஒரு சம்பிரதாயம் மாதிரி நடக்குது. நடந்து கொண்டுதான் இருக்குது. விசாரிக்கிறவை உங்கட பணியை இன்னும் விரிவாக்குங்கோ எண்டு நான் சொல்லயில்லையுங்கோ குருவியார் சொல்லுறார்.

# கடிதம்

**அன்புள்ள** பெரியம்மாவுக்கு....

நான் முதலில் எழுதிய கடிதத்தின் ஆரம்ப வரிகள் இப்படித்தான். கடிதம் எழுதுகின்ற அளவுக்கு நான் துணிந்த அந்த நாட்களில் அப்பா சொல்லச் சொல்ல நான் கடிதம் எழுதினேன். இறுதியில் என் கடிதத்தைப் பார்த்துவிட்டு அப்பா சிரிப்புத் தாங்க முடியாமல் அம்மாவிடம் சொல்லிச் சொல்லி சிரித்தபோது நானும் சேர்ந்து சிரித்தேன். அவர்களோடு சேர்ந்து சிரித்தபோது, தவறு வேறு யாரோ செய்துவிட்டது போலவும், நாங்கள் அதற்காகச் சிரித்துக் கொண்டிருப்பது போலவும் எனக்கு ஆனந்தமாக இருந்தது.

பின்னாளில் அப்பாவுக்கு லீவுக் கடிதம் எழுதுவது மட்டும்தான் எனக்கு பிரத்தியேகமான வேலையாக இருந்தது. அந்நாளில் கடிதங்கள் பற்றிய தாற்பரியங்கள் தெரியவில்லை. அயலவர்களுக்குக் கடிதம் வந்தாலும் அதை நானே வாங்கிக் கொண்டுபோய் உரியவர்களிடம் கொடுத்துவிடுவேன். எங்களை சுகம் விசாரித்து எப்போதாவது மூன்று மாதம் நான்கு மாதம் கழித்துத்தான் ஒரு கடிதம் வரும். அதுவும் மட்டக்களப்பிலிருந்து பெரியப்பா வீட்டார் எழுதும் கடிதம். இந்தக் கடிதம் வருவதில் அம்மாவுக்கு மட்டும்தான் சந்தோசம். சில வேளைகளில் கல்யாணப் பத்திரிகைகள் வந்துசேரும்.

எங்கள் ஊரில் அப்போது பத்தாம் வகுப்பு வரை படித்தது எங்கள் மாமா மட்டும்தான். அதனால் ஊருக்குள் முக்கியமான அலுவலகக் கடிதங்கள் அல்லது முக்கிய நபர்களுக்கு எழுதும் கடிதங்களை எங்கள் மாமாவிடம் சொல்லித்தான் எழுதுவார்கள். அப்படியொரு பொழுதில் மாமா கடிதம் எழுதும்போது அருகில் இருந்து அவர் எழுதுகின்ற அந்த ஸ்டைலைப் பார்த்து ரசித்துக் கொண்டே இருந்தேன். வெள்ளைத் தாளில் நேர்த்தியாகவும் நேராகவும் மாமாவின் கையிலுள்ள பேனாமுனை எவ்வளவு வேகமாக எழுதிக் கொண்டிருந்தது என்பதை எப்படி விபரிப்பது? அவரின் எழுத்து இரசிக்கக்கூடியது. அதிலும் ஒற்றைக்கொம்பு, ரெட்டைக் கொம்பு வினாக்களுக்கு வரும் சுழிக்கொம்பு என்பவற்றைப் பெரிதாகவும் ஏனைய எழுத்துக்களை ஒரு சங்கிலித் தொடர்போலவும் அவர் எழுத எழுத பார்த்துக் கொண்டிருப்பதே ஒரு சுகம்.

அவரைப்போல் வெள்ளைத் தாளில் எழுத நான் எடுத்துக் கொண்ட முயற்சிகளின் போதெல்லாம் மேற்கே ஆரம்பிக்கும் என் எழுத்தின் முதல் வரியே தெற்காகவோ, வடக்காகவோ போகும். சிலவேளைகளில் பென்சிலால் மெல்லிய கோடுபோட்டு அதன் துணையோடு நேராக எழுத முயற்சித்து அநேகமான பொழுதுகளில் தோற்றுப்போயிருக்கிறேன். அதைவிடக் கோடுபோட்ட தாளில் எழுதிவிடலாமே என்று நினைத்துக் கொள்வேன்.

பின்னாளில் நண்பிக்கு நண்பர்களுக்கு என்று கடிதம் எழுதும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொண்டேன். என்ன நடந்ததோ, என் நண்பர்கள் யாரும் எனக்குப் பதில் அனுப்பவில்லை. அப்படி தொடர்பு விட்டுப் போனவர்களோடு இன்று வரை கூட தொடர்பு இல்லாமலே போயிற்று. ஆனால் என் எழுத்துக்களை மதித்து பதில் போட்ட ஒரே ஒரு நண்பி மட்டும் தொடர்ந்தும் பதில் எழுதிக் கொண்டே இருந்தாள். ஆனால் ஒரே மாதிரியாக ஒரே நபருக்கு எழுதுவது எனக்கு அலுப்பாக இருந்தது. நானே நிறுத்திக் கொண்டேன். ஆனாலும் என் நண்பி என்னுடன் தொலைபேசியூடாக வாரத்தில் இரண்டு நாளாவது கதைப்பது வழக்கமாகிவிட்டது.

ஒரு நாள் அவளே கேட்டாள், ஏன் கடிதம் அனுப்புவதில்லை? என்று. தொலைபேசியில் எல்லாவற்றையும் கதைக்க முடிகிறபோது எதை எழுதுவது என்பது என் வாதமாக இருந்தது. ஒரு நாள் அவளே சொன்னாள்: "கடிதம் எழுதினால் பதில் எழுதும் ஜென்மமா நீ? ஆகவே உனக்குக் கடிதம் எழுதுவதை நானும் நிறுத்திக் கொள்கிறேன்" என்று. அதன் பிறகு தொலைபேசி உரையாடலும் தானாகவே முடிவுக்கு வந்தது.


அநேகப்பேரின் கடிதப் பரிமாற்றங்களையும் கடிதம் தொடர்பான நினைப்பையும் தொலைபேசியின் வருகையும் பாவனையும் குறைந்து விட்டது அல்லது நிறுத்திவிட்டது எனலாம். இப்போது நிலைமை இன்னும் மோசம். தொலைபேசியைக்கூட சுருக்கி மின் அஞ்சல், எஸ்.எம்.எஸ். என்று தொடர்பாடல் மிகவும் குறுகிப் போய்விட்டது.

ஆரம்பத்தில் தூது அனுப்புவதாகத் தகவல்கள் பரிமாறப்பட்ட போது நேரடியாக மனிதர்களே சென்று தகவல்களைப் பரிமாறினார்கள். பின்னர் - அன்னம் - புறா - என்று தகவல்களைப் பரிமாறினார்கள். பிறகுதான் சுவடிகள் மூலமாகத் தகவல் பரிமாறப்பட்டு அதன் வளர்ச்சியாக தபால் சேவை நடைமுறைக்கு வந்தது.

இப்போது அதையும் தாண்டி தொலைபேசி, கையடக்கத் தொலைபேசி, தொலைநகல், மின்அஞ்சல், எஸ்.எம்.எஸ். என்று போகிற போக்கைப் பார்த்தால் எதிர்காலத்தில் ஒவ்வொருவரும் எப்.எம். அலைவரிசைகளைத் தனித்தனியாக வைத்துக் கொண்டு தகவல்களைக் காற்றலையில் பரிமாறவும் இடமுண்டு.

(தொடர்ச்சி 22ஆம் பக்கம்)



தருவது
- தேசன்

இலங்கையில் இருந்து வெளிவரும் தமிழ் மொழி மூல இலத்திரனியல், அச்சு ஊடகங்களில் ஒலி, ஒளிபரப்பாகும், பிரசுரிக்கப்படும் சமகால செய்திகள், விடயதானங்கள் மற்றும் நிகழ்ச்சிகள் தொடர்பான விமர்சனங்கள் வாசகர்களிடமிருந்து எதிர்பார்க்கப்படுகின்றன. விமர்சனங்கள் இறுக்கமாகவும் சுருக்கமாகவும், ஆக்கபூர்வமானவையாகவும் இருக்கவேண்டும். பயன்மிக்கது என ஆசிரிய பீடத்தினால் கருதப்படும் விமர்சனங்களுக்கு முரசு இடமளிக்கும்.

**அனுப்ப வேண்டிய முகவரி:**
**முரசு விமர்சனம்**
**தினமுரசு வாரமலர்**
**த.பெ. இல - 1772**
**கொழும்பு.**





## தென்றலின் தயாரிப்பாளருக்கு!

தென்றல் வானொலியெனும் மகுடத்தில் பதிந்துள்ள வைரமாக விளங்கும் இதயவீணை நிகழ்ச்சியானது நாட்டில் வாழும் எம்போன்று பாதிக்கப்பட்ட - வஞ்சிக்கப்பட்ட இதயங்களுக்கு ஆறுதலளிக்கும் நாதமாக விளங்குகின்றது. எனினும் அண்மைக்காலமாக இந் நிகழ்ச்சியானது நேரக்குறைப்புச் செய்யப்பட்டுள்ளது. இது கருத்துச் சுதந்திரமில்லாத எம் போன்றோருக்கு மேலும் தாக்கத்தைக் கொடுத்துள்ளது. எனவே ஏனைய நிகழ்ச்சிகள் போலல்லாது மக்களின் ஆதங்கங்களைப் புரிந்துகொண்டு இந்நிகழ்ச்சிக்கு முக்கியத்துவம் கொடுத்து இனிவரும் காலங்களில் இவ்வாறான தவறுகள் இடம்பெறா வண்ணம் கவனித்துக் கொள்ளுமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

*—ஏ.எச்.எம்.தௌபீக், புத்தளம்.*





## மலையாள மாந்திரீக சக்தியின் வெற்றிகள்

இலங்கையில் மாந்திரீகத் துறையில் சுடர்விட்டு நிருபித்துக் கொண்டிருக்கும் மலையாள மாந்திரீகம் என்றால் அது எமது நிறுவனம் மட்டுமே! வாங்கும் பணத்திற்கு பற்றுச் சீட்டு வழங்குவது என்றால் அது நாம் மட்டுமே! காரணம் தெட்டத் தெளிவான திடமான மாந்திரீக சித்தமே!

இதையொட்டி தினமும் எல்லா தினசரி பத்திரிகைகளிலும் தொலை காட்சியிலும், வானொலியிலும் விளம்பரம் செய்வதென்றால் எமது சேவையே! என்பதற்கு எடுத்து காட்டாக எல்லா வெளிநாட்டவர்களுக்கும் அவர்கள் எத்திசையில் வசித்தாலும் கடல் கடந்து செயல்படும் வண்ணம் அவரவர் முகவரியில் நாம் நேரடியாக மூன்றே நாளில் மாந்திரீக பொதிகளைக் கையளிப்பது என்பது எமது நிர்வாகத்தின் சிறப்புத் தன்மையே!

நான் வெளிநாட்டுக்குச் செல்லாமலேயே அனைத்து உலக மக்களுக்கும் தொலை பேசியில் என்னுடன் தொடர்புகொள்பவர்களுடன் அவரவர்க் குறைகளைக் கேட்டறிந்து ஏனோ, தானோ என்று இல்லாது தெட்டத் தெளிவான சேவை செய்வதாலேயே எமது நிறுவனம் நம்பிக்கை வாய்ந்த ஒரு வரையறுக்கப்பட்ட (Liability) கம்பனி நிறுவனமாக திகழ்கிறது. எத்தனை பேரிடம் பரிகாரம் செய்தாலும் கடைசியில் என்னிடம் வருவது என்பது நான் கண்ட உண்மையே! என்னிடம் வருவதற்கு உங்களுக்கு ஸ்ரீ துர்க்கா தேவியின் தேவ சித்தமும் அவசியமே! நான் ஒரு வேலையைப் பாரம் எடுக்கும் போது, அவர்களின் ஜாதகத்தை அக்கு வேறு ஆணி வேறாகப் பரிசீலனை செய்த பின்பே வேலைகளை ஆரம்பிப்பேன்.

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்ற பழமொழிக்கு ஒப்ப நீரிழிவு நோயில் இருந்து பூரணமாக விடுதலை பெற, ஆண்கள் - பெண்கள் இரு பாலாரும் ஆஸ்த்மா நோயிலிருந்து விடுபட, மூல ரோகம் தீர, இளம் நரை போக்க, கூந்தல் அடர்த்தியாக வளரச் செய்ய, விசேடமாக ஸ்திரி - புருஷ வசியம், மூன்றே நாளுக்குள், விட்டுப் பிரிந்த கணவன் - மனைவி ஒன்று சேர, ஓடிப்போனவர் தேடி வர, கணவன் மனைவி தாம்பத்திய உறவு குறைப்பாட்டை நிவர்த்தி செய்ய, ஆண்மை குறைபாட்டில் இருந்து சந்தோஷம் பெற, தாமதிக்கும் திருமணம் தங்கு தடையின்றி நடக்க, திருமண தோஷம் அகல, குழந்தை பாக்கியம் கிட்ட, பூதம் காத்த காணி பூமி தோஷம் அகன்று, காணிகளை விற்பனை செய்ய, கல்வியில் சித்தி பெற, வெளிநாட்டுப் பிரயாணத் தடை நீங்க, வெளிநாட்டில் நிரந்தர வதிவிட வசதி கிட்ட வேளாண்மை செழிக்க, குடும்பத்தில் ஒற்றுமை நிகழ, தன் பிள்ளைகள் தாய் தந்தை பேச்சைக் கேட்டு திருந்தி வாழ, குபேர வாழ்வு பெற, லட்சுமி கடாட்சியம் கிட்ட, ஞாபக சக்தி பெற, மனம் விரக்தியடைந்தவர்கள் மனப் படபடப்பு, பதற்ற நிலை, கை, கால் நடுக்கம், இரவில் பயந்து எழுதல், மனப் பேதம் தீர, சூனியம் அகற்ற, மருந்தீட்டல் அகலப்பண்ண அத்துடன் அருள் வாக்கு பெற, அருள் ஞானத்தில் கூறும் ஜாதகம் என்றுமே பிழைத்தது இல்லை. நடப்பது, நடக்கப்போவது, எத்தனையாம் திகதி, எத்தனை மணிக்கு, எந்த மாதம் நீங்கள் எண்ணிய எண்ணங்கள், எண்ணியபடி சரிவரும் என்று தெரிந்து அறிந்து செயல்பட இந்த அருள் ஞான சித்த வாக்கு கை கொடுக்கும்.

எமது ஸ்ரீ துர்க்கா தேவி ஆலயத்தில் மாதம் தோறும் மாதக் கடைசியில் நடைபெறும் அக்கினி குண்டல யாக பூசையில் கலந்து கொண்டால் சகல பாவ தோஷ விமோசனம் கிட்டும்.

"என்னிடம் தீய வேலைக்கு இடமில்லை"
நல்லதை நினைப்போம். நல்லதையே செய்வோம்;
ஓம் சக்தி - சக்தி - சக்தி

தேவையான நேரத்தில் தேவைப்படுபவர் -
உலக மலையாள மாந்திரீகச் சக்கரவர்த்தி.
பேராசிரியர் டாக்டர் P.K.சாமி J.P.
(J.D.G.A.N)
Malaiyala Manthireeka Uchada Peedam.
162, Kotahena St, Colombo - 13.
T.P. 0112 342463 - 0112 3424464
0112 270615 - 0112 449110
0114 4613127
Fax - 0112 344831
E-mail - drpksamy@sltnet.lk

கிளை -
Sri Durkadevi Alayam,
No 33, Daily Fair, Nuwaraliya
T.P.052 2222508
052 2235097, 052 4490031, 052 4490035
052 2223093
Fax - 052 2223093
இன்னும் விபரங்களுக்கு எமது வெப் தளத்தை நாடுங்கள் :-
www.drpksamy .com



## சிங்கப்பூரில் தங்குமிட வசதி

**சிங்கப்பூரில் விடுமுறையைக் கழிக்கவும் திருமணத்துக்கு வருபவர்களுக்கு எல்லா வசதிகளோடும் கூடிய முழு வீடு குறைந்த வாடகைக்குக் கிடைக்கும். இலவச போக்குவரத்து வசதி, வழிகாட்டி (guide) வசதி. மேலதிக விபரத்துக்கு எந்த நேரத்திலும் தொடர்பு கொள்ள வசதியான *அப்புலிங்கம்***


கை தொலைபேசி எண் : 0065 97514941
தொலை நகல் (Fax) : 0065 64816144

**LINGAM WEDDING SERVICES**
**153, Jalan Jarak, , Singapore 809281**

## இன்னொருவர் பார்வையில்


# இலங்கை விவகாரத்தில் அமெரிக்காவின் ஈடுபாடு

**"வன்செயல்கள் குட்டி யுத்தமாக மாறுகின்ற தருணத்தில், இலங்கையில் அமெரிக்க ஈடுபாடு அதிகரிக்கவுள்ளது" என்ற தலைப்பில் சம்பிக லியனாராச்சி என்ற அரசியல் ஆய்வாளர் எழுதிய கட்டுரை கடந்த 17ஆம் திகதி 'டெய்லி மிரர்' ஆங்கிலப் பத்திரிகையில் பிரசுரமாகியிருந்தது. அதன் தமிழாக்கம் இங்கே தரப்படுகிறது.**


ஜோர்ஜ் புஷ்


கிறிஸ்டினா ரொக்கா


ரிச்சர்ட் ஆர்மிடேஜ்


டொனால்ட் காம்ப்

**வாஷிங்டன்** கடந்த வருடம் மேற்கொண்ட **கொள்கை** மீளாய்வையடுத்து, அதன் தெற்காசியப் **பணியகம்** பெருமளவுக்கு மீளமைக்கப்பட்டது. **இதனால்** இலங்கை மீது அதன் கவனம் **அதிகளவில்** திரும்பியது. முன்னைய தெற்காசியப் **பணியகத்துடன்** மத்திய ஆசிய நாடுகளையும் **இணைத்துக்** கொள்ளும் தீர்மானம் ரஷ்யா, சீனா ஆகியவற்றுடனான அமெரிக்காவின் போட்டிக்கு ஈடுகொடுப்பதற்காக மேற்கொள்ளப்பட்டது. ஏனைய தெற்காசிய நாடுகள், குறிப்பாகப் பாகிஸ்தானும் இந்தியாவும் அமெரிக்காவின் கவனத்தை ஈர்க்க இலங்கையுடன் போட்டியிடும் நேரத்தில், இத் தீர்மானம் எடுக்கப்பட்டது. முன்னாள் சோவியத் யூனியனின் குடியரசுகளான கசாகிஸ்தான், கிரிக்கிஸ்தான், தஜிக்கிஸ்தான், துக்மெனிஸ்தான், உஸ்பெஸ்கிஸ்தான் ஆகியவற்றை உள்ளடக்கும் வகையில் தெற்காசியப் பணியகம் சீரமைக்கப்பட்டதால், முன்னுரிமை பெற்ற நாடுகளின் பட்டியலில் இலங்கை கீழே தள்ளப்பட்டது.

துரதிர்ஷ்டவசமாக, அமெரிக்காவின் ஈடுபாடு எமக்கு அதிகளவில் தேவைப்படும் ஒரு நேரத்தில் இது நடைபெற்றுள்ளது. இப் பணியகம் சீரமைக்கப்பட்டு ஏழு மாதங்களுக்குள் இலங்கையில் வன்செயல்கள், சிறிய யுத்தமென்ற அளவுக்கு வளர்ச்சி பெற்றுள்ளது. இதேவேளை, அமெரிக்கா இரு பிரதான அக்கறைக்குரிய விடயங்களில் ஈடுபட்டுள்ளது. அமெரிக்க - இந்திய சிவில் அணுசக்தி ஒப்பந்தம், ஈரானுடனான சர்ச்சை ஆகிய இரண்டுமே அவையாகும்.

இலங்கை சம்பந்தமான வேலைப் பளு அதிகமிருப்பதால், இலங்கைக்கு விஜயம் செய்த அமெரிக்காவின் பதில் உதவி இராஜாங்கச் செயலாளர் டொனால்ட் காம்ப் இலங்கை விவகாரங்களைப் பொறுப்பேற்கலாம். இவர் 1976-79ஆம் ஆண்டு காலப் பகுதியில் கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகத்தில் அரசியல், பொருளாதார அதிகாரியாகப் பணிபுரிந்தவர். தேசிய பந்தோபஸ்துச் சபையின் தெற்காசியப் பிரிவுப் பணிப்பாளராகவும் 1999-2001ஆம் ஆண்டு காலப் பகுதியில் காம்ப் பணிபுரிந்துள்ளார். அவர் அமெரிக்க வெளிநாட்டுச் சேவையில் இணைவதற்கு முன்னர், இந்தியாவில் அமெரிக்க சமாதானப்படை உறுப்பினராகவும் பணியாற்றியுள்ளார். தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான பிரதான உதவி ராஜாங்கச் செயலாளரென்ற வகையில் டொனால்ட் காம்ப், பௌச்சரின் கீழ் பல்வேறு பதவிகளில் பன்னிரண்டு நாடுகளில் பணியாற்றியுள்ளார்.

உண்மையிலேயே அமெரிக்கா இலங்கையில் பேச்சுவார்த்தை மூலமாகவே, தீர்வு காணப்பட வேண்டுமென்று விரும்பினால், இப்போதைப் போன்று ஒரு நல்ல சூழ்நிலை என்றுமே ஏற்பட்டதில்லை. எனவே இலங்கைக்கென முழுநேர விசேட சமாதான தூதுவரொருவரை அமெரிக்கா நியமிக்க வேண்டும். நான்கு இணைத் தலைமை நாடுகளில் நோர்வேயும் ஜப்பானும் ஏற்கனவே தனது சொந்த விசேட பிரதிநிதிகளை நியமித்துள்ளன. சமாதான முன்னெடுப்புகளில் தனது கடப்பாட்டை அமெரிக்கா வெளிப்படுத்த வேண்டுமென்றும் அதற்காக விசேட பிரதிநிதியொருவரை நியமிக்க வேண்டுமென்றும் அரசாங்கமும் பொதுவாக மக்களும் எதிர்பார்க்கின்றார்கள். புலிகள் இயக்கத்தைத் தடை செய்திருக்கும் அமெரிக்கா, அவுஸ்திரேலியா, கனடா ஆகிய நாடுகளை உள்ளடக்கிய தொடர்புக் குழுவொன்றினை உருவாக்குவதற்கு இப்போது முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. யுத்த நிறுத்த ஒப்பந்த அத்துமீறல்கள் குறித்து கடும் போக்கு நிலைப்பாட்டை எடுப்பதற்காகவே இந்த முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

புலிகள் தொடர்பான அவுஸ்திரேலியாவின் நிலைப்பாடு, சில காரணங்களுக்காக உரிய அங்கீகாரத்தைப் பெறவில்லை. 2001ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 21ஆம் திகதி, சொத்துக்களை முடக்குவதற்காக புலிகளை ஒரு பயங்கரவாத இயக்கமாக அவுஸ்திரேலியா பிரகடனப்படுத்தியது. 2001ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 28ஆம் திகதிய ஐ.நா.பந்தோபஸ்துச் சபையின் 1373ஆவது தீர்மானத்திற்கமைய அவுஸ்திரேலியா இந்தக் கடப்பாட்டை நிறைவேற்றியது. புலிகள் இயக்கம், ஒரு பயங்கரவாத அமைப்பாக அவுஸ்திரேலியாவில் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

"அவுஸ்திரேலிய சட்டப்படி புலிகளின் சொத்துக்களைக் கைப்பற்ற முடியும்" என்று அவுஸ்திரேலிய வெளிவிவகார அமைச்சர் அலெக்சாண்டர் டவுனர் 2005ஆம் ஆண்டு மார்ச் மாதம் 16ஆம் திகதி மீண்டும் குறிப்பிட்டார். இதன் மூலம் அவுஸ்திரேலியாவின் நிலைப்பாடு தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

"இலங்கையில் தற்போது உருவாகி வரும் நெருக்கடி, அவுஸ்திரேலியாவுக்கும் கூட பெரும் கவலையையும் அக்கறையையும் கொடுக்கின்ற ஒரு விடயமாகும்" என்று அவுஸ்திரேலியாவுக்குச் சென்றிருந்த யசூசி அகாசி அங்கு கூறியுள்ளார். அத்துடன் இலங்கையில் உருவாகி வரும் பயங்கர நிலையைக் குறைப்பதற்கு என்ன செய்யலாம் என்பது குறித்து நாம் இணைந்து, ஒருமித்து யோசிக்க வேண்டும் என்றும் அகாசி கூறியுள்ளார்.

கடந்த மாதம் நடைபெற்ற ஒஸ்லோ இணைத் தலைமை மாநாட்டில் ஒரு முன்னோடிக் குழுவொன்றினை அமைக்க வேண்டுமென்ற யோசனையை அமெரிக்கா முன்வைத்தது. தற்போது தயக்கம் காட்டிவரும் இந்தியா, இணைத் தலைமை குழுவில் அங்கம் வகிப்பதிலும் பார்க்க, புலிகளைத் தடை செய்துள்ள நாடுகளை உள்ளடக்கிய தொடர்புக் குழுவில் அங்கம் பெறுவது மேலும் சிறந்ததாக அமையும்.

அமெரிக்காவின் பிரதி இராஜாங்கச் செயலாளர் ரிச்சர்ட் ஆர்மிடேஜ், பதவி விலகிய பின்னர், புஷ் நிர்வாகத்தின் இரண்டாவது ஆட்சிக் காலத்தில் இலங்கையில் அமெரிக்காவின் ஈடுபாடு குறிப்பிடக்கூடியளவுக்குக் குறைந்துள்ளதென்பது பலரின் அபிப்பிராயமாகும். ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பதவியேற்று, இரண்டு மாதங்களுக்குள் அமெரிக்க இராஜங்கச் செயலாளர் நிக்கலஸ் போர்ணஸ் இலங்கைக்கு விஜயம் செய்தமை, சிறிது தளர்ந்திருந்த அமெரிக்க - இலங்கை உறவுகளில் ஓர் உந்துதலை ஏற்படுத்தியிருக்கும் என்பதில் ஐயமில்லை.

இம் மாத இறுதியில், டோக்கியோவில் நடைபெறவிருக்கும் இணைத்தலைமை நாடுகளின் கூட்டத்தில் இராஜாங்கச் செயலாளர் போர்ணஸ் பங்குபற்றுவாரென்று எதிர்பார்க்கப்படுகிறது. உதவி இராஜாங்கச் செயலாளர் ரிச்சாட் பௌச்சர் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார். இதனால் இப்போது இலங்கையில் கட்டவிழ்த்து விடப்படும் சம்பவங்கள் தொடர்பாக அமெரிக்கா, கணிசமான அக்கறை செலுத்தி வருகிறது. இது இலங்கையில் நம்பிக்கை உணர்வை ஏற்படுத்தலாம். எனினும் இலங்கை பிரத்தியேகமான மற்றும் முக்கிய விடயங்களைப் பகிர்ந்து கொள்வதற்காக வாஷிங்டனில் தொடர்பு கொள்ளக்கூடிய ஒருவர் இருக்க வேண்டுமென்பது வலுவாக உணரப்பட்டுள்ளது.

விக்கிரமசிங்க நிர்வாகத்தின்போது, ஆர்மிடேஜ் சரியான சமாதான முயற்சிகளைப் பொறுப்பெடுப்பதற்கு ஆர்வம் கொண்டிருந்தார். அத்துடன் உரிய இடத்தில் தனிப்பட்ட ரீதியிலான நண்பர்களும் இருந்தனர். அவருக்குப் பின் பதவியேற்றவரும் தற்போது பதவி வகிப்பவருமான ரொபர்ட் டி சொல்லிக் இலங்கையுடனான இருதரப்பு உறவுகளுக்கு ஒன்றும் புதியவரல்லர். முன்னர் அமெரிக்காவின் வர்த்தகப் பிரதிநிதியாக அவர் பணியாற்றிய காலத்தில், பதவியேற்று இரு வாரங்களுக்குள் இலங்கையுடன் வர்த்தக மற்றும் முதலீட்டு வரைமுறை உடன்படிக்கையொன்றினைச் செய்து கொண்டார். ஆனால், இராஜாங்கத் திணைக்களத்தில் தற்போது இரண்டாவது சிரேஷ்ட நிலைப் பதவியிலிருப்பவரால் இன்றைய சூழ்நிலையில் இலங்கைக்கு இவ்வாறான சாதக நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாத நிலையே இருக்கிறது. எனவேதான் இலங்கை தொடர்பாக முழுநேரமும் பணியாற்றக் கூடிய ஆர்மிடேஜ் போன்ற அந்தஸ்தும் அனுபவமுமுடைய ஒருவரை நியமிப்பது பற்றி வாஷிங்டன் சிந்திக்க வேண்டும்.

ஜெனீவாவில் அமைந்துள்ள ஆயுதப் பரிகரண பேச்சுவார்த்தை அமைப்பின் அதிகாரியாக முன்னாள் உதவி இராஜாங்கச் செயலாளர் கிறிஸ்டீனா ரொக்கா நியமிக்கப்பட்டுள்ளார். சில தினங்களுக்கு முன்னர்தான் அவர், தனது புதிய பணியில் அமர்த்தப்பட்டார். இல்லையென்றால், அவரை இலங்கைக்கான விசேட பிரதிநிதியாக நியமித்திருக்க முடியும்.

இலங்கைக்கு விசேட பிரதிநிதியொருவரை நியமிக்க வேண்டுமென்ற நம்பிக்கை இதுவரை அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்துக்கு ஏற்படவில்லை. இலங்கையின் சமாதான முயற்சிகளில் அமெரிக்கா ஈடுபட்டு, உரிய பங்களிப்புகளைச் செய்யும் நிலையில், விசேட பிரதிநிதியொருவரை நியமிக்க வேண்டிய தேவை எழாதென்று உதவிச் செயலாளர் காம்ப் கருதுகிறார். இலங்கையில் எழுந்துள்ள புதிய நிலைமைகள் குறித்து அமெரிக்கா பெரும் அனுதாபமும் அக்கறையும் கொண்டிருப்பதோடு, நிலைமைகளை நெருக்கமாகக் கவனித்து வருவதாகவும் அவர் கூறியிருக்கிறார். இணைத் தலைமை நாடுகளிலொன்று என்ற வகையில், இயன்ற அனைத்தையும் செயற்பட்டு வருவதாகவும் அதற்கு வெளியே கூடச் சுதந்திரமாகச் செயற்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

இணைத்தலைமை நாடுகளின் பங்களிப்பிலிருந்து விலகி, அமெரிக்காவினால் அதிகம் செயலாற்ற முடியுமென்றும் ஒரு உதவும் பாத்திரத்தை வகிக்கக்கூடிய தொடர்புக் குழு சமாதான முன்னெடுப்புகளில் வித்தியாசமான பங்கினை வகிக்குமென்றும் இலங்கையில் பலர் நம்பிக்கை கொண்டுள்ளனர்.

முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் படுகொலைக்குப் பின்னர் புலிகளின் பயங்கரவாத நடவடிக்கைகள் அதிகரித்து வந்துள்ளதென்று இராஜாங்கச் செயலாளர் காம்ப் தெரிவித்துள்ளார். அத்தோடு கடந்த வாரம் கடற்படையினர் மீது நடத்தப்பட்ட தாக்குதல் உட்பட்ட இவ்வாறான சம்பவங்கள் சமாதான முயற்சிகளில் புலி இயக்கம் கொண்டுள்ள கடப்பாட்டினைக் கேள்விக்குறிகளாக்கியுள்ளது என்றும் காம்ப் சொன்னார். புலிகளின் நிதிச் சேகரிப்புகளைத் தடுக்கின்ற அமெரிக்க செயற்பாடுகளின் சாத்தியம் குறித்து அவர் கருத்துத் தெரிவிக்கையில், அமெரிக்காவில் புலிகளின் நிதிச் சேகரிப்பில் கணிசமான வீழ்ச்சியை அரசாங்கம் ஏற்படுத்தியுள்ளதென்று தெரிவித்தார். அமெரிக்க விரோத முஸ்லிம் தீவிரவாதக் குழுக்களின் நிதிச் சேகரிப்பையே அமெரிக்கா குறிவைத்துத் தடுக்கிறதென்றும் ஏனைய குழுக்களின் நிதி சேகரிப்பை தடுக்கவில்லையென்றும் தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டுக்களை அவர் மறுத்தார்.

புலிகள் இயக்கத்தைத் தடை செய்யப்பட்ட இயக்கங்களின் பட்டியலில் சேர்த்துக் கொள்ள கனடா எடுத்த முடிவை அமெரிக்கா வரவேற்பதாகவும் இத்தடைக்குப் பின்னர் அதனை அமுல்படுத்த எடுக்கும் நடவடிக்கைகளையும் வரவேற்பதாகவும் காம்ப் சொன்னார். கனடிய பொலிஸார் மொன்ட்ரீலிலுள்ள உலகத் தமிழர் இயக்கம் உட்பட பல்வேறு புலிகளின் முகவர் அமைப்புகள் மீது நடத்தி வரும் முற்றுகைத் தேடுதல்களையே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். புலிகள் இயக்கத்தினரும் தமிழ் மக்களதும் நலன்கள் வித்தியாசமானவை என்பதை அமெரிக்கா உணர்ந்துள்ளது. இதேவேளை, இலங்கையில் அரசாங்கக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டுவதில் இருக்கக் கூடிய குறைபாடுகள் பற்றியும் அமெரிக்கா அக்கறை செலுத்தி வருகிறது.

மக்களின் மரணங்கள் அதிகரித்து வருவது குறித்து அமெரிக்கா கவலை தெரிவித்துள்ளது. அத்துடன் கொலைகள் குறித்து உரிய விசாரணைகள் நடத்தி வழக்குத் தொடர வேண்டியதன் அவசியத் தேவை குறித்தும் இலங்கை அரசுக்கு அமெரிக்கா வலியுறுத்தியுள்ளது.

இலங்கையில் அமெரிக்காவின் ஈடுபாடு சமாதான முயற்சிகளின் ஓர் அம்சமாகவுள்ளது. யுத்தத்தை மீண்டும் ஆரம்பிக்க ஒரு தலைப்பட்சமாக புலிகள் எடுத்திருக்கும் முடிவு இலங்கை இராணுவத்தை மேலும் பலப்படுத்தவே செய்யும் என்று இலங்கையிலுள்ள அமெரிக்கத் தூதுவர் ஜெப்ரி லன்ஸ்ரெக் கடந்த ஜனவரியில் கூறியிருந்தார். இக் கருத்தினை அமெரிக்காவின் உத்தியோகபூர்வ நிலைப்பாடென்று பலர் கருதுகின்றனர்.

வாஷிங்டனிலுள்ள இராஜதந்திர சந்தையில் 185 நாடுகள் போட்டியிடுகின்றன. இத்தருணத்தில் மக்களுக்கு தொந்தரவுகளைக் கொடுத்தல், கொலைகள், குடிமக்கள் இடம்பெயர்வு ஆகியவற்றை இலங்கை அரசாங்கம் சிறந்த முறையில் கையாளுமேயானால், அமெரிக்காவின் முன்னுரிமைப்பட்டியலில் இலங்கை முதன்மைப்படக்கூடிய நிலைமையேற்படும்.

*நன்றி டெய்லி மிரர்*

# கவிஞர் வாலி எழுதுகிறார்!


## —வாழ்க்கைச் சரிதம்—

**அன்று –**

டூரிங் டாக்கீஸில், நானும் திரு.கே.ஆர். ஆரும் பார்த்த படம், பாலசந்தர் இயக்கிய 'அவன் அமரன்' என்னும் படமாகும். இதில் கே.ஆர். ராமசாமியும், திருமதி ராஜசுலோச்சனாவும் நடித்திருந்தார்கள்.

### அதிர்ஷ்டம் அழைக்கிறது

போதி மரமும் வேண்டாம்;



புளிய மரமும் வேண்டாம் புத்தி சொல்ல 'எழும் விழும்' என்கிற நியதி சூரியனுக்கே இருக்கும்பொழுது மானிடனுக்கும் ஒரு கிழக்கும் மேற்கும் இருக்காதா என்ன?

***'வால் நீண்ட கரிக்குருவி வலமிருந்து இடம் போனால் கால் நடையாய்ச் சென்றவர்கள் கனக தண்டிகை ஏறுவரே!'***

- என்று ஒரு பழம் பாடல் இருக்கிறது. அந்தப் பாடலின் அடுத்த வரிகள். கனக தண்டிகை ஏறியவரும் கால்நடையாய்ச் செல்ல நேரும் என்பதையும் சுட்டிக்காட்டாமலில்லை.

ஆக, காலச்சக்கரம் மேலும் கீழுமாகச் சுழலுவதை பட்டறிவைக் கொண்டு, மனிதன் கண்டு கொள்ளக்கூடும்.

வாழ்க்கை ஓர் ஓவியமாக வேண்டுமாயின், ஏற்ற இறக்கங்களை எதிர்கொள்ளத்தான் வேண்டும். நேர்கோடுகள் ஓவியமமா என்ன?

குட்டையாகத் தேங்கி நிற்பது கொண்டாடப்பட வேண்டிய விஷயமல்ல. பள்ளத்தில் இறங்கி, மேடுகளில் ஏறி நதிபோல் நடக்கின்ற வாழ்க்கையைத்தான் வரலாறு குறித்துக் கொள்ளுகிறது.

***'ஒரு மனிதன் - விழாமலே வாழ்ந்தான் - என்பது பெருமையல்ல; விழுந்தபோதெல்லாம் - எழுந்தான் என்பதுதான் பெருமை'***

- இப்படி ஓர் ஆங்கில கவிஞன் செய்யுள் யாத்திருக்கிறான்.

திரையுலகில் எழுந்தவர்கள் விழுந்ததையும், விழுந்தவர்கள் எழுந்ததையும் நான் பார்த்திருக்கிறேன். இதன் காரணமாகவே, என் மனத்தை நான் அடி நாட்களிலிருந்தே சமனப்படுத்தி வைத்திருக்கிறேன். ஒரு நாள் ஒரு சிறுவன் என்னிடம் சின்னக் கடிதம் ஒன்றைக் கொண்டு வந்து கொடுத்தான். பிரித்துப் படித்தேன்.

'கடிதம் கொண்டு வரும் இந்தப் பையன் வசம் ஐம்பது ரூபாய் கொடுத்தனுப்ப வேண்டுகிறேன். ரொம்பவும் சிரமதசையில் இருக்கிறேன்...'

கடிதத்தைப் படித்தவுடன் கீழே கையொப்பமிட்டிருந்தவரின் பேரைப் பார்த்ததும் திடுக்கிட்டேன் பணம் கொடுத்து, வந்த பையனை அனுப்பிவிட்டு நீண்ட சிந்தனையில் ஆழ்ந்து போனேன்.

'எப்படிப்பட்ட எழுத்தாளர்; தமிழ் சினிமா செய்த தவத்தால் ஜனித்த இந்த மாமேதைக்கு இப்படி ஒரு சிரமமா? இவருடைய பெயரை விளம்பரத்தில் பார்த்தாலே - நல்ல தழிழைக் காதாரக் கேட்கலாம் என்று சாரி சாரியாக மக்கள் க்யூவில் நின்றார்களோ - அந்தப் பெருக்குரியவர் இப்போது ஐம்பதுக்கும் நூறுக்கும் அடுத்தவரை எதிர்பார்த்து நின்கிறாரே?' என்று நான் விசனிக்கையிலேயே என் விழி விளிம்புகளிலிருந்து கண்ணீர்த் துளிகள் 'பொலபொல'வெனப் பொசிந்தன.

***'கண்ணீரைத் துடைக்கலாம்; களங்கத்தைத் துடைக்க முடியாது' வைகையைத் தாண்டுவது சுலபம்; வாழ்க்கையைத் தாண்டுவது சுலபமல்ல.'***


***'கணவனுக்கு வழங்க முடியாத அழகையும் இளமையையும் - காலத்திற்கு வழங்கிவிட்டேன்.'***

(தொடரும்.......)




---

**உளவு பார்த்தலால் ஏற்படும் நன்மை, தீமைகள் பற்றிக் கூறும் அனுபவக் கட்டுரைத் தொடர்....**




**மூன்று** தினங்களுக்கு உள்ளாகவே ஜப்பானிய ராணுவத்தினர் யுகு பகுதியில் தண்ணீர் பற்றாக்குறை இருப்பதாக தங்கள் ராணுவ பிரிவிற்குத் தகவல் கொடுத்தார்கள். அதைக் கொண்டு யுகு என்பது பசிபிக் சமுத்திரத்தின் மத்தியில் உள்ள துறைமுகத்தை குறிக்க வேண்டும் என்கிற முடிவுக்கு அட்மிரல் நிமிட்ஸ் வந்தார். அவருடைய கணிப்பும் சரியாகவே இருந்தது.

***விண்வெளிக் கலங்கள்:***

இப்போதெல்லாம் விண்வெளிக் கோள்கள்தான் உளவு பார்க்கும் மிக முக்கியமான சாதனங்களாகப் பயன்பட்டுக்கொண்டிருக்கின்றன. விண்வெளிக் கோள்கள் பூமியின் மீதுள்ள எதையும் புகைப்படமெடுத்து தேவையான இடங்களுக்கு அனுப்பி வைத்துவிடுகின்றன. இதைத் தடுப்பதற்கு இப்போது பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பூமியிலுள்ள பீரங்கிகள், டாங்கிகள், தொழிற்சாலைகள் போன்றவற்றிற்கு ஒரு குறிப்பிட்ட வர்ணத்தைத் தீட்டிவிட்டால் மிக உயரமான இடத்திலிருந்து விண்வெளிக் கோள்கள் படமெடுக்கும்போது இவை தங்கள் நிறத்தில் அந்தப் படத்தில் விழாமல் பச்சை பசேலென்ற தோற்றத்துடன் அந்தப் படங்களில் இடம் பெற்றிருக்கின்றன. அதனால் இந்தப் படங்களிலிருந்து அவை தொழிற்சாலைகளா அல்லது பசுமை நிறைந்த காடுகளா என்று கண்டுபிடிப்பது கஷ்டமாகி விடுகிறது.

உளவு பார்க்கும் விண்வெளிக் கலங்கள் செல்லும் பாதையை எதிரி நாடுகள் எளிதில் கண்டுபிடிக்க முடியாதபடி அவற்றின் மீது சில பகுதிகளில் சில வர்ணங்கள் பூசப்படும்போது அவையும் வானவெளி போலவே நீல நிறத்தைப்பெற்று எந்த இடத்தில் செல்லுகிறது என்று கண்டுபிடிக்காதவாறு செய்துவிடுவார்கள்.

விஞ்ஞான வளர்ச்சிக்கேற்ப உளவாளிகள் பயன்படுத்தும் கருவிகளும் உளவு பார்க்கும் சாதனங்களும் முன்னேறிக் கொண்டே செல்லுகின்றன. கருவிகள் எவ்வளவு நூதனமாக இருந்தாலும் எவ்வளவு நுணுக்கமாக அமைந்தாலும் மனிதனின் திறமைதான் அனைத்துக்கும் மையமாக இருந்து செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

ஆகவே உளவுத் துறையின் எந்தக் காலத்திலும் சாதனங்களைவிட மனிதனே முக்கியத்துவம் பெற்றவனாக இருப்பது தவிர்க்க முடியாத.

### "கவர்"என்பது என்ன?

உளவாளிகள் வெளிப்படையாக வேலை செய்வது என்பது சாத்தியமில்லை. ஆகவே அவர்கள் வெளிநாடுகளில் உளவு வேலைகளில் ஈடுபடும்போது தாங்கள் செய்யும் காரியத்தை மறைத்து செயல்படுவது அவசியமாகிறது. இதற்காக அவர்கள் மேற்கொள்ளுகின்ற தற்காப்பு ஏற்பாடுகளைத்தான் 'கவர்' என்று சொல்லுகிறார்கள்.

ஒவ்வொரு ஒற்றனும் தனக்கென்று ஒரு கவர் ஏற்பாடு செய்துகொள்கிறான். வியாபாரியாக, தொழில் நிபுணராக, எழுத்தாளராக இப்படி ஏதோ ஒரு தொழிலில் ஈடுபட்டிருப்பதைப் போல பாவனை செய்து மற்றவர்களை நம்ப வைக்கிறான். எந்த உளவுத் துறையும் தங்களுடைய ஒற்றர்களை "ஒற்றர்கள்" என்ற பெயரில் அனுப்பி வைப்பதில்லை.

இவர்கள் செயல்படும் நாடுகளில் ஏதோ ஒரு நிறுவனத்திலோ அல்லது தூதரகத்திலோ வேலை பார்ப்பவர்களாக இருப்பார்கள். இந்தக் 'கவர்' இரண்டு சௌகரியங்களை இவர்களுக்கு அளிக்கிறது. மற்றவர்கள் கண்டு பிடிக்க முடியாமல் பாதுகாப்புக் கொடுக்கிறது. (தொடரும்.......)

(நன்றி : நர்மதா)


---



## இளவரசர் அறக்கட்டளை

**இளைஞர்களுக்கு** உதவுவதற்காக கடந்த 30 ஆண்டுகளுக்கு முன், இளவரசர் அறக்கட்டளை, நிதி என்ற அமைப்பை இங்கிலாந்து இளவரசர் சார்ள்ஸ் தொடங்கினார். அதன் 30 ஆண்டுகள் நிறைவையொட்டி லண்டனில் நடந்த விழாவில் இளவரசர் சார்ள்ஸின் மனைவி கமீலா, மகன் வில்லியம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## புதுமைப் போட்டி



**புதுமையான** போட்டியாக இன்டர் நெட் நிறுவனம் தொழில்நுட்பத்துக்காக 'யாகூ டெக்' என்ற வெப்சைட்டை தொடங்கி உள்ளது. அதை விளம்பரப்படுத்த மனிதனுக்கும், குரங்குக்கும் இடையே அழகாக போட்டோ எடுப்பது யார் என்ற போட்டியை நடத்தியது. நியூயோர்க்கின் பிரையன்ட் பூங்காவில் நடந்த போட்டியில், மனித இனம் சார்பில் ஷெல்லி பெர்க்கம் (இடது), குரங்குகள் சார்பில் 6 வயது சிம்பன்சி சேபலும் பங்கேற்று டிஜிட்டல் கேமராவில் படம் எடுக்கின்றன(ர்).

## குளோனிங் ஆடு

**சீனாவில்** ஹபி பகுதியில் உள்ள அனுஹு விவசாய ஆராய்ச்சி பல்கலைக்கழகத்தில் குளோனிங் மூலம் உருவாக்கப்பட்ட ஆட்டுக் குட்டியை ஆராய்ச்சியாளர்கள் கையில் வைத்திருக்கின்றனர். அதை அன்புடன் முத்தமிடுகிறது அதை ஈன்றத் தாய்.






## ஈஸ்டர் கொண்டாட்டம்

**ஈஸ்டர்** வந்து விட்டாலே எல்லோருக்கும் பெரும் கொண்டாட்டம் தான். கிரீஸ் நாட்டில் இந்த ஈஸ்டர் விழாவின் தொடக்கத்தைக் கொண்டாடு வதையே படம் காட்டுகிறது. இவர்கள் தங்கள் சந்தோஷத்தை நடனம் ஆடியும் வண்ணப் பொடிகள் தூவியும் கொண்டாடுகிறார்கள்.

## வெற்றிச் சிகிச்சை

**அமெரிக்காவின்** நியூயோர்க் மாநிலத்தில் அதிசயமாக ஒட்டிப் பிறந்த இரட்டைக் குழந்தைகளை பிரிக்கும் முயற்சியில் வைத்தியக் குழு ஒன்று மும்முரமாக செயல்பட்டு, அதில் வெற்றியும் கண்டுள்ளது. இக்குழந்தைகளுக்கு இரு வயிற்றுப் பகுதியும் ஒட்டியிருந்ததால் ஈரல் பகுதிகள் சேதமடையாமல் பிரிக்கப் பெரும் பாடுபட்டதாக வைத்தியக் குழு தெரிவித்தது. இச் சத்திரசிகிச்சை சுமார் 7 மணி நேரம் நீடித்ததும் இங்கு குறிப்பிடத்தக்கது.







**ஏற்கனவே**, பூலான்தேவிக்கு கொலை மிரட்டல்கள் வந்த வண்ணம் இருந்தன. எனவே தனது பாதுகாப்புக்காக கைத் துப்பாக்கி வைத்துக்கொள்ள அனுமதி



# பூலான் தேவியின் மறுபக்கம்

கேட்டார். ஆனால் பொலிஸார் அனுமதி கொடுக்கவில்லை.

அதற்கு பொலிஸ் தரப்பில் விளக்கம் தரப்பட்டது. "ஆயுதச் சட்டத்தின்படி கைதிகள் துப்பாக்கிகள் வைத்துக்கொள்ள அனுமதி இல்லை. ஏனென்றால், பூலான்தேவி மீதான சில வழக்குகள் இன்னும் முடிவடையாமல் உள்ளன" என்று தெரிவித்தனர்.

இதை எதிர்த்து கோர்ட்டில் வழக்குத் தொடரப்போவதாகப் பூலான்தேவி அறிவித்து இருந்தார்.





## கொலையாளி பிடிபட்டான்

கொலை நடந்த 3 தினங்களிலேயே, முக்கிய புள்ளி சிக்கினான். அவனுடைய பெயர் பங்கஜ்சிங் (வயது 25). உத்தரப்பிரதேசத்தைச்சேர்ந்தவன்.

பூலான்தேவியை சுட்டுக்கொன்ற பிறகு., ஆட்டோவில் தப்பிய பங்கஜ்சிங் பஸ் மூலம் ஹரித்துவார் சென்றான். அங்கிருந்து டேராடுன் போய்ச் சேர்ந்தான்.

இதனை மோப்பம் பிடித்து தெரிந்து கொண்ட பொலிஸார், டேராடுன் விரைந்து சென்று 27ஆந் திகதி காலையில் பங்கஜ்சிங்கை கைது செய்து விட்டனர். பிறகு அவனை டெல்லிக்குக் கொண்டு வந்து கோர்ட்டில் ஆஜர்படுத்தி சிறையில் அடைந்தனர்.

இந்த கொலை தொடர்பாக பங்கஜ்சிங்கின் கூட்டாளிகள் ரவீந்தர், சேகர், ராஜ்வீர் ஆகிய 3 பேரும் தேடப்பட்டனர். இவர்கள் உத்தரபிரதேச மாநிலம் மீரட் மற்றும் சுற்றுப்புற பகுதிகளைச் சேர்ந்தவர்கள். பொலிஸ் பிடி இறுகியதால், இந்த 3 பேரும் சகரன்பூர் என்ற இடத்தில் உள்ள கோர்ட்டில் சரண் அடையச் சென்றார்கள். குற்றம் டெல்லி எல்லைக்குள் நடந்திருப்பதால் அங்கு சென்று சரணடையுங்கள்" என்று நீதிபதி கூறிவிட்டார்.


இதனால் ஏமாற்றத்துடன் கோர்ட்டை விட்டு வெளியேறினர். அங்கு தயாராக நின்ற பொலிஸார் அந்த 3 பேரையும் சுற்றி வளைத்து கைது செய்தார்கள். அவர்கள் பயன்படுத்திய வெள்ளை நிறக் கார், செல்போன் மற்றும் 2 சிம்கார்டு ஆகியவற்றைப் பொலிஸார் பறிமுதல் செய்தனர்.

## வாக்கு மூலம்

2 மாத காலமாக திட்டம் தீட்டி இந்த கொலைச் சதியை நிறைவேற்றியதாக பொலிஸாரிடம் அவர்கள் வாக்குமூலம் அளித்தனர்.

கொலையாளி பங்கஜ்சிங் தனது வாக்குமூலத்தில், "பெக்மாய் கிராமத்தில் எங்கள் ராஜபுத்திர இனத்தைச் சேர்ந்த 22 பேரை ஈவு இரக்கமின்றி பூலான்தேவி கொன்றார். அப்போது எனக்கு 6 வயதுதான்.

ஆனாலும் இதற்கு பழிக்கு பழி தீர்க்க பூலான் தேவியை கொன்றேன். என்னுடைய அந்த லட்சியத்தை நிறைவேற்றிவிட்டேன்" என்று கூறி இருந்தான். அவனது அரசியல் முன்னேற்றத்துக்குப் பூலான்தேவி உதவி செய்யாததால் கொலை செய்ததாக மற்றொரு காரணமும் கூறப்பட்டது.




பூலான்தேவிக்கு புத்தகம் வெளியிட்டதிலும், "பாண்டிட் குயின்" மூலமாக ரூபா 1 கோடி வரை ராயல்டி தொடர்பாக கணவர் உமத்சிங்கிடம் பல கட்டங்களாக விசாரணை நடைபெற்றது. ஆனால், கொலையாளிகள் பற்றி தனக்கு எதுவுமே தெரியாது என்று உமத்சிங் மறுத்துவிட்டார்.

பூலான்தேவி வாழ்க்கை துப்பாக்கியால் தொடங்கி, துப்பாக்கியில் முடிவுற்றது.

(பக்கம் முற்றும்)

# 2ஆம் உலகப் போர்

16

### போர் டைரி - 1942

**ஜன.1:** 26 உறுப்பினர்களுடன் ஐ.நா.சபை உருவாயிற்று.

**ஜன.2.:** பிலிப்பைன்ஸ் தீவில் உள்ள மணிலா நகரத்தை ஜப்பானியர் கைப்பற்றினர்.

**ஜன.19:** ஜெர்மனி படைகள் இருந்த பகுதிக்குள் ரஷ்ய பராசூட் படையினர் குதித்து திடீர் தாக்குதல் நடத்தினர்.

**ஜன.31:** சிங்கப்பூரை ஜப்பான் படைகள் முற்றுகையிட்டன.

**பெப்.8:** சிங்கப்பூர் எல்லைக்குள் ஜப்பான் படைகள் புகுந்தன. சிங்கப்பூர் வீழ்ந்தது.

**பெப்.15:** ஜப்பானிடம் சிங்கப்பூர் சரண் அடைந்தது.

**மார்ச்.7:** ஜப்பானிடம் ஜாவா சரண் அடைந்தது.

**ஏப்.1:** இலங்கை மீது ஜப்பான் விமானங்கள் குண்டு வீச்சு.

**ஏப்.18:** ஜப்பான் தலைநகர் டோக்கியோ மீது அமெரிக்க விமானங்கள் தாக்குதல் நடத்தியது.

**ஏப்.30:** ஹிட்லரும் முசோலினியும் சந்தித்துப் பேசினார்கள் (லெனின்கிராட் நகரில் மட்டும் ஏப்ரல் மாதத்தில் 1 லட்சம் பேர் மாண்டனர்.)

**மே.2:** பர்மாவில் உள்ள மாண்டாலே நகரை ஜப்பான் கைப்பற்றியது.

**மே.4:** மடகாஸ்கர் தீவை பிரிட்டிஷ் படைகள் கைப்பற்றின.

**மே.31:** அவுஸ்திரேலியாவில் உள்ள சிட்னி துறைமுகத்தின் மீது ஜப்பானின் நீர்மூழ்கி கப்பல்கள் தாக்குதல் நடத்தின. (இந்த மே மாதத்தில் மட்டும் 1,30,000 யூதர்கள் விஷவாயு மூலமாகவும் துப்பாக்கியால் சுட்டும் ஜெர்மானியர்கள் கொன்றனர்.)

**ஜுன்.10:** போலந்து நாட்டில் ஏராளமான மக்களை ஜெர்மனி தூக்கிலிட்டது.

**ஜுன்.16:** மத்திய தரைக்கடலில் பிரிட்டிஷ் போர்க்கப்பல்களும் 3 இத்தாலியப் போர்க்கப்பல்களும் மூழ்கடிப்பட்டன.

**ஜுன்.25:** ஐரோப்பாவில் உள்ள அமெரிக்க படைகளுக்கு தளபதியாக ஐசனோவர் (பிற்காலத்தில் ஜனாதிபதியானவர்) நியமிக்கப்பட்டார்.

(ஜுன் மாதத்தில் வட அட்லாண்டிக் கடலில் நேச நாடுகளின் 124 கப்பல்களை ஜெர்மனி தாக்கி மூழ்கடித்தது)

**ஜுலை.27:** ரஷ்யாவுக்குள் நுழைந்த ஜெர்மனிப்படைகள் டான் கூ ஆற்றைக்கடந்து காகசஸ் நகரை நோக்கி முன்னேறின. ஒரு அடிகூடப் பின்வாங்கக்கூடாது என்று ஸ்டாலின் தனது படைகளுக்கு கட்டளையிட்டார்.

**ஆக.9:** காகசஸ் நகருக்கு அருகில் எண்ணெய் கிணறுகள் உள்ள முக்கிய பகுதிக்குள் ஜெர்மனிப்படைகள் நுழைந்தன.

**ஆக.13:** இங்கிலாந்துப்பிரதமர் சர்ச்சில் ரஷ்யாவுக்குச் சென்று ஸ்டாலினைச் சந்தித்து பேசினார்.

**ஆக.23:** ஸ்டாலின் கிரேடுக்கு வடக்கே உள்ள வால்கா என்ற பகுதியை ஜெர்மனிப் படைகள் அடைந்தன.

**செப்.13:** ஸ்டாலின் கிரேடு நகருக்குள் ஜெர்மனி படைகள் புகுந்தன.

**செப்.22:** ஸ்டாலின் கிராடு மையப்பகுதியை ஜெர்மனிப் படைகள் அடைந்தன. இரு தரப்பு படைகளுக்கும் இடையே கடும்போர் நடந்தது. ஜெர்மனி ராணுவம் திணறல்.

**நவ.22:** ஸ்டாலின் கிராடு நகரில் புகுந்த ஜெர்மனிப் படைகளை ரஷ்யப்படைகள் சுற்றி வளைத்து தாக்கின.

**டிச.11:** ரஷ்யாவில் காகசஸ் நகரைப் பிடித்த ஜெர்மன் ராணுவம் அங்கிருந்து பின்வாங்கியது.

**டிச.19:** ஸ்டாலின் கிராடில் அடிப்பட்டுக் கொண்ட தனது ராணுவத்தை மீட்க ஜெர்மனி செய்த முயற்சி தோல்வி அடைந்தது. (டிசம்பர் மாதத்தில் மட்டும் 18 ஆயிரம் ரஷ்ய யுத்தக் கைதிகளை ஜெர்மனி ராணுவம் பட்டினி போட்டுக் கொன்றது.

1942 இல் கொல்லப்பட்ட யூதர்களின் எண்ணிக்கை 30 லட்சம்)

### போர் டைரி 1945

**ஜன.12:** போலந்துக்குள் ரஷ்ய படைகள் முன்னேறின.

**ஜன.27:** மூடப்பட்டிருந்த பர்மா வீதி திறக்கப்பட்டது.

**ஜன.30:** ஜெர்மனியில் கடும் உணவுப் பஞ்சம் தாண்டவம் ஆடியது. பெர்லின் நகரில் அகதிகளை ஏற்றிச் சென்ற ஜெர்மனி கப்பல்களை ரஷ்யாவின் நீர்மூழ்கிக்கப்பல்கள் மூழ்கடித்ததால், 6 ஆயிரம் பேர் பலியானார்கள்.

**பெப். 23:** பிலிப்பைன்ஸ் தலைநகர் மணிலாவில்,ஒரு லட்சம் மக்களை ஜப்பான் கொன்று குவித்தது.

**மார்ச்.3:** பிலிப்பைன்ஸ் தலைநகரம் ஜப்பானிடம் இருந்து மீட்கப்பட்டது.

**மார்ச்.19:** பர்மாவில் உள்ள மாண்டலே நகரில் இருந்து ஜப்பானியப் படைகள் வெளியேறின.

**மார்ச்.25:** ஜப்பானிய நகரங்கள் மீது நேசப்படைகள் தீவிரமாக விமானத்தாக்குதல் நடத்தின.

**மார்ச்.29:** அவுஸ்திரேலியாவுக்குள் ரஷ்யப்படை நுழைந்தது.

**ஏப்.7:** ஜப்பானின் மிகப்பெரிய போர்க்கப்பல் யமாட்டோ மூழ்கடிக்கப்பட்டது.

**ஏப்.11:** ரஷ்யாவும், யூகோஸ்லேவியாவும் நட்புறவு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர்.

**ஏப்.12:** அமெரிக்க ஜனாதிபதி ரூஸ் வெல்ட் திடீரென்று காலமானார். அவருக்குப் பதிலாக புதிய ஜனாதிபதியாக ட்ரூமன் பதவி ஏற்றார்.

**ஏப்.13:** ஆஸ்திரியாவின் தலைநாரான வியன்னாவை ரஷ்யா கைப்பற்றியது.

**ஏப்.25:** ஐ.நா. சபையின் முதல் கூட்டம் சான்பிரான்சிஸ்கோ நகரில் நடந்தது. அதில் 46 நாடுகள் கலந்து கொண்டன.

**ஏப்.28:** இத்தாலி நாட்டின் சர்வாதிகாரியாக இருந்தவரும், ஹிட்லரின் நண்பருமான முசோலினி சுட்டுக் கொல்லப்பட்டார்.

**ஏப்.29:** இத்தாலியில் இருந்த ஜெர்மனி படைகள் சரண் அடைந்தன.

ஜெர்மனிக்குள் புகுந்த ரஷ்யப்படைகள் பெர்லின் நகரை கைப்பற்றின.

**ஏப்.30:** ஹிட்லர் தற்கொலை செய்து கொண்டார்.

**மே.3:** பர்மா தலைநகரான ரங்கூனை இங்கிலாந்துப் படைகள் மீட்டன.

**மே.7:** ஜெர்மனி நிபந்தனையின்றி சரணாகதி அடைந்தது.

**மே.15:** யூகோஸ்லேவியா நாட்டில் மிஞ்சியிருந்த ஜெர்மனியர்கள் சரண் அடைந்தனர்.

**ஜுன்.20:** யுத்தம் தொடருவதை கண்டு, ஜப்பான் மன்னர் ஹிரோ ஹிட்டோ கவலை அடைந்தார். போரை முடிவுக்குக் கொண்டு வர சமாதான பேச்சு நடத்தப்பட வேண்டும் என்று வற்புறுத்தினார்.

**ஜுலை.17:** ஜெர்மனியில் உள்ள போட்ஸ்டாம் நகரில் அமெரிக்க ஜனாதிபதி ட்ரூமன், இங்கிலாந்து பிரதமர் சர்ச்சில், ரஷ்ய அதிபர் ஸ்டாலின் ஆகிய முப்பெரும் தலைவர்கள் சந்தித்தனர். நிபந்தனை இன்றி சரண் அடையும்படி ஜப்பானுக்கு எச்சரிக்கை விடுத்தனர்.

**ஜுலை.26:** இங்கிலாந்தில் நடந்த பொதுத் தேர்தலில், யாரும் எதிர் பாராதவிதமாக ஆளும் கட்சி தோல்வி அடைந்தது. பிரதமராக இருந்த சர்ச்சில் விலக, தொழில் கட்சியைச் சேர்ந்த ஆட்லி பிரதமர் ஆனார்.

**ஜுலை.26:** சரண் அடைய முடியாது என்று ஜப்பான் அறிவித்தது.

**ஆக.6:** ஜப்பானில் உள்ள ஹிரோஷிமா மீது, அமெரிக்கா அணுகுண்டு வீசியது.

**ஆக.9:** அமெரிக்காவின் இரண்டாவது அணுகுண்டு, ஜப்பானின் நாகசாகி நகரின் மீது வீசப்பட்டது.

**ஆக.15:** ஜப்பான் சரண் அடைவதாக ஜப்பான் மன்னர் ஹிரோ ஹிட்டோ அறிவித்தார்.

**ஆக.28:** நேசபடைகளின் தளபதி மக்ஆர்தர், ஜப்பானுக்கு விரைந்தார்.

**செப்.2:** அமெரிக்காவின் மிசவுரி என்ற போர்க்கப்பலுக்கு ஜப்பானிய தளபதிகள் சென்று சரணாகதி பத்திரத்தில் கையெழுத்திட்டனர்.

(முற்றும்)



நீரின் கீழ்பல் லுலோகங்கள் ஆயினை,
நீரின் கீழெண் ணிலாநிதி வைத்தனை,
தலத்தின் மீது மலையும் நதிகளும்,
சாருங் காடுஞ் சுனைகளும் ஆயினை.

- சுப்பிரமணிய பாரதியார்

# பாப்பா முரசு

## ஆத்திசூடி

### பூமி திருத்தி உண்

நீ உண்ண உணவைத் தருகின்ற பூமியை உழுது பண்படுத்தி எருஇட்டு பேணி பயிர் செய்து விளைவைப் பெருக்கி உண்.

-ஔவையார்

எஸ். நிரஞ்சலா, கண்டி.

## நூல் கண்டு



முன்னொரு காலத்தில் பிரபல வியாபாரி ஒருவன் நிறைய பருத்தி நூல் கண்டுகளைத் தலையில் சுமந்தபடி சென்று கொண்டிருந்தான். அப்போது கடும் வெயில் என்பதால் வழியில் இருந்த புத்தர் கோயிலுக்குள் நுழைந்தான். தலையிலிருந்த மூட்டையைத் தரையில் இறக்கி வைத்தான். களைப்பினால் அங்கேயே படுத்து நன்றாகத் தூங்கிவிட்டான்.

சிறிது நேரம் கழித்து விழித்தான். தான் வைத்திருந்த மூட்டை திருட்டு போய்விட்டதை அறிந்து திடுக்கிட்டான்.

அந்த ஊர் நீதிபதியிடம் சென்று, "நீங்கள்தான் திருடனைக் கண்டுபிடித்து நான் இழந்த பொருளை மீட்டுத் தர வேண்டும்! என்று வேண்டினான்.

நீதிபதி என்ன செய்வார்? இவனது கவனக் குறைவால் பொருளை இழந்துவிட்டு நீதிபதியிடம் பொறுப்பை ஒப்படைத்து விட்டான்.

காவலர்களை அழைத்துக்கொண்டு புத்தர் கோயிலை அடைந்தார் நீதிபதி. அங்கிருந்த புத்தர் சிலையைக் காட்டி, இவர் தம் மக்களின் நலத்தில் அக்கறை எடுத்துக்கொள்ள வேண்டும். ஆனால், இவரிடத்தில் வைக்கப்பட்ட பொருள் திருட்டுப் போய் இருக்கிறது. ஆகவே இவர் தம் கடமையைச் செய்யவில்லை என்று தெரிகிறது. இவரைக் கைது செய்து நீதிமன்றத்திற்குக் கொண்டு வாருங்கள், என்று கட்டளையிட்டார்.

உடனே காவலர்கள் அந்தச்

**பாப்பா முரசு சிறுகதை**

சிலையை எடுத்து ஒரு பெரிய வண்டியில் வைத்து நீதிமன்றத்திற்குக் கொண்டு வந்தனர்.

இதை அறிந்த மக்கள், எப்படிப் புத்தர் சிலைக்கு நீதிபதி தண்டனை வழங்கப் போகிறார், என்று அறிய ஆர்வம் கொண்டனர். எல்லாரும் கூட்டமாகச் சத்தம் போட்டபடி நீதிமன்றத்திற்குள் நுழைந்தனர்.

அமைதி இல்லாமல் கூச்சலிட்டுக் கொண்டிருந்த அவர்களைப் பார்த்து கடுங்கோபம் கொண்டார் நீதிபதி. "என்ன நினைத்துக்கொண்டு எல்லாரும் இங்கு சிரித்துப் பேசிக் கொண்டு இருக்கிறீர்கள். புனிதமான நீதிமன்றத்தை அவமானம் செய்துள்ளீர்கள். அதற்காக உங்கள் அனைவருக்கும் அபராதமும் சிறைத்தண்டனையும் விதிக்கப் போகிறேன்", என்று கடுமையாகக் கூறினார்.

திகைத்த அவர்கள், "நீதிபதி அவர்களே! எங்களை மன்னித்து விடுங்கள், என்று கெஞ்சினர்.

ஆனால் அமைதி அடையாத நீதிபதி, "உங்களுக்குச் சிறைத் தண்டனை தரப் போவது இல்லை...நீங்கள் செய்த குற்றத்திற்கு அபராதமாக ஆளுக்கொரு பருத்தி நூல் கண்டு மூன்று நாட்களுக்குள் தர வேண்டும். தராதவர் யாராக இருந்தாலும் கைது செய்யப்படுவர்", என்று சொல்லி அவர்களை அனுப்பி வைத்தார்.

நீதிமன்றத்திற்கு அபராதமாக ஏராளமான நூல் கண்டுகள் வந்து சேர்ந்தன. அவற்றை ஆராய்ந்த வணிகன் தன்னிடம் திருடு போன நூல் கட்டு ஒன்றும் அவற்றில் இருப்பதைக் கண்டுபிடித்து நீதிபதியிடம் சொன்னான்.

இதைக் கொண்டு நீதிபதி எளிதாகத் திருடனைக் கண்டுபிடித்தார். திருடனிடம் இருந்து நூல் கண்டுகளை மீட்டு வணிகனிடம் தந்தார். நீதிமன்றத்தில் இருந்த நூல் கண்டுகளை உரியவர்களிடம் மீண்டும் சேர்த்தார்.

எல்லோரும் நீதிபதியின் அறிவுக்கூர்மையைப் பாராட்டினார்கள்.

## கடும் பகல்



உச்சந் தலை
பிளந்திடவே
ஓங்கி வெயில் அடிக்கும்!
உடைமுழுவதும்
நனைந்திடவே
உடல் வியர்வை
வடிக்கும்!

நச்சரிக்கும் தாகத்தினால்,
நாவறட்சி எடுக்கும்!
நல்ல குளிர்ப் பானம்தேடி
நடக்கச் சொல்லி
முடுக்கும்?

கச்சிதமாய்ச்
செருப்பணிந்தோர்
கால்கள் சூட்டைப்
பொறுக்கும்!
கையில் குடை
பிடித்திலாரைக்
கானல் வாட்டி வறுக்கும்!

பச்சை மரம் செடி
கொடிகள்
பயிர் முகத்தைக் கருக்கும்!
பாய்ந்து வெள்ளம்
பெருகிடவே
பனிமலையை உருக்கும்!

எச்சரிக்கை யாகக்
காற்றும்
எட்டிப் பார்க்க மறுக்கும்!
இழுத்துவிடும் சுவாச
மூச்சில்
எரிமலையே பிறக்கும்!

அச்சப்பட்டுக் கடலையும்
ஆர்ப்பரிக்க மறக்கும்
அந்தி வரை கடும்
பகலின்
ஆட்சிக் கொடி பறக்கும்!


## அதிசய உலகம்

### ஜாட்ரோபா



ஜாட்ரோபா எனப்படும் தாவரம் தென் அமெரிக்காவில் உள்ளது. 5 மீட்டர் உயரம் வளரும். வெளிர் பச்சை இலைகளைக் கொண்டது. இந்தத் தாவரத்தின் விதைகள் தான் மிகவும் முக்கியமானவை. இவற்றில் இருந்து தயாரிக்கப்படும் எண்ணெய் டை மற்றும் பயோ டீசலாகப் பயன்படுகிறது. விதைகள் முளைக்க 3-4 மாதங்கள் ஆகும். கறுப்பு விதைகள் மிகவும் விஷத் தன்மை வாய்ந்தவை. இவற்றை வறுத்து கழுவிய பிறகே எண்ணெய் எடுக்கப் பயன்படுத்த வேண்டும். இதன் கிளைகளில் இருந்து கிடைக்கும் வேடக்ஸ் எனப்படும் ஆல்காய்ட், கேன்சர் செல்களைக் கொல்கிறது. ஜாட்ரோபாவின் வேர்கள் பாம்பு கடிக்கு மருந்தாகிறது. சூப்பர் ஜாட்ரோப.


## டாபினியா தெரியுமா?



டாபினியா என்பது நன்நீர் நிலைகளில் காணப்படும் ஒரு உயிரினம். படத்தில் இருக்கும் இது குதித்துக் குதித்து நடக்கும். பெண் டாபினியாக்கள், ஆண் டாபினியா இல்லாமலே கருத்தரிக்கும். பெண் டாபினியாக்கள் இளம் பருவத்தை அடைந்ததும் 100 முட்டைகளை மூன்று நாள் இடைவெளியில் உற்பத்தி செய்யும். இப்படியும் எட்டு நாட்களுக்கு ஒரு முறை முட்டை இடும். டாபினியாவின் இளமைப் பருவம் முடியும் வரை நல்ல வெப்ப நிலையும், நல்ல உணவும் கிடைத்தால் முட்டையிடுதல் நடை பெற்றுக் கொண்டே இருக்கும்.

சில வேளைகளில் ஆண் டாபினியாவின் உதவியுடனும் கரு முட்டைகள் உருவாகும். இவை கடின ஓடுள்ள நீர்வாழ் பிராணிகள். கடற்பாசிகளைத் தின்று உயிர்வாழும்.

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்தினை இணைத்து வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றிற்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 30.05.2006

**வர்ணம் தீட்டும் போட்டி இல. 645**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
**கொழும்பு**

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 643

**பரிசுக்குரியவர்:**
**கி.சர்தசன்,**
**'திருவேரகம்', 199/57, தும்புறுகிரிய வீதி, ஹட்டன்.**

**பாராட்டுக்குரியவர்கள்:**

| | |
|---|---|
| செ.ரவிவர்மன், 28 B, நகர நபை விடுதி, குருமன்காடு, வவுனியா. | த.திவ்யா, புதிய தெரு, உப்புக்குளம், மன்னார். |
| ஏ.ஜெ.பாத்திமா, மகாபுத்கமுவ, முல்லேரியா. | ரா.திவ்யா, 175, லோவர் வீதி, பதுளை. |
| மர்ஸியா நாபிர், 11/2 A, பாகிர் மாகார் அவனியூ, மருதானை, பேருவளை. | ஸ்ரீ வர்மன், புதிய கட்டிடத் தொகுதி, கொச்சிக்கடை. |
| எம்.ஏ.எப். அல்தாப், தரம் 4 C, அஸ்ஹர் மத்திய கல்லரி, மாத்தளை வீதி, அகுரணை. | வீ.மயூரன், வீடமைப்புத் திட்டம், ஹிம்புட்டான, முல்லேரியா. |
| டிவின்ஸ்ரன் டேவிட் ரவிக்குமார், 82, புதிய செட்டி தெரு, கொழும்பு 13. | நா.வின்சன் சர்வீன், வெளிவட்ட வீதி, வவுனியா. |

## உங்கள் பொது அறிவு எப்படி?

### நாடுகளும் தலைநகரங்களும்

| | |
|---|---|
| 1. ஸ்கொட்லாந்து | - எடின்போக் |
| 2. லக்சம்போக் | - லக்சம்போக் |
| 3. ருமேனியா | - புச்சாரெஸ்ட் |
| 4. லெபனான் | - பெய்ரூட் |
| 5. அங்கோலா | - ருவாண்டா |
| 6. மொறாக்கோ | - றபட் |
| 7. கானா | - அக்ரா |
| 8. எல்சல்வடோர் | - சான் சல்வடோர் |
| 9. நிக்கரகுவா | - மனக்குவா |
| 10. ஜமேக்கா | - கிஹ்ஸ்ரன் |
| 11. கொலம்பியா | - பொகோட்டா |
| 12. நியூசிலாந்து | - வெலிங்டன் |

# தகவல் பெட்டி

## நாயும் புலியும்



**வினேய்** நாட்டின் மிருகக்காட்சிசாலை ஒன்றிலேயே இவ்வபூர்வம் நிகழ்ந்து வருகிறது. சிறு வயதிலேயே தனது தாயைப் பிரிந்த புலிக்குட்டி ஒன்று, நாய் ஒன்றிடம் பால் குடித்து, அந் நாயின் ஒன்பது குட்டிகளுடன் தானும் பத்தாவது குட்டியாக சேர்ந்து வாழ்ந்து வருகிறது. இப் புலிக்குட்டியையும் தங்கள் குடும்பத்தில் ஒருவர் போலவே கவனித்து வருகிறதாம் தாய் நாய்.

## வெள்ளைக் கண்ணீர்

**சாதாரண** மனிதர்களுக்குக் கண்ணீர் தண்ணீர் போலத்தான் வரும். ஆனால் சீனாவில் இருக்கும் நென்ஜிங் பிரதேசத்தில் இருக்கும் பலங்குடி இனத்தவர்களுக்கு அவர்களின் தேச சுவாத்தியம் காரணமாக கண்ணீர் வெள்ளை நிறத்தில் அதாவது பால் போல வருமாம்.




## புனிதப் பாம்புகள்



**இத்தாலி** நாட்டின் கொக்குலோ பிரதேசத்தில் உள்ள தேவாலயம் ஒன்றில் நடக்கும் அபூர்வ விழா ஒன்றில் இப் படம் பிடிக்கப்பட்டது. தேவாலயத்தில் காணப்படும் சென் டொமினோகோ எனும் தெய்வத்தினைப் பாம்புகளால் அலங்கரிப்பது இவர்களின் மரபு வழி நிகழ்வாகும்.

## செம்பியன் சிம்பன்சி


**டார்சன்** மற்றும் டொக்டர் டூர் ஆகிய படங்களில் நடித்து பிரபல்யமான இந்த சிம்பன்சி குரங்கு, தனது 74ஆவது பிறந்தநாளை விமர்சையாகத் தனது இல்லத்தில் கடந்த வாரம் கொண்டாடியது. கேக் வெட்டியும், விஸ்கி குடித்தும் சிறப்பித்த இச் சிம்பன்சி குரங்கு விஸ்கி குடிப்பதற்கு சவூதி அரேபியாவில்தான் பழகியதாம். இக் குரங்குதான் அதிகளவில் சினிமாப் படங்களில் நடித்த பெருமைக்குரியது.



**படத்தில்** இருக்கும் தம்பதியர் இருவரும் அவர்களின் சின்னப் பையனும் சேர்ந்து எடுத்த இறுதிப் படமே இது. இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த இவர்கள் இங்கிலாந்தில் உள்ள ஒரு புகையிரத நிலையத்திற்குள் செல்லும்போது புகையிரத நிலையத்தின் வாசலில் இருந்த பாதுகாப்பு கெமராவின் மூலம் இப்படம் பதிவாகியது. உட்சென்று சில நிமிடங்களில் நடைபெற்ற புகையிரத விபத்தில் தாயும், தந்தையும் ஸ்தலத்திலேயே உயிர் இழந்தனர். மூவருமாக சேர்ந்து எடுத்த கடைசிப் படமே இது.

## கடைசி நிமிடத்தில்






வடிவேலு
இம்சை அரசன் 23ஆம் புலிகேசி

## மலையாள வாசனை

'4 ஸ்டுடண்ட்ஸ்' படத்தில் கோபிகாவுடன் நடித்த பரத் அடுத்து 'காதல்' படத்தில் சந்தியாவுடன் ஜோடி சேர்ந்தார். இப்போது 'எம்டன் மகன்' படத்தில் கோபிகா, 'வெயில்' படத்தில் பாவனா, கூடல்நகர் சந்தியாவுடன் ஜோடி சேர்ந்து நடிக்கிறார். இவர்கள் அனைவருமே கேரள நாயகிகள். பரத்துக்கு மலையாள வாசனைதான் பிடிக்குமோ...?



## சினி பிட்ஸ்

மாதவன் எடையைக் குறைக்க லண்டன் சென்றுள்ளார்.

தண்டாயுதபாணி படத்தில் கதாநாயகியாக அறிமுகமாகும் ஷிவானி பிளஸ்-2 பரீட்சை எழுதி முடிவுக்காகக் காத்திருக்கிறார்.

பொறி படத்துக்காக ஏவி.எம்.ஸ்டுடியோவில் திருவல்லிக்கேணி, மயிலாப்பூர் கடை வீதிகள் போன்று செட் அமைக்கப்பட்டுள்ளது. இதன் செலவு ரூ.35 லட்சமாம்.

சினிமாவில் ஆர்வம் இல்லாத ஷாமிலி கம்ப்யூட்டர் சயன்ஸ் படிக்கிறார்.

தனுஷ் நடிக்கும் புதுப்பேட்டை தமிழ், தெலுங்கில் ஒரே நேரத்தில் ரிலீஸ் ஆகிறது.

## காமெடி போட்டி

எம்.ஜி.ஆர். - சிவாஜி படங்களை திரையிடுவதில் கடும் போட்டி இருந்தது. இரண்டு நாயகர்களின் படமும் ஒரே நாளில் வெளியாகும். இரசிகர்களிடமும் உற்சாகம் கரைபுரண்டு ஓடும். ரஜினி - கமல் படங்கள் ஒரே நாளில் திரைக்கு வருவதும் இரசிகர்களிடம் பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தும்.

இந்தப் போட்டி இப்போது காமெடி நாயகர்களிடமும் ஏற்பட்டுள்ளது. வடிவேல் கதாநாயகனாக நடித்துள்ள 'இம்சை அரசன் 23ஆம் புலிகேசி' படம் விரைவில் திரைக்கு வர இருக்கிறது. இதே நாளில் விவேக் கதாநாயகனாக நடித்துள்ள 'சொல்லி அடிப்பேன்' படத்தையும் திரையிட ஏற்பாடு நடக்கிறதாம். போட்டியில் வெற்றி பெறுவது யாரோ...?



நாசர்
நாளை

## கடலுக்கு அடியில் படப்பிடிப்பு

கலைப்புலி தாணுவின் மகன் கலா பிரபு இயக்கத்தில், பாக்யராஜ் மகன் சாந்தனு நடிக்கும் படத்தை வித்தியாசமானக் கலகலப்பான படமாக உருவாக்கத் திட்டமிட்டுள்ளனர். இத்தாலியில் ஒரு பாடல் காட்சியைப் படமாக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. கடலுக்கு அடியில் அமைந்துள்ள ஆடல் அரங்கத்தில் இந்தப் பாடல் காட்சி படமாகிறது.

## இரசிகர்கள் எப்படி இருக்கனும்?

**தங்கள்** அபிமான ஹீரோவுக்கு பேனர் வைப்பது, கொடி கட்டுவது என சுற்றித்திரியும் இரசிகர்களுக்குப் புத்தி சொல்வது போல் வருகிறது ரசிகர் மன்றம் படம். இதற்கு கதை, திரைக்கதை எழுதி இயக்குகிறார் புகழேந்தி தங்கராஜ். நடிகர்களைப் பார்த்து வியந்து போகாதே! ஒவ்வொரு இளைஞனும் ஹீரோதான்! என இந்தப் படம் மூலம் இரசிகர்களுக்குப் புத்தி சொல்கிறார்கள்.

## 'ஜில்' காதல் துயார்!

சூர்யா - ஜோதிகா ஜோடி சேர்ந்து நடித்த 'ஜில்லுன்னு ஒரு காதல்' படப்பிடிப்பு முழுவதும் முடிவடைந்து விட்டது. பின்னணி மற்றும் இசை சேர்ப்பு வேலைகள் தீவிரமாக நடித்து வருகின்றன. விரைவில் படத்தைத் திரையிடுவதற்கான ஏற்பாடுகள் நடக்கின்றன. 'படம் நன்றாக வந்திருக்கிறது' என்று மகிழ்ச்சி பொங்கக் கூறுகிறார் சூர்யா.



ஸ்ரீகாந்த் - பாவனா
கிழக்கு கடற்கரைச் சாலையிலே

## சூர்யாவை கவர்ந்தவர்

**ரிச்சர்ட்** நடித்துள்ள 'நாளை' படப் பாடல் கேசட் வெளியீட்டு விழாவில் முக்கிய விருந்தினராக சூர்யா கலந்துகொண்டு பேசினார்.

"வாரிசு என்பது ஒரு படத்துக்குத்தான் கைகொடுக்கும். திறமை இருந்தால்தான் திரை உலகில் நீடிக்க முடியும். ரிச்சர்ட் என்னை மிகவும் கவர்ந்தவர். நாங்கள் இருவரும் ஒரே ஸ்டண்ட் மாஸ்டரிடம்தான் சண்டைப் பயிற்சி பெற்றோம்; என்றாலும் ரிச்சர்ட் ஸ்டைல் எனக்கு மிகவும் பிடிக்கும். அதுபோல நடனத்திலும் அவர் திறமைசாலி..." என்று புகழ்ந்து தள்ளி விட்டார் சூர்யா.

## சிம்பு - நயன்தாரா டபுள் ஓ.கே.

**சிம்புவை** மணப்பதில் எங்களது வீடுகளில் எதிர்ப்பு இருக்காது. ஆனாலும் இப்போதைக்குக் கல்யாணம் கிடையாது என்று முதல் முறையாக சிம்பு குறித்து திருவாய் மலர்ந்துள்ளார் நயன்தாரா.

நெகு நெகு நாயகி நயன்தாராவுக்கும், விரல் வித்தையாளன் சிம்புவுக்கும் இடையே நட்பு அதிகமாகி, கல்யாணம் வரை அவர்கள் போய்விட்டார்கள் என சமீப காலமாக ஏகப்பட்ட வதந்திகள்.

இருவரும் கேரளாவில் வைத்துக் கல்யாணம் செய்துகொண்டு விட்டார்கள். சென்னைக்கு அருகே உள்ள ராகவேந்திரா கோவிலில் மாலை மாற்றிக் கொண்டு விட்டனர் என்றெல்லாம் கூட கோலிவுட்டில் கிளப்பி விட்டு வருகிறார்கள்.

இந்தச் செய்திகளை இருவருமே இதுவரை மறுக்கவில்லை. ஆனால் முதல் முறையாக சிம்புவுடனான தனது நட்பு குறித்து வாய் திறந்துள்ளார் நயன்தாரா.

இதுகுறித்து நயன்ஸ் கூறுகையில், "நானும், சிம்புவும் நட்பாகப் பழகி வருகிறோம்". அது உண்மைதான். இருவரும் நெருங்கிப் பழகுவது இரு வீட்டாருக்கும் தெரியும். யாரும் அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை. கல்யாணம் செய்து கொள்வது என்பது மிகப் பெரிய விஷயம். அதுகுறித்து இருவரும் பேசவில்லை. கல்யாணம் செய்து கொள்வதற்கு நிறைய அவகாசம் தேவை. எனவே இப்போதைக்குத் திருமணம் இல்லை. திருமணம் செய்து கொள்வதாக இருந்தால் அதற்கு இரு வீட்டாரும் மறுக்க மாட்டார்கள், தடுக்கமாட்டார்கள் என நம்புகிறேன்" என்று கூறியிருக்கிறார் நயன்தாரா.

இருவரும் நெருங்கிப் பழகுவது உண்மைதான். ஆனால் தாலி மட்டும் இன்னும் கட்டவில்லை என்பதை தெளிவுபடுத்தியுள்ளார் நயனா.

நயனா மேலும் கூறுகையில், கல்யாணம் செய்து கொண்டுவிட்டால் அதன் பிறகு சினிமாவில் நடிக்கமாட்டேன். குடும்பத்தில் மட்டுமே கவனம் செலுத்துவேன் என்றும் கூறியுள்ளார் நயன்தாரா.

இது குறித்து சிம்பு, "நானும், நயன்தாராவும் நெருங்கிப் பழகுகிறோம்; நட்பாக இருக்கிறோம். ஒருவர் மீது ஒருவர் அக்கறை காட்டுகிறோம்; சேர்ந்து வெளியிலும் செல்கிறோம். இதை நான் மறுக்க மாட்டேன். ஆனால் கல்யாணம் குறித்து இப்போதைக்கு யோசிக்கவில்லை. நாங்கள் காதலிக்கிறோமா என்று கூட எங்களுக்குத் தெரியவில்லை.

எது நடந்தாலும் எல்லோரிடமும் சொல்லி விட்டுத்தான் செய்வேன். மறைமுகமாக எதையும் செய்யமாட்டேன்" என்று பட்டவர்த்தனமாகக் கூறுகிறார்.






ஜீவா - பூஜா
பொறி

## தனிக்காட்டு ராஜா

**இசை** உலகில் தனிக்காட்டு ராஜாவாக இருக்கும் இளையராஜா, இப்போது தனி ராஜாவாகி இருக்கிறார். இளையராஜாவுடன் சேர்ந்து இருந்த மகன்கள் கார்த்திக்ராஜா, யுவன் சங்கர்ராஜா இருவரும் தனிக் குடித்தனம், தனித்தனி ரெக்கார்டிங் தியேட்டர் என்று போய் விட்டார்கள். மகள் பவதாரணியும் கணவர் வீட்டுக்கு சென்று விட்டார். இளையராஜாவும் அவர் மனைவியும் மட்டுமே வீட்டில் தனியாக உள்ளனர்.



ஹ்ரித்திக் ரோஷன்
க்ரிஷ்

## புதுமுகங்களின் டிப்-டாப்!

**துருதுருவென** ஜாலியாகச் சுற்றித்திரியும் இளம் இரத்தங்கள் பற்றிய காதல் கதை டிப்டாப்.

விஜய், சூர்யா வரிசையில் லயோலா கல்லூரில் பயின்று வரும் வாசன் கார்த்திக் என்ற மாணவர் டிப்டாப் படத்தில் கதாநாயகனாக அறிமுகமாகிறார். நடனக் கலைஞரான இவர், கல்லூரிகளுக்கிடையில் நடந்த நடனப் போட்டிகளில் மூன்று முறை தங்கப்பதக்கம் வாங்கியவர். சினிமாவுக்குத் தேவையான சண்டைப் பயிற்சிகளையும் பெற்றுள்ளார்.

வாசன் கார்த்திக் ஜோடியாக கல்கத்தா அழகி மிதுனா, நாயகியாக அறிமுகமாகிறார். அவர்களுடன் காமெடி பாத்திரத்தில் வடிவேலு, கருணாஸ் நடிக்கிறார்கள். இவர்களுடன் சீதா, டெல்லி-கணேஷ், இளவரசு, மயில்சாமி, முத்துக்காளை, விஜய்கணேஷ், கிரேன் மனோகர் நடிக்கிறார்கள். வில்லன் பாத்திரத்தில் மயில்ராயன் என்பவர் நடிக்கிறார்.

இசை - கார்த்திக்ராஜா, ஒளிப்பதிவு - கார்த்திக்ராஜா, நடனம் - பிருந்தா, சிவசங்கர், பாடல்கள் - பா.விஜய், கோட்டைக் குமார், கலைக்குமார், சண்டைப்பயிற்சி - சூப்பர் சுப்பராயன், எடிட்டிங் - மோகன்ராஜ், கலை - செழியன், தயாரிப்பு, நிர்வாகம் - குமார், கதை - திரைக்கதை - வசனம் - இயக்கம் : கே.கே.கிருஷ்ணன். இவர் இயக்குநர் பி.வாசுவிடம் இணை, துணை இயக்குநராக பணியாற்றியவர்.



ஷ்யாம் - நித்யாதாஸ்
மனதோடு மழைக்காலம்

## செல்வராகவனுடன் திருமணம் எப்போது? - சோனியா அகர்வால்

**டைரக்டர்** செல்வராகவனும், சோனியா அகர்வாலும் நெருங்கிப் பழகி வருகிறார்கள். கடந்த சில மாதங்களாக இருவரும் சேர்ந்து விழாக்களிலும், பொது நிகழ்ச்சிகளிலும் பங்கேற்கிறார்கள்.

இவர்கள் விரைவில் திருமணம் செய்துகொள்ள இருப்பதாக கோடம்பாக்கம் வட்டாரத்தில் கிசுகிசு பரவி உள்ளது.

இதுகுறித்து சோனியா அகர்வாலிடம் கேட்டபோது அவர் கூறியதாவது :-

"நானும் செல்வராகவனும் நான்கு வருடமாக ஒருத்தரை ஒருத்தர் புரிந்து கொண்டு பழகுகிறோம். எங்களுடைய நட்பு மென்மையானது. எங்கள் இருவர் குடும்பத்தாருக்கும் இது நன்றாகவே தெரியும்.

நாங்கள் இருவரும் விரைவில் திருமணம் செய்து கொள்வோமா என்று நீங்கள் கேட்டால் நான் இல்லை என்பேன். காரணம் திருமணம் பற்றி நாங்கள் சிந்திக்கவே இல்லை. திருமணத்துக்கு நான் அவசரப்படவும் இல்லை. இதுபற்றி நானும் செல்வாவும் கலந்து பேச வேண்டும். ஆனால் இதுவரை அதுபோன்ற திட்டம் எங்கள் இருவரிடமும் இல்லை.

நான் சினிமாவுக்கு முழுக்குப் போடப் போவதாகவும் வதந்தி பரப்புகிறார்கள். நான் எப்போதுமே புதுப் படத்தில் நடித்தால் இடையில் நான்கு மாதங்கள் இடைவெளி விட்டுத்தான் அடுத்த படத்துக்கு கால்ஷீட் கொடுப்பேன். புதுப்பேட்டை பட ரிலீசை தற்போது ஆர்வமாக நான் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன். அப்படம் வந்த பிறகுதான் வேறு படத்தில் நடிப்பது பற்றி முடிவு எடுப்பேன். சினிமாவை விட்டு விலக மாட்டேன்."

-இவ்வாறு சோனியா அகர்வால் கூறினார்.



ஷ்யாம் - சமிக்ஷா
மனதோடு மழைக்காலம்

## மாற்றம்

**நகைச்சுவை** நடிகர் கஞ்சா கருப்பு இப்போது மிகவும் மாறிவிட்டார். படங்களிலும் இவருக்கு முக்கிய வேடம் கிடைத்து வருகிறது. ஜித்தன் ரமேஷ் நாயகனாக வரும் 'மதுரைவீரன்' படத்தில் கஞ்சா கருப்பு இரட்டை வேடத்தில் நடிக்கிறார்.

மு ன ் பு சைக்கிளும், நடையுமாக ஸ்டுடியோவுக்குச் சென்ற கஞ்சா கருப்பு, இப்போது மாருதிகளில் வலம் வருகிறார்.



நவ்தீப் - அபர்ணா
நெஞ்சில் ஜில் ஜில்

## மாமா மாப்பிள்ளே - ஸ்ரேயா

மாமனார் ரஜினி, மருமகன் தனுஷ் ஆகியோருடன் மாறி மாறி நடித்து சூப்பராக பேலன்ஸ் செய்து வருகிறார் ஷ்ரேயா.

'மழை' நாயகியான ஷ்ரேயாவுக்கு தமிழ் நடிகைகள் யாருக்குமே அடிக்காத அட்டகாச அதிர்ஷ்டம் சிவாஜி படம் மூலம் கிடைத்தது.

நடித்து ஒரு சில படமே ஆகியிருந்த நிலையில், சூப்பர் ஸ்டாருடன் ஜோடி சேரும் வாய்ப்பு அவரைத் தேடி ஓடி வந்தபோது சந்தோஷத்தின் உச்சிக்குப் போய்விட்டார் ஷ்ரேயா.

வந்த வாய்ப்பை விடாத அவர், வேறு படம் எதையும் ஒத்துக்கொள்ளாமல் முழுக்க முழுக்க சிவாஜியில் மூழ்கிப் போய்விட்டார்.

சிவாஜியில் நடிக்க ஒப்புக்கொள்ளும் முன், தனுஷுடன் திருவிளையாடல் படத்தில் நடிக்க ஒப்பந்தமாகி இருந்தார் ஷ்ரேயா.

ஆனால் ரஜினியுடன் நடிக்கும் வாய்ப்பு வந்து விட்டதால் குழம்பிப் போனார் ஷ்ரேயா. ஒரே நேரத்தில் மாமனாருடனும், மருமகனுடனும் சேர்ந்து ஜோடியாக நடித்தால் நல்லா இருக்குமா என்று யோசித்த அவருக்கு, மாமனார்தான் முக்கியம் என்று கூறி, தனுஷ் படத்திலிருந்து விலக விருப்பம் தெரிவித்தார்.

ஆனால் விடவில்லை இயக்குனர் பூபதிபாண்டியன். இந்தப் படத்தில் நீங்கள்தான் நடித்தாக வேண்டும். வேறு யாரையும் போட எனக்கு விருப்பம் இல்லை. உங்களுக்காக நானும், தனுஷும் காத்திருக்கத் தயார் என்று கொக்கியைப் போட்டார்.

இந்த அன்புக் கொக்கியிலிருந்து விடுபட முடியாமல் தவித்த ஷ்ரேயா, ஷங்கரிடம் போய் எனது காட்சிகளை முடிக்க எத்தனை நாள் ஆகும் என்று கேட்டுள்ளார்.

அதை அனுசரித்து இத்தனை நாட்கள் காத்திருக்க முடியுமா என்று பூபதி பாண்டியனிடம் திரும்பி வந்துள்ளார் ஷ்ரேயா. அவரது கேள்விக்கு உடனேயே 'யஸ்' சொல்லி விட்டார் பூபதி. அதன்படி காத்தும் இருந்தார்.

இதோ, சிவாஜியில் ஷ்ரேயா சம்பந்தப்பட்ட காட்சிகள் கிட்டத்தட்ட முடிந்து விட்டதாம். இதனால் கொஞ்சம் .'ப்ரீயாகிவிட்ட ஷ்ரேயா, இப்போது தனுஷுடன் நடிக்க ஆரம்பித் துள்ளார்.

இரண்டு பேருடனும் நடிக்கும்போது என்ன வித்தியாசம் என்று ஒருவர் ஷ்ரேயாவிடம் கேட்டால், "ரஜினி சாருடன் நடிக்கும்போது ரொம்ப டென்ஷனாக இருக்கும். ஒருமுறை அவருடன் டான்ஸ் ஆ ட வேண்டி வந்தபோது, ரொம்ப பயந் துவிட்டேன். ரஜினி சார்தான் கூல்பண்ணி நடிக்க வைத்தார். அதை மறக்க முடி யாது. தனுஷுடன் நடிக்கும்போது பயம் இல்லை. மாறாக, ஜாலியாக நடிக்கிறேன். ஒரே நேரத்தில் இரு வருடனும் நடித்து வருவது மறக்க முடியாத அனுபவம்" என்றார் புல்லரித்துப் போய்.

மாமனார், மருமகன் என மாறி மாறி நடித்துக் கொண்டிருக்கும் ஷ்ரேயாதான் இப்போதைக்கு கோலிவுட்டின் டாக் ஆப் த 'டங்'!



நயன்தாரா

## ரஜினி இரசித்த பாடல்

**ரஜினியின்** 'சிவாஜி' படப்பிடிப்பு வேகமாக நடந்து வருகிறது. இந்தப் படத்தில் மொத்தம் 6 பாடல்கள் இடம் பெறுகின்றன. இதில் 3 பாடல்களுக்கு ஏ.ஆர்.ரகுமான் இசை அமைத்துள்ளார். இதில் ஒரு பாடலுக்கான காட்சியில் ரஜினி - ஷ்ரேயா ந்டித்திருக்கிறார்கள்.

இதுவரை இசை அமைக்கப்பட்டுள்ள 3 பாடல்களையும் இரசித்துக் கேட்ட ரஜினி நன்றாக இருக்கிறது என்று பாராட்டியுள்ளார். மீதம் உள்ள பாடல்களுக்கும் வித்தியாசமாக இசை அமைக்கும் முயற்சியில் ஏ.ஆர்.ரகுமான் ஈடுபட்டுள்ளார். 'சிவாஜி' படப் பாடல்கள் மீண்டும் மீண்டும் ஒலிக்கும் ரகமாக இருக்க வேண்டும் என்பதில் டைரக்டர் ஷங்கரும் அக்கறை காட்டி வருகிறாராம்.



சக்கரக் கட்டி

# முகம்

எங்கு
தேடினாலும்
தெரிவதில்லை
உன் அழகு
முகம்.

மழை
மேகத்தின்
இருண்மைக்குள்
பார்த்துப்
பார்த்து
சலித்துப் போன
தோற்றங்களுக்குள்
புதையும்.

என்
சிந்தனைகள்
மூச்சுக்கள்
முயற்சிகளின்
உயிர்களை
உருவி
உயரப் பறந்து
உதிரும்.

நட்சத்திரங்களைப்
பொறுக்கித் திரியும்
நிலவுக்குப்
பின்னாலும்
ஒளிரும்.

பார்வையில்
உணர்வுகளில்
கனவுகளிலெல்லாம்
அசையும்.

தனிமையின்
கொடுங்கரங்களில்
தாகத்தின்
பெருமூச்சுகளில்
முறுகும்.

ஆயினும்
என்
உட்கிடக்கைகளை
உரசிப் பார்க்கும்
சுதந்திரம் உனது.

அதனால் ....
கற்பனைக்குள்
எங்கு தேடினாலும்
தெரிவதில்லை
உன் அழகு
முகம்.

-ஸபீர் ஹாபிஸ்.

## மௌனக் கண்ணீர்....!

நான் கொழுந்தை ஆயும்
ஒவ்வொரு தடவையிலும் - என்
பெருவிரலுடன் சுட்டுவிரல்
ஸ்பரிசித்து மீள்கின்றது.
பலமுறை வந்து மோதும்
பலமான தொடுகையில்
இதமில்லை என்றாலும்
ஒன்றையொன்று இம்சிக்காமல்
ஒத்துழைத்து உழைக்கின்றது.
பல்லாயிரம்முறை இணைந்து பிரிந்து
தேய்ந்து போன அதே
விரல்களிலேயே ஊதியத்தையும்
எண்ணிப்பார்க்கின்றேன்
விரலோர கறை வெடிப்புகளில்
மௌனக் கண்ணீராய்
சீழ் வடிகின்றது.

-பிரவீனா செல்வராஜா,
ஹாலி - எல.




## இராக்குடி(சை)யான்

பௌர்ணமி நிலவும்
பனித்துளிகளின்
பிந்திய வரவும்
என் குடிசை இல்லிகளை
தடவிக்கொண்டிருக்கும்.

நள்ளிரவு தாண்டி
அடுப்பெரிவும் என் வீடும்
கிணாடுகள் கக்கும்
புகைமூட்டமும்
நுளம்புகளின் வரவினை
வெருட்டிக்கொண்டிருக்கும்.

கிராமத்தின்
அமைதி கனத்து
வேளைக்கஞ்சிக்காய்
என் வயிறு படும் பாடு
விழித்து விழித்து
காந்திக் கொண்டிருக்கும்.

சில்வண்டின் ஓசைகளும்
நிஷப்தநேரத்து
குறட்டையொலிகளும்
என் வீட்டின்
இதமான ராகங்களாய்...
செவிகளில் - ஊறிச்செல்லும்.

அப்புறந்தான்...
நீண்ட நேரத்துப்
பிரயத்தனங்களும்
விரகதாபத்து - என்
வேளைக்கஞ்சியும்
தெம்புகொடுத்து - என்னை
உறங்கவைக்கும்.

-செமீன் தம்பி லெப்பம்,
-கல்முனை - 06.

## இருதயப் பிளவுகள்

பார்வைகள் கிழித்த
ரணங்கள்
ஆறுவதற்குள்
வார்த்தைகளால்
விராண்டுகிறாய்.

கழுத்தறுபட்ட - ஒரு
கோழியின் தவிப்பில்
படபடத்து
துடிக்குது இதயம்.

இதழ் பிரியாத - உன்
புன்னகையால்
என் - இருதயப்
பிளவுகளிடையே
இரத்த ஆறு
ஊற்றெடுக்கும்.

மரத்துப் போன
என் மனசுக்கு
உன்னை
மறக்க முடியாத
மரணவலிதான்
பிடித்திருக்கிறது.

முடிந்தால் - என்னை
அடிக்கடி திட்டு!
புரையேறியாவது
பூரித்துப் போவேன்.

-சிஹ்னாஸ் தௌபீக்,
ஹஸைனியாபுரம்.

## 'நீயும் ஒரு மனிதனா...?

வாலிபத்
தெறிப்புகளில்
வழுக்கி விழுந்த
நினைப்புகளில்
ஏங்கித் தவிக்கிறது
இதயம்...!

இருட்டுத் தனத்தில்
குருட்டு நடையில்
கோடுகள் மீறி
மனங்கள் கீறி
நடந்தவன் நான்...!

அதனால்...
குற்றவாளியாகவே
கூறுகிறது
உலகம்...!

சனங்களின்
மனங்களில்
ரணங்களை
விதைத்தவனாம்...!

பண்படுத்தப் போய்
பலரதும்
இதயங்களைப்
புண்படுத்தியவனாம்...!

குழி தோண்டும்
கொள்கையாலும்
குப்புற விழுத்தும்
எண்ணத்தாலும்
குடும்பங்கள்
பலதை
அடி
சாய்த்தவனாம்...!

சமூகத்தைச்
சரிப்படுத்தப்
பிறந்து.....
நெறிப்படுத்த
மறந்து.....
நரகத்தில் நடந்து
சகலதையும்
சிதைத்தவனாம்...!

இத்தனைக்கும்
இடையே...
'நீயும் ஒரு
மனிதனா...!'
இப்படித்தான்
கேட்கிறது
இப்பொழுது
என் இதயம்.

-கனிமுத்து
வெல்லபதியான்.

# கவிதை எழுதுதலும் வாசித்தலும்

[பயிற்சிக் களம்]

## சிறப்புக் கவிதையும் - கவிஞரும்

இந்திய தமிழ் திரையுலகில் காலடி வைத்தவர்களில் சிலர் மங்கிப் போனதும் உண்டு சிலர் தன்னுடைய திறமையை உலகறிய வைத்தவர்களும் உண்டு அந்த வகையில் திரையுலகத்தில் காலடி வைத்து தன் புகழை உயர்த்திக் கொண்ட கவிஞர் மு.மேத்தா அவர்கள் எழுதிய சில கவிதைகளை உங்களுக்காக சிறப்புக் கவிதை எனும் பகுதியில் தருகின்றோம். இவரின் கவிதையில் இருக்கும் வித்தியாசத்தை நீங்கள் வாசிக்கும் போதே உணர்ந்து கொள்வீர்கள்.

## சுதந்திரக் குதிரை

எங்களிடமொரு
குதிரை
இருந்தது.

நாங்கள்
அயர்ந்த
சமயத்தில்
வந்த
அந்நியர்கள்
அதை
அபகரித்துக்
கொண்டார்கள்.

சுலபமாக
வசப்பட்ட குதிரை
அவர்கள்
சொன்னபடி
கேட்டது.

அப்போது
நாங்கள்
மயக்கத்திலிருந்தோம்!

கண்ணீரைத்
தெளித்தே
மயக்கத்தைக்
கலைத்தோம்
எங்கள்
குருதியைச்
சொரிந்தே
ஒரு யாகத்தை
வளர்த்தோம்!

செங்கோட்டையில்
எங்கள் கொடி
ஏறியபோது...

எங்கள்
குதிரையிலிருந்து
அவர்கள்
இறங்கினார்கள்.

இழந்த குதிரையை
அடைந்து
விட்டோமென்ற
எக்களிப்போடு
பாய்ந்தேறி
அதன்மீது
பயணம்
தொடங்கினோம்...

காலங்கள்
கொஞ்சம்
கடந்த பிறகு
எங்கள்
முதுகெலும்புகள்
முறியத்
தொடங்கின.

காரணம்
தெரியாமல்
கலங்கினோம்.

கூட்டங்கள்
போட்டோம்
மாநாடு கூட்டினோம்

எலும்புகள் முறிகிற
சத்தம்
காதில் விழாதபடி
கைதட்டினோம்.

கடைசியில் ஒரு
வழியாகக்
கண்டு பிடித்தோம்.

குதிரையின் மீது
நாங்கள்
சவாரி
செய்யவில்லை...
எங்கள் மீதுதான்
அது
சவாரி செய்கிறது
என்று!

முரசின் கவிதை பயிற்சிக்களம் பகுதியில் புதிய கவிஞர்களின் வெளியீடுகளை அறிமுகப்படுத்த முரசு களம் அமைத்துக் கொடுக்கின்றது. தமது கவிதை வெளியீடுகளை அல்லது வெளியிடப்படவிருப்பவற்றை வெளிக் கொண்டுவர விரும்புவோர் முரசுடன் தொடர்பு கொள்ளலாம்.

## வெளிச்சம் வெளியே இல்லை

எங்கு வேண்டுமானாலும்
இருந்துவிட்டுப் போகட்டும்
இருட்டு.

ஒருநாள் இல்லாவிட்டாலும்
ஒருநாள்
ஒளியின் கால்கள்
அதை
உதைத்து விரட்டும்.

எங்கு வேண்டுமானாலும்
இருந்துவிட்டுப் போகட்டும்
இருட்டு.

ஒருபோதும்
இடம் கொடுக்காதே
உன்
உள்ளத்தில் மட்டும்!

## கையும் பொய்யும்

இன்று -
புரியாதவர்கள்
சொல்கிறார்கள்
அது
பொய்க் கை
என்று.

அந்தக் கை
அந்த வலது
கை...
அன்னை நீட்டிய
சிலேட்டில்
அகரம் எழுதியது
அப்பாவின்
கைபிடித்து.
அசைந்து
நடந்தது.

பார்வை மங்கிய
கடக்க முடியாமல்
திண்டாடிய போது
ஆதரவாய்ப் பற்றி
அழைத்துச்
சென்றது.
வேலையைத் தேடி
விண்ணப்பம்
போட்டது.

அந்த வலது
கை...
நியாயம் கேட்கத்
திரண்டெழுந்து
நடந்த
ஊர்வலத்தின்
நடுவில்
ஓங்கிக் கொடி
பிடித்து
உயர்ந்தது.

தென்றல்
மெதுவாகத்
தீண்டுவதைக்
கூடத்
தாங்க
முடியாமல்
பூக்கள்
தலைகுனியும்
சோலையில்
காதல்
இளவரசியின்
கைபிடித்து
வசந்தத்தை
நோக்கி
வழி நடத்தியது.

அந்த வலது
கை...
ஒருநாள்
பக்கத்து
வீட்டுக்காரரின்
பச்சைக்
குழந்தை மலர்
ஒரு
பேருந்துச்
சக்கரத்தின்
கீழே
நசுங்கப்
போனபோது
பாய்ந்து
குழந்தையைப்
பற்றி
இழுத்துவிட்டுப்
பலியாகத்
தன்னையே
கொடுத்துத்
துண்டுபட்டு
விழுந்து
துடிப்படங்கியது!

இன்று
புரியாதவர்கள்
சொல்கிறார்கள்
அது
பொய்க் கை
என்று.

பொம்மை
போல்
செயற்கையாய்ப்
பொருத்தப்
பட்டிருந்தாலும்
அந்தக் கை
அந்த வலது
கை
அதுதான்
கை!

சுட்டிக் கேலி
செய்யும்
சோதரர்
தோள்களில்
தொங்கிக்
கொண்டு
இருப்பதுதான்
வெறும்
பொய்.

# புதிய கிரகத்து புலம்பல்கள்...!

காற்று மண்டலத்தில்
உன்னோடு
நிறைய
நட்சத்திர மொழி
கொஞ்சம்
சூரியத் தழுவல்...!

மேகம் கிழித்து
மேலாடை - உன்
புலன்களாலே -
எனக்கு
புத்திமதி
ஓசோன் கதிர்களில்
உனக்கு
ஒற்றையடி பாதை...!

என்
வெப்ப
வலயத்திலெல்லாம்
உன்
ஈரச் சுவாசம்
என்
சதுப்பு
நிலத்திலெல்லாம்
உன்
சலங்கை ஒலி...!

வல்லரசாகும்
விழிகள் பற்றியும்
ரணமாகும்
மௌனங்கள் பற்றியும்
- என்
மேல் நீதிமன்ற
முறைப்பாடுகள்...!

என் அத்துமீறல்களில்
மின்னலின்
மிரட்டலில்
கண்களை
காயப்படுத்து...!

உறங்கும் போதும்
என் காது
மடலுக்குள்
உன்
காபனீரொட்சைட்
கசிந்து கொண்டே
இருக்கட்டும்...!

இது
அனார், சலீமின்
அஸ்திவாரங்
களிலிருந்து
கிளைவிட்டு
நாகரீகம் பேசும்
அழுகுப்படியாத
ஆசைகள்...!

-புத்தளம்
நஸீம்குமி.

## பெரிய ஐஸ்கிறீம் படகு




மிகப் பெரியளவிலான 'ஐஸ்கிறீம் படகு ஒன்றினை சுவீடன் நாட்டைச் சேர்ந்த ஒரு ஐஸ்கிறீம் தயாரிப்பாளர் தயாரித்துள்ளார். கிட்டத்தட்ட 594.5 கிலோகிராம் ஐஸ்கிறீமினை தயாரித்துள்ளனர். இதில் 135 கி. கிறீம், 74 கி. சீனி, 72 கி. ஸ்ரோபரி, 54 கி. சொக்கலட், 252 கி. பால், 7.5 கி. பிஸ்கட் என்பன பயன்படுத்தப்பட்டனவாம்.

## பெரியளவிலான கறி



அப்துல் சலாம் எனப்படும் இங்கிலாந்தைச் சேர்ந்த தலைமை சமையல்கலை நிபுணர் ஏதாவது புதிதாக சாதனை செய்ய வேண்டும் என்று எண்ணி மரக்கறி கறி ஒன்றினை தயாரித்தாராம். கும்மாவல்ல 3,106.5 கிலோ கிராமாம். இக்கறியினை இவர் 7,500 பேர்களுக்கு பரிமாறினாராம். இதற்காக இவருக்கு 6,700 அமெரிக்க டொலர்கள் தான் செலவாகியதாம். மலிவாக ஒரு சாதனை செய்தார் பார்த்தீர்களா?

## பெரிய தேயிலைப் பை




தேநீர் தயாரிக்கும் போது பயன்படுத்தப்படும் தேயிலையினை போட பயன்படுத்தப்படும் பையினை பெரியளவில் தயாரித்து சாதனை ஒன்றை நிலைநாட்டியுள்ளது லிப்டன் நிறுவனத்தினர். கிட்டத்தட்ட 3.18 மீட்டர் நீளமுடையதும் 2.21 மீட்டர் அகலமுடையதும் 8.9 கி.கி. நிறையுடையதுமான இத் தேயிலை பையினை உண்மையான ஊடுபுகவிடும் பேப்பரினால் தயாரித்தார்களாம்.




# பெற்றோரின் மன நிலை

அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சி முன்னெப்போதையும் விடப் பல மடங்கு பெருகி விட்டது.

இன்றைய அறிவியல் சாதனங்கள் உலகையே ஒரு வளையத்திற்குள் கொண்டு வந்துவிட்டன. தொழில்நுட்ப வளத்தால் நாடும் படுவேகமாக முன்னேறி வருகிறது.



நம் இளைஞர்களும் அந்த வளர்ச்சிக்கு ஈடுகொடுத்து சுயவளர்ச்சியில் தம்மை ஈடுபடுத்திக் கொள்ளவேண்டும்.

இதற்கு அடிப்படையாக நல்ல கல்வியறிவு பெற வேண்டும். இந்தக் கல்வியறிவை அவர்களுக்குக் கொடுத்து போட்டி நிறைந்த இந்தவுலகில் ஒரு நல்ல நிலையை குழந்தைகள் பெற பெற்றோர்கள் பெரும்பாடுபடுகின்றனர்.

நல்ல அடிப்படைக் கல்வி, பின் குடும்பப் பொருளாதாரச் சூழ்நிலைக்கேற்ப உயர்கல்வி அல்லது தொழிற் கல்வி என்று தாம் பெற்ற பிள்ளைகளுக்கும், பெண்களுக்கும் ஒரு நல்ல எதிர்காலத்தை அமைத்துக் கொடுக்கப் பெற்றோர்கள் பல வழிகளில் தம்மாலான முயற்சிகளைச் செய்து குழந்தைகளின் நலனில் பெரும் அக்கறை செலுத்துகின்றனர்.

ஆனால் இவ்வாறு வளர்ந்துவரும் பிள்ளைகளின் கவனத்தைத் திசை திருப்புவதுபோல் பல சாதனங்கள் பெருகிவிட்டன. எங்கே பிள்ளைகளின் கவனம் சிதறிவிடுமோ என்று பெற்றோர்களுக்கு கவலை உண்டாவது இயற்கைதானே?

தொலைக்காட்சி, திரைக்காட்சி கம்யூட்டர் மூலம் இன்டர்நெட் (இணைய தளங்கள்) செல்போன் என்று ஒன்றன்பின் ஒன்றாகப் பல சாதனங்கள் வந்துவிட்டன.

இவற்றை முற்றிலும் இடையூறு என்று கூற முடியாது. இவற்றை ஆக்கபூர்வமான முறையில் அளவோடு பயன்படுத்தி முன்னேற்றம் காண்பதுதான் அறிவுள்ள செயல்.

வளரும் நிலையிலுள்ள இளைஞர்கள் எங்கே இதனால் பாதிக்கப்படுவார்களோ என்று பெற்றோர்கள் கவலைப்படுவதையும் பார்க்க முடிகிறது. வரவேற்பறைக்கே வந்துவிட்ட டி.வி.யில் பல விதமான நடனங்கள், நாடகங்கள், அதிலேயே அறிவை வளர்க்கும் பொது அறிவுச் சானல்களும் விளையாட்டுகளைப் பற்றிய காட்சிகளும் உள்ளன. இவற்றைப் பார்த்து மகிழும் மாணவர்கள் தாம் அதிகம்.

இன்று திரையரங்களுக்குப் போவது குறைந்து விட்டது என்றாலும் படக் காட்சியும் வீட்டிற்கே வந்துவிட்டதே! அடுத்த வாரம் தேர்வு, டி.வி.பார்க்காதே என்றால் பிள்ளைகள் கேட்பார்களா? நாமும் பார்க்காமல் அவர்களைத் தேர்விற்குத் தயார் செய்துகொள்ள உதவியாக இருக்கலாமே!

அடுத்தது தொலைபேசி, தொலைத் தொடர்பு சாதனமான இதை அளவாகப் பயன்படுத்துவது நல்லது. ஆனால் இன்று வளரும் பிள்ளைகள் இருக்கும் வீட்டில் பாதி நேரம் டெலிபோன் மணியடித்தபடி தான் இருக்கும் நண்பர்களுடன் அரட்டை அடிப்பதைக் கேட்டால், பாட சம்பந்தமாக சந்தேகம் என்பார்கள். அந்தப் போக்கை மாற்ற என்ன தீர்வு? வளரும் வயதில் அளவான கட்டுப்பாடு தேவைதான் என்று பெற்றோர்கள் நினைக்கிறார்கள். சில கல்லூரிகளில் வகுப்பறைகளில் செல்போன் உபயோகிப்பது தடை செய்யப்பட்டிருப்பது சரிதான் என்கிறார்கள் இவர்கள்.



அதேபோல பெண்களோ, ஆண்களோ மாணவர்கள் அணிந்துவரும் ஆடைகள் பிறரின் கவனத்தைக் கவரும் வகையில் இருக்கக்கூடாது என்று கல்லூரிகளில் தடை விதிப்பதில் தவறேதுமில்லை என்று நினைக்கும் பெற்றோர்கள்தான் அதிகம். பெரும்பாலான பிள்ளைகள் தவறுவதில்லை என்றாலும் பொதுவாக மற்றவர்களின் நன்மையும் யோசிக்க வேண்டாமா?

இதே நேரம் அடிப்படைப் பாலியல் கல்வி வளரும் நிலையில் உள்ள இளைஞர்களுக்கு மிகவும் தேவை என்றும் பெற்றோர்கள் நினைக்கிறார்கள். இதனால் பின்னால் விளையும் வீணான குழப்பங்களைத் தவிர்க்கலாம் என்கிறார்கள் இவர்கள்.



படிக்கும் பிள்ளைகள் உள்ள வீடுகளில் கம்ப்யூட்டர், இன்டர்நெட் வசதியில்லாத வீடுகள் குறைவு. அவர்களின் பாடங்களை நன்றாகப் புரிந்துகொள்ள அவர்களுக்குத் தரப்படும் திட்டங்களை சரிவரச் செய்து முடிக்க இன்டர்நெட் மூலம் இணையதளங்களை நாடுகிறார்கள் மாணவர்கள்.

அதே நேரம் தேவையில்லாத சில தளங்களுக்குப் போகும் வாய்ப்பும் தன்னாலேயே வருகிறது. கூடவே 'அரட்டை' தளங்களுக்குச் சென்று தெரிந்த, தெரியாத நண்பர்களுடன் மணிக் கணக்கில் அரட்டையடிக்க நல்ல வாய்ப்பு. இந்த வயதுக்கே உரிய எதையும் தெரிந்து கொண்டு விடுவது என்ற மனப்பான்மை போக்கை மாற்றி விடலாம். இதற்கு என்ன தீர்வு?

பொதுவாகவே வளரும் பிள்ளைகளை தேவையற்ற கட்டுப்பாடுகளை விதித்து, அவர்கள் அதை மீறும்போது அளவுக்குமீறித் தண்டிப்பதை பெற்றோரும் சரி, இளைஞர்களும் சரி, அவ்வளவாக விரும்புவதில்லை. எல்லைகள் என்ன என்பதைப் புரியும்படியாக உணர்த்தி, அளவோடு கண்டித்து, ஒரு நண்பர்போல் எடுத்துணர்த்தி, அவர்களோடு மனம்விட்டுப் பழகினால் நம்மிடமிருந்து எதையும் மறைக்கமாட்டார்கள் என்றுதான் பெற்றோர்கள் நினைக்கிறார்கள்.

பிள்ளைகளின் நண்பர்கள் குழு எப்படிப்பட்டது? நல்ல பழக்க வழக்கங்கள் கொண்டவர்கள் தானா என்று கண்காணிப்பதும் அவசியம். அதேபோல சங்கடம் நேர்ந்தால் புரிந்து கொண்டு உதவும் மனோபாவம் பெற்றோர்களுக்கு மிகவும் தேவை.

பிக்னிக், கோவில், கடற்கரை என்று விடுமுறை நாட்களை மகிழ்ச்சியாகக் கழிக்க நாமே அவர்களைக் கூட்டிக் கொண்டு போனால் நண்பர்களுடன் வீணாகச் சுற்றுவதைத் தவிர்க்கலாம்.

சூழ்நிலையில் பல மாற்றங்கள் நேர்வது தவிர்க்க முடியாதது. ஆனால் வீட்டில் நல்ல சூழ்நிலை அமையும்போது இளைஞர்கள் வழி தவற மாட்டார்கள். அதை அவர்களுக்கு அமைத்துக் கொடுப்பது பெற்றோரின் கடமை.


# அழகான முகம் வேண்டுமா?

பெரும்பாலான பெண்களின் அழகைச் சிதைப்பது முகப்பருக்கள்தான். இவை வராமல் தடுப்பதற்கு உணவுக் கட்டுப்பாடு அவசியம். எளிதில் ஜீரணம் ஆகக்கூடிய மென்மையான உணவுகளை உண்ண வேண்டும்.

பழங்கள், காய்கறிகள், கீரை வகைகளை உணவில் அதிகம் சேர்க்க வேண்டும். தண்ணீர் நிறையப் பருக வேண்டும்.

முகத்தில் எண்ணெய் வழியாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். பொடுகுத் தொல்லை இருந்தால் முறையான சிகிச்சை எடுத்து அதனைக் கட்டுப்படுத்த வேண்டும். அவ்வப்போது வெதுவெதுப்பான நீரில் முகத்தைக் கழுவி சுத்தப்படுத்த வேண்டும்.

முகப்பருக்கள் பல வகைகளில் தோற்றம் அளிக்கின்றன. இவற்றை மிக எளிதாக நீக்கி விடலாம்.



இதற்கு நீங்கள் செய்ய வேண்டியது இதுதான்:

கொழுந்து வேப்பிலையை தண்ணீரில் அரைத்து முகப்பரு இருக்கும் இடத்தில் பூசி 15 நிமிடம் கழித்து கழுவி விட வேண்டும்.

முகத்திற்கு மஞ்சள் பூசுவதை முடிந்தவரை தவிர்த்து விடுங்கள்.

இப்போதைய மஞ்சளில் அதிக அளவு ரசாயனத் தன்மை இருக்கிறது.

அது பலரது முகத்திற்குக் கேடு விளைவித்து விடும். அதுபோல எலுமிச்சம் பழ சாற்றை முகத்தில் தடவக் கூடாது.

ரத்த சந்தனப் பவுடர் கடைகளில் கிடைக்கும். அதனை பன்னீரில் குழைத்து முகத்தில் பூசி 15 நிமிடங்கள் கழித்து கழுவி விட வேண்டும்.

3 மாதங்கள் இவ்வாறு செய்து வந்தால் முகத்தில் பருத் தொல்லையே இருக்காது.



முகத்தில் பருக்கள் பெருமளவு உண்டாகி விட்டால், அதற்கு வெளியே கொடுக்கும் சிகிச்சை மட்டுமின்றி உள்ளேயும் சிகிச்சை அளிப்பது அவசியம்.

சில பெண்கள் முகப்பருவை கிள்ளி விடுவது, முரண்பாடான அழகு சாதனங்களை பயன்படுத்துவது, எலுமிச்சை பழத்தை முகத்தில் தேய்ப்பது போன்றவைகளால் முகத்தை ரணமாக்கி விடுகிறார்கள்.

அதிகமான வெப்பத்தால் நம் உடலில் உள்ள தண்ணீர் மிக வேகமாக ஆவியாகி உலர்ந்து விடுகிறது. இதனால்தான் நாம் சீக்கிரம் சோர்ந்து போகிறோம். இதை ஈடுகட்ட தினமும் 12 டம்ளர் தண்ணீர் குடிக்க வேண்டும்.

கோடையில் தினமும் 2 தடவை குளிக்க வேண்டும். குளிர்ந்த தண்ணீரால் அடிக்கடி முகம் கழுவினால் களைப்பு நீங்குவதோடு முகத்தில் உள்ள எண்ணெய் பசையும் நீங்கும்.

அப்படியும் சருமம் உலர்ந்திருப்பது போல் தோன்றினால் மாய்சரைசர் தடவலாம்.

வெயிலில் செல்வதற்கு முன் 'சன்ஸ்கிரீன்' லோஷன் தடவினால் சருமம் பாதிக்கப்படாது.

# வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி

## முரசு வாசகர்களுக்கான பரிசுப் போட்டி

**கேள்வி இல்லை! பதில் இல்லை!**
**பொருட் கொள்வனவு அவசியமில்லை!**
**வயது, பால் வேறுபாடின்றி வாசகர் பங்கு பெறலாம்!**

## முரசு வாசகர்களுக்கான பரிசுப் போட்டி

23

பெயர் : ..........

முகவரி : ..........

..........

..........

தே-அ- அட்டை இல : ..........

கையொப்பம் : ..........

உண்மை - நேர்மை - வெளிப்படைத்தன்மை

கூப்பனை அனுப்ப வேண்டிய கடைசித் திகதி:

30.05.2006

- ஒவ்வொரு வாரமும் அதிர்ஷ்டசாலி குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப் படுவார்.
- மேலேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் மட்டும் ஒட்டி அனுப்பினால் போதுமானது. (பிரதிகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது).
- ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களை அனுப்பலாம்.

*அனுப்பி வைக்க வேண்டிய முகவரி*

**வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி**
**முரசு பரிசுப் போட்டி - 23**
**தினமுரசு வாரமலர்**
**த.பெ.இல - 1772**
**கொழும்பு.**

பரிசுப் போட்டி இல - 21
**பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி**

**திருமதி செந்தில்குமாரி இராஜ்மோகன் சர்மா,**
**41, குளத்தடி வளவு, வெளிக்குளம், வவுனியா.**

அதிர்ஷ்டசாலி உடனடியாக எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

# சமைப்போம் சுவைப்போம்

*தொகுத்துத் தருவது* -ஷோபா-

## காய்கறி அல்வா

தேவையான பொருட்கள் :-

| | |
|---|---|
| பாசிப் பருப்பு | - 1 கப் |
| கோதுமை மா | - 1 கப் |
| நெய் | - 1 கப் |
| சீனி | - 1 கப் |
| முந்திரி | - 4 |
| ஏலக்காய் | - 5 |
| கேரட் | - 1 |
| பீட்ரூட் | - 1 |
| பச்சைப் பட்டாணி | - சிறிதளவு. |

செய்முறை :-

கேரட், பீட்ரூட்டை தோல் சீவி, பட்டாணியுடன் சேர்த்து வேகவிட்டு, மிக்சியில் அரைக்கவும் பாசிப் பருப்பையும் லேசாக வறுத்து, வேகவிட்டு, மிக்சியில் அரைத்துக் கொள்ளவும் சீனி[illegible]யை பொடித்து வைத்துக் கொள்ளவும்.

பாசிப் பருப்பு விழுது, காய்கறி விழுது, இரண்டையும் கலந்து ஒரு கப் நீர் விட்டு கரைக்கவும். ஒரு அடி கனமான பாத்திரத்தில் நெய்யை விட்டு கோதுமை மாவைப் போட்டு சிவக்க வறுக்கவும்.

வறுத்த மாவில் அரைத்த கலவையைக் கொட்டி கிளறவும். 2,3 நிமிடங்களில் உருண்டு வரும். அந்த சமயத்தில் பொடித்த சீனியைப் போடவும். அது உடனே கரைக்க, சுலபத்தில் கலவை கெட்டி ஆகி பாத்திரத்தில் ஒட்டாமல் சுருண்டு வரும். அதில் ஏலப் பொடி தூவி, நெய் தடவிய தட்டில் கொட்டி, சமப்படுத்தவும். சீவிய முந்திரியால் அலங்கரித்து துண்டுகள் போடவும்.




**கயானா** சிறையிலிருந்து இருவரும் தப்பி விடுவோம். தப்புதற்கு யாருடைய தயவும் நமக்குத் தேவையில்லை. உன்னிடம் பணம் இருக்கிறது; என்னிடமும் இருக்கிறது; திசைகாட்டியை எப்படி உபயோகிக்கிறது படகை எப்படி செலுத்துவதென்றெல்லாம்



எனக்குத் தெரியும் அதற்கு மேல் என்ன வேண்டும் .

கூர்ந்து என் கண்களையே நேராகப் பார்த்தான் தேகா. இருவரும் ஒருவரை ஒருவர் தழுவிக் கொண்டோம். உடன் படிக்கைக்கு முத்திரை வைத்தாகி விட்டது.

சில நிமிடங்களில் கதவு திறந்தது. அவன் தன் துணிமணி மூட்டையுடன் ஒரு திசையிலும் நான் வேறு திசையிலுமாகச் சென்றோம். அடிக்கடி பாபர் சாப்பிலோ டாக்டர் விடுதியிலோ ஞாயிற்றுக் கிழமையாக இருந்தால் தேவாலயத்திலோ சந்தித்துக் கொள்வோம்.

தேசிய சேமிப்புப் பத்திரங்களைக் கள்ளத் தனமாகத் தயாரித்ததற்காகச் சிறையில் இருந்தான் தேகா. ரொம்பப் புதுமுறையாக அவற்றைத் தயாரித்திருந்தான் அவன். ஐந்நூறு பிறாங் பத்திரங்களை அழித்துவிட்டு அதன்மீது பத்தாயிரம் பிறாங் பத்திரத்தின் வாசகத்தை அச்சிட்டு விடுவான். காகிதம் ஒன்றேதான் ஆகையால் பாங்குக் காரர்களும் பிஸ்னஸ் காரர்களும் அப்படியே ஏற்றுக் கொண்டார்கள். பலவருடங்களுக்கு இது நடந்தது. அரசாங்க நிதி லாக்கருக்கு விழி பிதுங்கியது. கடைசியில் ஆளைப் பிடித்து விட்டார்கள்.

தேகா 15 வருட கடுங்காவல் தண்டனை பெற்றான். இதோ இங்கே

எழுதியது: ஹென்ரி ஷாரியர்
தமிழில்: ரா.கி. ரங்கராஜன்

இருக்கிறான் வயதுக்கு மேலோ பத்து வருடம் ஆகிவிட்டாற்போன்ற தோற்றத்துடன். வாழ்க்கை குட்டிச்சுவர்.

இந்த மனிதனோடு தான் நான் ஒப்பந்தம் செய்து கொண்டேன் வாழ்வானாலும் சரி சாவானாலும் சரி என்று.

ஒன் - ரூ - திரி - போ - பைப் எபவுட் டர்ன் ஒன் - ரூ - திரி - போ - பைப் எபவுட் டர்ன் இப்படியே சிறையில் சுவருக்கும் கதவுக்குமாக பல மணிநேரம் நான் நடைபோட்டாயிற்ரு.

திடீரென்று ஒரு தீனமான கீச்சென்ற குரல் கேட்டது. பயங்கரமான மரணக்கூச்சல் சிறைக்கதவைத் தாண்டி வந்து கேட்டது. என்ன அது சித்திர வதை செய்யப்படுகின்ற ஒரு மனிதனின் கூச்சல் அது. ஆனால் இது ஒன்றும் பொலிஸ் ஸ்ரேசன் அல்லவே?

என்ன நடக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ள வழியே இல்லை இரவு முழுதும் கேட்ட அந்தக்கூச்சல்கள் கனத்த கதவுகளையும் துளைத்துக் கொண்டு கேட்கிறதென்றால் எவ்வளவு பலமான கூச்சலாக இருக்கவேண்டும்! ஒரு வேளை பைத்தியக் காரனோ எந்தத் தொடர்பும் அற்றுப்போன அறைகளில் பைத்தியம் பிடிப்பது சுலபம் எனக்குள் நானே உரக்கப் பேசிக் கொண்டேன் என்ன நடந்தால் உனக்கென்ன உன்னைப் பற்றி - உன் புதுக்கூட்டாளியான தேகாவைப் பற்றி - யோசனை பண்ணு வேறு எதைப்பற்றியும் கவலைப்படாதே.

தலையிலே சொட்டுச் சொட்டாக தண்ணீர் விழும்படி செய்யிற தண்டனையை சீனர்கள் கண்டு பிடித்தார்கள்; பிரெஞ்சுக்காரர்கள் நிசப்தத்தை கண்டு பிடித்திருக்கிறார்கள் மனிதனின் மனத்துக்கு வேலை கொடுக்கக்கூடிய எதையும் அவர்கள் விட்டு வைப்பதில்லை. புத்தகம் காகிதம் பென்சில் எதுவும் கிடையாது பலமான கம்பிபோட்ட யன்னலை முழுவதும் அடைத்து விட்டார்கள். சில சிறிய ஓட்டைகளின் வழியே மிகக் கொஞ்சமாய் வெளிச்சம் வந்தது.

கதவு திறந்தது வயதான பாதிரியார் ஒருவர் வந்தார். திடீரென்று என் தனிமை நீங்கிவிட்டது. என் எதிரில் ஒரு பாதிரியார் நிற்கிறாரே!

குட்டீவினிங் மகனே முன்னாலேயே வராததற்காக என்னை மன்னிக்க வேண்டும். வெளியூர் போயிருந்தேன் எப்படி இருக்கிறாய் அந்த கிழவர் அமைதியாக என் சிறைக்குள் வந்து என் படுக்கையில் உட்கார்ந்தார். உனக்கு எந்த ஊர்?

ஆர்டெக்

உன் குடும்பத்தார்

எனக்குப் பதினாறு வயதாகும்போது அம்மா இறந்து விட்டாள். அப்பா என்னுடன் ரொம்பப் பிரியமாக இருந்தார்.

அவருக்கு என்ன வேலை?

பள்ளிக்கூட வாத்தியார்

உயிரோடு இருக்கிறாரா?

ஆமாம்

அவர் உயிரோடு இருக்கும்போது ஏன் இறந்தமாதிரி பேசுகிறாய்.

ஏனென்றால் அவர் உயிரோடு இருக்கிறாரே தவிர நான் இறந்து விட்டேனே?

ஊகூம் அப்படிச் சொல்லாதே என்ன செய்தாய் நீ

நான் ஒருவரைக் கொலை செய்ததாகப் பொலிசில் சொல்கிறார்கள்.

"பாவம், நம்பவே முடியாததாயிருக்கிறது. உனக்கு என்னால் என்ன செய்ய முடியும்? என்னோடு சேர்ந்து பிரார்த்தனை செய்கிறாயா?"

"எப்படிப் பிரார்த்தனை செய்வதென்று எனக்குத் தெரியாது."

"பரவாயில்லை மகனே! உனக்காக நான் பிரார்த்தனை செய்கிறேன். ஞானஸ்நானம் பெற்றவர்களானாலும் சரி, பெறாதவர்களானாலும் சரி, கடவுள் தன் குழந்தைகள் அனைவரையும் நேசிக்கிறார். நான் சொல்கிற ஒவ்வொரு சொல்லையும் திருப்பிச் சொல்லுவாய், இல்லையா?"

முடியாதென்று சொல்ல வெட்கமாயிருந்தது. அந்த அளவுக்கு அவர் கண்கள் கனிவுடன் இருந்தன. அவருடைய முகத்திலிருந்து அந்த அளவுக்கு கருணை பெருகிறது. அவர் மண்டியிட்டதும் நானும் அதேபோல் செய்தேன்.

"பரலோகத்தில் இருக்கும் பிதாவே..."

என் கண்களில் கண்ணீர் பொங்கி வந்தது. அந்த அன்புமிக்க பாதிரியார் அதைக் கண்டார். என் கன்னத்தில் வழிந்தோடிய ஒரு கண்ணீர்த் துளியைத் தன் விரலால் எடுத்து, தன் வாயில் வைத்துக் குடித்தார்! "மகனே! இந்தக் கண்ணீர் துளிதான் இறைவன் எனக்கு இன்று அனுப்பிய மிகப் பெரிய வெகுமதி. அந்த வெகுமதி உன் மூலமாக வருகிறது. நன்றி," என்று கூறி என் நெற்றியில் முத்தமிட்டார்.


சரேலென நான் என் கையை விடுவித்துக் கொண்டு. அவரிடமிருந்து விலகினேன். "செத்தாலும் இல்லை! அவர்களை ஒருபோதும் மன்னிக்கமாட்டேன்."

*(பட்டாம்பூச்சி பறக்கும்)*

# தாயுமானவர் பற்றி வித்யாசாகர்

**எனக்கு** நினைவு தெரியாத சின்ன வயசிலேயே எங்க அம்மா இறந்துட்டாங்க. இரண்டு சின்ன குழந்தைகளைத் தாய்மை உணர்வோடு தன் உயிராக கண்ணுக்குள் வெச்சுப் பாதுகாத்த 'தாயுமானவர்' எங்க அப்பா.

"ரொம்ப நல்லா வாசிச்சீங்க, ராம்சந்தர்'னு பாராட்டினதும், 'அதை நான் வாசிக்கலை. என் பையன் வாசிச்சான்'னு பெருமையா என்னைக் கைகாட்டினார். விரல் சூப்புற வயசுப் பையனா நின்றிருந்த நான்தான் வாசிச்சேன் என்பதை மியூசிக் டைரக்டரால்



எனக்கு இசை கற்றுக்கொடுத்த குருவும் அவர்தான். ஆறு வயசிலேயே ஆர்மோனியம் வாசிக்கவெச்சார். என்ன புது இசைக் கருவி வந்தாலும் அதை வாசிக்க எனக்குச் சொல்லிக் கொடுக்கணும் என்பதற்காகவே முதலில் அவர் கத்துக்குவார். அம்மாவுக்குரிய பாசம். அப்பாவுக்குரிய அரவணைப்பு, குருவுக்குரிய கண்டிப்பு எல்லாவற்றையுமே எனக்குத் தந்தவர். அப்பா. கூடவே ஒரு நண்பனுக்குரிய தோழமையுடனும் இருந்த மனிதர்.

எனக்குப் பத்து வயசு இருக்கும். ஒரு நாள் அப்பாவுக்குச் சாப்பாடு கொண்டு போயிருந்தேன். அப்பா பின்னணி இசை வாசிக்க, ஒரு ரெக்கார்டிங் தியேட்டரில் இருந்தார். அன்னிக்கு என்ன வாசிக்கப் போறார்னு முதல் நாளே எனக்குச் சொல்லியிருந்தார். அதை அப்பா எப்படி எப்படி வாசிக்கப்போறார்னு பார்க்க ஆர்வம். இப்போ மாதிரி தனித்தனியா வாசிக்கிற காலம் இல்லை அது. எல்லா இசைக் கலைஞர்களும் ஒரே நேரத்தில் வாசிக்கணும். ஒருவர் சின்னதா ஒரு தப்பு பண்ணினாலும், மறுபடி எல்லாரும் சேர்ந்து இன்னொரு முறை வாசிக்கணும்.

அப்படி ஒரு சூழலில், ரெக்கார்டிங் ரூமில் அப்பாவுடன் இருந்தேன். 'அப்பா, நான் வாசிக்கட்டுமா?'ன்னு ஆசையா கேட்டேன். 'சரி வாசிப்பா'ன்னு ஒரிஜினல் ரிக்கார்டிங்கிலேயே தைரியமா என்னைத் தபேலா வாசிக்க அனுமதிச்சார் அப்பா, டேக் ஓ.கே. ஆனதும் மியூசிக் டைரக்டர் வந்து,

நம்ப முடியலை. திரும்ப ஒரு முறை வாசிச்சுக் காட்டேன். பத்து வயசில் நான் ரிக்கார்டிங் வாசிச்சதுகூட பெரிய விஷயம் இல்லை. அப்பா என் மேல் வெச்சிருந்த நம்பிக்கை அதைவிட ரொம்ப பெரிசு. இப்ப நினைச்சாலும் சிலிர்க்கும் உடம்பு.

மரம் வளரணும் விதை போடுறவங்க பல பேர் அதன் பலனைப் பார்க்காமலே



போயிடுவாங்க. அந்த விஷயத்தில் என் அப்பாவை அதிர்ஷ்டசாலியாக்கிப் பார்த்த அதிர்ஷ்டசாலி நான். ஐந்து தேசிய விருதுகள் வாங்கிட்டேன். தேசிய விருது பெறும் விழாவுக்கு அப்பாவையும் ஒருமுறை டெல்லிக்குக் கூட்டிட்டுப் போயிருந்தேன். 'திறமைசாலிப் பையனைப் பெத்திருக்கீங்க'னு அப்துல்காலம் சார் என அப்பாவைப் பாராட்டினதும், அணையை உடைச்சுக்கிட்டு வெள்ளம் பாயற மாதிரி கண் கலங்கிடடார் அப்பா. பாசத்தை எப்படி வெளியே காட்டுறதுன்னு தெரியாத மனுஷன் அன்னிக்கு ரொம்பவே நெகிழ்ந்துவிட்டார்.

***நன்றி : ஆ.வி.***

# கம்பியூட்டர் மொனிட்டர்கள் பற்றிய சில தகவல்கள்


கம்பியூட்டர் பயன்படுத்துகிறீர்களா? அப்படியானால் 'ப்ளாட் மொனிட்டர்' பயன்படுத்தத் தொடங்குங்கள். ஆம். அது தான் 'ஷாக் அடிக்கரதாம்.

என்னது, மற்ற கம்பியூட்டர் மொனிட்டர்கள் எல்லாம் 'ஷாக்' அடிக்குதா என்று பதற்றப்படாதீர்கள். இந்த வகை மொனிட்டர்களைப் பயன்படுத்தினால், மாதந்தோறும் மின்சார பில்லை பார்த்தால் 'ஷாக்' அடிக்காது என்பதுதான் அதன் பொருள்.

இப்போது எங்கு பார்த்தாலும், 'ப்ளாட் மொனிட்டர்' தான். அது பார்க்க அழகாக இருக்கிறது என்பது மட்டுமல்ல, பல வகையிலும் பலன் தருகிறது என்று ஜெர்மனி கம்பியூட்டர் நிபுணர்கள் கூறுகின்றனர்.

இந்த வகை மொனிட்டர்கள், 70 சதவீதம் அளவுக்கு மின்சாரத்தைச் சேமிக்கின்றது. இதற்குக் காரணம், அதன் வடிவமைப்பு தான். மின்சாரம் மூலம் கம்பியூட்டர் பரப்பும் மின்காந்த கதிரியக்க சக்தி, இதில் மிகக்குறைவு.





'ப்ளாட் மொனிட்டர்' மூலம் வெளியேறும் மின்காந்த கதிரியக்க சக்தி, 70 சதவீதம் வரை குறைவதால், மின்சாரமும் அதிகபட்சம் சேமிக்கப்படுகிறது' என்றனர்.

இதனால், சில வகை மொனிட்டர்களில், 'எனர்ஜி ஸ்டார்' என்றும், 'எனர்ஜி' என்றும், ப்ளூவென் ஏஞ்சல்' என்று பெயர் பொறிக்கப்பட்டிருக்கும். ப்ளாட் மொனிட்டர்கள், நல்ல அழகான தோற்றம் தருகிறது. இதிலிருந்து வெளியேற்றப்படும் களொரின், புரொமைட் வெளியேற்றமும் கட்டுப்படுத்தப்பட்டதாகவே உள்ளது. மேலும் இந்த வகை மொனிட்டர்கள் பழையதாகி விட்டால், அதை தூக்கிப் போட்டாலும் மீண்டும் மறுஉற்பத்தி செய்ய அவை பயன்படுகின்றன என்றும் நிபுணர்கள் கூறினர்.

இந்த வகை மொனிட்டர் வாங்கும் நுகர்வோர் இன்னொரு முக்கியமான விஷயத்தை மறந்துவிடக் கூடாது குறைந்தபட்சம் ஐந்தாண்டுகள் உத்தரவாதம் தரும். மானிட்டர் தயாரிப்பாளர்களின் மானிட்டரை தான் வாங்க வேண்டும் என்றும் கூறினர்.

# வெளியே சிரிப்பும் உள்ளே அழுகையுமாக வாழ்ந்தேன்"



**அதையடுத்து** 'காட் இன் தி ரைன்' பத்து நிமிடம் மட்டுமே ஓடிய இந்தப் படம் அதைப் பார்த்தவர்களை நாள் முழுவதும் சிரிக்க வைத்தது.

1914ஆம் ஆண்டு அவருக்கு மேலும் மேலும் வெற்றியைத் தேடித் தந்தது. அப்பொழுது அவருக்கு வயது இருபத்தைந்து. அமெரிக்காவின் நகைச்சுவை மன்னன் என்று எல்லோரும் பாராட்டத் தொடங்கினார்கள். விரைவிலேயே உலகத்திலேயே சிறந்த நகைச்சுவை நடிகன் என்ற பட்டமும், பெயரும், புகழும் அதற்கேற்றாற்போல பணமும் இவரைச் சூழ்ந்து கொள்ளத்துடித்துக் கொண்டிருந்தன.

குறுகிய கால கட்டத்திலேயே தனக்குக் கிடைத்த வெற்றி சாப்ளின் தலையைப் பெரிதாக்கவில்லை. கர்வம் என்ற வார்த்தையே அவரை அணுகவில்லை. வெற்றியை எப்படி அதிகரிப்பது, தன்னுடைய படங்களை மேலும் எந்த வகையில் ஜனரஞ்சகமாக்குவது என்ற ஒரே சிந்தனைதான் அவர் மனதில், சிறிய ஹோட்டலில் ஒரு சிறிய அறையில் தான் தங்கினார். பணத்தைச் சேர்த்து வைக்கக் கற்றுக் கொண்டார். அனாவசியமாகக் காலத்தை வீணாக்கிக் கொண்டு நண்பர்களுடன் சேர்ந்து கும்மாளமடிப்பது என்பதே கிடையாது. தன் சொந்த ஊர் லண்டன், தன் தாயார், இளமைக்கால சோக வாழ்க்கை இவைகயெல்லாம் இவருடைய மனத்திரையில் திரைப்படம் போல வந்து கொண்டிருந்தன. மாலை நேரங்களில் உடற்பயிற்சிக்காக லொஸ் ஏஞ்சல்ஸ் நகரத்தில் ஏழைகள் வாழும் பகுதிகளில் தனியாக நடந்து செல்வார். ஒரு தரம் பிரபல ஆங்கில எழுந்தாளர், நாடக ஆசிரியர், சிறுகதை மன்னன் என்றெல்லாம் புகழ் பாடப்படும் 'ஸாமர்ஸெட்மாம்' (Somerest Manghan ) ஹாலிவுட் வந்திருந்த பொழுது அவரும், சாப்ளினும் மாலை நேரத்தில் நடந்தார்கள். அந்த ஆங்கில எழுத் தாளரைத் தான் வழக்கமாக நடக்கும் ஏழ்மை சொட்டும் பகுதிகளுக்கு அழைத்துச் சென்றார்.



அந்த ஏழ்மை சூழ்ந்த வீடுகள், ஏழைகளின் ஆடைகள், கவலை சூழ்ந்த முகங்கள் 'இவைகளையெல்லாம் சாப்ளின் கூர்ந்து கவனிப்பதை ஸாமர்ஸெட் மாம் பார்த்தார். தன் நண்பரைப் பார்த்து, சாப்ளின் சொன்னார். ஸாமர்ஸெட்! நாம் பார்க்கிறோமே இதுதான் உண்மையான வாழ்க்கை, மற்றதெல்லாம் வெறும் போலி. அது வாழ்க்கையாக முடியாது!" என்றார். புகழ் ஏணியில் ஏறி உச்சியைத் தொட்டுக் கொண்டிருந்த சாப்ளினின் இந்த வகைப் பேச்சு அந்தப் பிரபல எழுத்தாளரை ஆச்சரியத்தில் மூழ்க வைத்தது. முறையான பள்ளிப் படிப்பு இல்லாத ஒருவருக்கு இப்படி ஒரு அறிவா என்று ஆச்சரியப்பட்டார். சாப்ளினின் வெற்றிக்கு அந்த அறிவும் ஒரு காரணம் என்று அவருக்குப் புரிந்தது.

சாப்ளின் தனக்கென்று பிரத்தியேகமாக அமைத்துக் கொண்ட அந்த உடையை அணிந்த பாத்திரத்திற்கு "ட்ரம்ப் (Tramp ) என்று பெயர். இவன் வாழ வழியில்லாத உண்ண உணவு கிடைக்காத அதைத் தேடி அலைபவன், அவனுக்கு வேலை கொடுக்க யாரும் முன்வருவதில்லை. ஆகவே அவனுடைய வாழ்க்கைப் போராட்டம் மிகவும் கடினமானது. ஆனால் அவன் தன் மனதைத் தளர விடமாட்டான். மனிதாபிமானம் நிறைந்த அவன் தன்னுடைய காலில் நிற்க வேண்டும் என்ற எண்ணத்தோடு வாழ்பவன். சாப்ளினின் நகைச்சுவையில் இதுதான் உலக மக்களை சிந்திக்க வைத்தது. உலகத்தைச் சிரிக்க வைத்தது மட்டுமல்ல, சிந்திக்கவும் வைத்ததுதான் சாப்ளினின் மங்காத புகழுக்கு முக்கிய காரணம்.

தான் முறையாக பள்ளியில் படிக்கவில்லை என்ற குறை அவனை வாட்டிக் கொண்டே இருந்தது. அதை நீக்க நிறைய புத்தகங்கள் படிக்கத் தொடங்கினார். அவருக்கு மேற்கத்திய இசை மீது ஆர்வம் அதிகம். அதையும் கற்றுக் கொண்டார். வயலின் வாசிப்பதில் நல்ல திறமையும் பெற்றார். அதன் விளைவாகத் தன்னுடைய படங்களில் பின்னணி இசையை அவரே அமைத்தார்.



ஊமைப் படங்களில் இசையா? முரண்பாடாக இருக்கிறதோ? இல்லை! படம் ஊமையாக இருந்தாலும் வசனம் என்பது இல்லாமல் இருந்தாலும் ஊமைப் படத்திற்குப் பின்னணி இசை என்பது நிச்சமாக உண்டு! அது எப்படி இன்றைய பேசும் படங்களைப் போல பின்னணி இசை திரையிலிருந்து வராது. திரையரங்கில் அந்நாளில் திரைக்கு முன்னால் சற்றுத் தாழ்வான ஒரு பகுதி இருக்கும். இதற்கு பிட் என்று பெயர். இந்தப் பள்ளத்தில் இசைக்கருவிக் கலைஞர்கள் உட்கார்ந்து கொண்டு படக் காட்சிக்குத் தகுந்தாற்போல் பின்னணி இசையை வாசிப்பார்கள். மேல் நாடுகளில் சாதாரணமாக பியானோ, வயலின் போன்ற கருவிகள் உபயோகிக்கப்படும்.

(இந்தப் பள்ளப் பின்னணி இசை முறை ஊமைப் படக்காலத்தில் நம் நாட்டிலும் பல கொட்டகைகளில்



வழக்கத்தில் இருந்தது. இங்கு ஆர்மோனியம் தான் முக்கிய இசைக் கருவி. தபேலா அல்லது மிருதங்கம் உபயோகத்தில் இருந்தன,

படத்தில் வரும் காட்சிகளைப் பார்த்து அதற்கு தகுந்தாற் போல் பின்னணி இசையை வாசிக்க வேண்டிய நிலைமையில் இருப்பதால், அந்த இசை, ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு காட்சிக்கும் வித்தியாசமாகவே இருக்கும்.

அது அந்த இசைக் கலைஞர்களில் மனநிலையைப் பொறுத்தது. வீட்டில் சண்டை போட்டால் ஒரு வகையான இசை வரும். இந்த நிலைமையைத் தவிர்க்க ஹாலிவுட்டில் அந்நாளில் பிரபல இயக்குநர்கள் படக்காட்சிகளுக்குத் தகுந்தாற்போல் இசையை, ஒரு அமைப்பாளர் உதவியுடன் அமைத்து, அதன் 'ஸ்வரங்களையெல்லாம்' காகிதத்தில் அச்சடித்து எல்லாத் திரையரங்குகளுக்கும் அனுப்புவார்கள்.

*(தொடரும்)*

# உலகப் பிரபலங்களின் அந்தரங்கங்கள்

11

## அரண்மனையை அந்தப்புரமாக்கிய ஐவான் மன்னன்

சென்ற வாரத் தொடர்ச்சி....

**ஐவான்** தனது பெயரினால் நடைபெற்ற அட்டுழியங்கள் அனைத்தையும் பொறுத்துப் பொறுத்துப் பார்த்த பின் ஒரு கட்டத்தில் பொங்கி எழுந்தான். 1547ஆம் ஆண்டு தனக்குப் 17ஆவது வயது நடக்கையில் ரஷ்ய அரச பரம்பரையின் உண்மையான வாரிசு என்ற அடிப்படையில் தான் முடிசூடுவதாக அறிவித்து அரியணை ஏறினான். ஏற்கனவே அவன் பராயமடையாமல் இருந்த காலப்பகுதியில் அவனது பெயரால் நடைபெற்ற சம்பவங்கள் அனைத்தும் அவனை பாதித்து அவனது முரண்பட்ட மனப்பாங்கிற்கு காரணமாகி இருந்தது. மேலும் தன்மீது அன்பு செலுத்தாத தாயின் மீதும், தாயைக் கொலை செய்த ஆட்சியாளர்கள் மீதும் தீராத கொலை வெறியுடன் இருந்த அவன், அரச பீடத்தில் அமர்ந்ததும் நிலைமையே தலைகீழாக மாறியது.

இவ்வளவு காலமாக ஆட்சி நடாத்திய நிலச்சுவாந்தர்களாகிய போயர்கள் பலரின் தலைகள் உருண்டன. ஏராளமானவர்களின் சொத்துக்களைப் பறிமுதல் செய்தான். மக்கள் மீது விதிக்கப்பட்ட அனைத்து வரி வசூலிப்புகளும் சூறையாடல்களும் நீக்கப்பட்டன. இவை எவற்றையும் எதிர்பாராத மிச்சமிருந்த போயர்கள் அதிர்த்து போனார்கள். பலர் தலைமறைவாக, மீதியானோர் தப்பினோம் பிழைத்தோம் என நாட்டை விட்டு ஓடினார்கள். அவர்களின் ஏராளமான சொத்துக்கள் பறிமுதல் செய்யப்பட்டன.

அது மட்டுமல்ல, தனது தாயாராகிய ஹெலனின் உறவினர்களையும் கைது செய்து சிறையிலடைக்குமாறு உத்தரவிட்டான். ஏனெனில் அவர்கள் சரியாக நடந்திருந்தால் தனது தாய் பிழையான வழியில் சென்று தன்னை அநாதரவாக விட்டிருக்க மாட்டாள் என நம்பினான். வரலாற்று ஏடுகளின்படி 50 ஆண்டுகள் ஆட்சி புரிந்த ஐவான் மன்னனை எதிர்த்தவர்கள் மற்றும் விமர்சித்தவர்களை விட ஏனையோரை அவன் ஒன்றுமே செய்யவில்லை. இதனால் உள்நாட்டில் அவனுக்கு எதிர்ப்போ எதிரிகளோ இருக்கவில்லை. மேலும் முக்கிய சக்தியாகிய ரஷ்ய இராணுவத்தினர் பலர் நடுத்தர மற்றும் கீழ்மட்ட குடும்பங்களைச் சார்ந்தவர்களாக இருந்தபடியினால் அவனுக்கு விசுவாசமாக செயற்பட்டார்கள்.

சாதாரண மக்களின் வாழ்க்கையில் பாதிப்பை ஏற்படுத்தாதவாறு ஆட்சி நடாத்திய ஐவான் மன்னன் மறுபுறத்தில் 'பயங்கர ஐவான்' (Dangerous Ivan ) எனும் பட்டத்தையே பெற்றான். இப்படிப்பட்ட ஐவான் மன்னனுக்கும் திருமண ஆசை வந்தது.

தன்னால் நியமிக்கப்பட்ட பொம்மை அரசவை மூலம் ஓர் பகிரங்க அறிக்கையை ரஷ்யா முழுவதும் அனுப்பினான். அதாவது திருமண வயதை எட்டிய பிரபுக்கள் மற்றும் நிலச்சுவாந்தர்கள் என்போரது பெண்களை அரண்மனைக்கு அனுப்பும்படி உத்தரவிட்டான். ஏற்கனவே அவனது அதிரடி நடவடிக்கையினால் அதிர்ந்து போயிருந்த அவர்களும் வேறு வழியின்றி திருமணம் முடிக்க தயாராயிருந்த தமது பெண்களை அரண்மனைக்கு அனுப்பினார்கள்.

1550ஆம் ஆண்டு மொத்தமாக 1500 இளம் பெண்கள் அனைவரும் செல்வந்தர்களின் மகள்மார் மாஸ்கோவில் உள்ள அரண்மனைக்கு வந்து சேர்ந்தார்கள். ஏற்கெனவே மிக விசாலமாக கட்டப்பட்டிருந்த அரண்மனையில் 125 அறைகளை அவர்களுக்காக ஒதுக்கி அறைக்கு 12 பெண்கள் என்ற கணக்கில் தங்க வைக்குமாறு உத்தரவிட்டான்.

இதன் காரணமாகத்தான் ரஷ்ய தேசத்தினை நிர்வகித்த அரண்மனை, அந்தப்புர அரண்மனையாக மாறியது. அதிலும் அதிசயம் என்னவென்றால் 1500 பெண்களில் எந்த ஒரு பெண்ணையுமே அவன் திருமணம் செய்யவில்லை. ஆனால் அவர்கள் மீது கட்டுப்பாடுகளை மட்டும் தாராளமாக விதித்திருந்தான்.

தினமும், மொத்தமாக இருந்த 125 அரண்மனை அறைகளில் ஒன்றில் தங்குவதை அவன் வாடிக்கையாகக் கொண்டிருந்தான். அவன் தங்குவதற்கான அறிவிப்பு வந்ததும் அந்த அறையில் இருக்கும் 12 இளம் பெண்களும் தமது உடலில் எந்த ஒரு ஆடையையும் அணியாமல் நிர்வாணமாக இருக்க வேண்டும். மேலும் தமது கைகளில் ஓர் மெழுகுவர்த்தியைக் கொளுத்தியவாறு அவனை புன்னகையோடு வரவேற்க வேண்டும். மீறினால் தலை உருளும் என பயமுறுத்தல் விடுக்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக அனைத்து மணமகள்களும் ஒரு மறுப்பும் சொல்லாமல் அவ்வாறே நடந்து கொண்டனர். எவ்வளவு பதற்றம் அல்லது வேலைப்பளு இருந்தாலும் தினமும் இரவுகளில் ஒவ்வொரு அறைகளிலும் இளம் பெண்களுடன் உல்லாசமாய் பொழுதைப் போக்கியபடியால் அவன் ரஷ்ய நாட்டில் எந்த ஒரு பொது மகன் மீதும் கெடுபிடிகளை மேற்கொள்ளாமலும் அல்லது எந்த ஒரு சாதாரண குடிமகனினதும் வெறுப்பிற்கும் உள்ளாகாமலும் இருந்தான்.

எனினும் அரண்மனையில் வகை தொகையின்றி இருந்த பெண்கள் பலரும் கர்ப்பமுற்றனர். அனைவருமே தமது கர்ப்பத்திற்கும் தாம் பெற்ற பிள்ளைகளுக்கும் ஐவானே காரணம் என சுட்டுவிரலை நீட்டினர். தனது தந்தையின் மரணத்தை அடுத்து தனது தாயின் காதல் லீலைகளை நேரில் கண்டதனால் என்னவோ அவன் அவர்களில் எந்த ஒரு பெண்ணையும் வெறுக்கவில்லை. அனைவரையும் எந்த ஒரு குறையும் வைக்காமல் வித்தியாசம் பேதம் பார்க்காமல் பொன்னும், பொருளும் கொடுத்து பராமரித்து வந்தான்.

காலங்கள் கடந்தன. மாஸ்கோ அரண்மனைக்கு உத்தியோகபூர்வமாக முடிசூடக்கூடிய மகாராணி எவரும் இல்லாத நிலையில் அங்கிருந்த 1500 பெண்களில் ஒருத்திக்குப் பிறந்த பியோடார் எனும் பிள்ளையைத் தனது வாரிசாக அறிவித்தான். 1584ஆம் வருடம் தனது 54ஆவது வயதில் மேகநோய் வந்து ஐவான் மன்னன் மரணமானான். அதன்பின் அவனால் வாரிசாக அறிவிக்கப்பட்ட பியோடார் ரஷ்யாவை ஆட்சி புரிந்தான்.

*(இரகசியங்கள் தொடரும்...)*

# முட் பாதையில் மரித்த மிதவாதம்

**இரு எழுத்தாளர்கள் சேர்ந்து எழுதும் இலங்கைத் தமிழ் அரசியல் தொடர் இது.**

## ஜனாதிபதியின் பதவிக்கு ஆபத்தென திருமதி ஜெயவர்த்தனா கவலை!

**அமைச்சர்** காமினி திஸாநாயக்கா தயாரித்த நகல் ஒப்பந்தம் பற்றி ஆராய்வதற்காக இலங்கையின் அமைச்சரவை 1987ஆம் ஆண்டு ஜூலை மாதம் 15ஆம் திகதி கூடியது. இக் கூட்டத்தில் ஒப்பந்த விதிகள் தொடர்பாகப் பலத்த வாதப்பிரதிவாதங்கள் எழுந்தன. வடக்கு - கிழக்கு இணைப்புக்கும் தமிழ் மொழி அமுலாக்கலுக்கும் எதிராகவே அமைச்சர்கள் பலர் கண்டனம் தெரிவித்தனர். அமைச்சர்கள் லலித் அத்துலத் முதலி, காமினி ஜெயசூரிய,




ரஞ்சித் அத்தபத்து, எம்.எஸ்.சமரசிறி, ஆனந்த திஸ்ஸ டி அல்விஸ், எம்.எச்.மொகமட் ஆகியோர் இந்த ஒப்பந்தத்துக்கு வலுவான எதிர்ப்புத் தெரிவித்தனர். இந்த ஒப்பந்தம் பிரச்சினைகளை ஏற்படுத்தலாமென்றும் ஆனால் நீண்ட கால இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண இதுவே வழியென்றும் அமைச்சர்கள் காமினி திஸா நாயக்கா, ரொனி டி மெல், சௌமியமூர்த்தி தொண்டமான், கே.டபிள்யூ. தேவநாயகம், ரணில் விக்கிரமசிங்கா, நிசங்க விஜயரட்ன ஆகியோர் தெரிவித்ததோடு ஆதரவும் வழங்கினர். இந்தியாவுடனான உறவுகளை மீளச் சீரமைப்பதற்கு இந்த ஒப்பந்தம் உதவுமென்றும் அவர்கள் தெரிவித்தனர்.

1986ஆம் ஆண்டு டிசம்பர் 19ஆம் திகதி வரை முன்வைக்கப்பட்ட யோசனைகளின் அடிப்படையிலேயே நகல் ஒப்பந்தம் முன்வைக்கப்பட வேண்டுமென்று அமைச்சரவை தீர்மானித்தது. புதிய யோசனைகள் பற்றி இருவருடங்களுக்குப் பின்னர் ஆராயலாமென்றும் அமைச்சரவை முடிவெடுத்தது. இதனால் இந்திய உயர் ஸ்தானிகர் தீக்ஷித்தை அமைச்சரவைக் கூட்டத்திற்கு அழைத்து ஒப்பந்த யோசனைகள் குறித்து விளக்கம் கோருவதென்றும் அமைச்சரவை தீர்மானித்தது. இது குறித்து தீக்ஷித்துக்கு ஜனாதிபதி ஜெயவர்த்தனா அறிவித்தார். நகல் ஒப்பந்த யோசனைகளை தயாரிப்பதற்கு இணக்கம் தெரிவித்து விட்டு, திடீரெனப் பின்வாங்குவது இலங்கை - இந்திய உறவுகளில் பாரிய பாதிப்பை ஏற்படுத்தலாமென்று தீக்ஷித் ஜெயவர்த்தனாவுக்குக் கூறினார். இலங்கை இனப்பிரச்சினை தொடர்பாக இந்தியா கொண்டிருக்கும் அணுகுமுறையில் அடிப்படை மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு அமைச்சரவையின் முடிவுகள் நிர்ப்பந்திக்கலாமென்றும் தீக்ஷித் தெரிவித்தார்.

முழுயோசனைகளையும் மீண்டும் தான் படித்துப் பார்க்க வேண்டியிருப்பதாகக் கூறிய ஜனாதிபதி ஜெயவர்த்தனா, அன்று மாலையே ஆலோசனை நடத்துவதற்கு வருமாறு தீக்ஷித்தை அழைத்தார். ஜனாதிபதி இல்லத்திற்குச் சென்ற தீக்ஷித்திடம் ஜனாதிபதியின் மனைவி இரு கேள்விகளைக் கேட்டார். அதாவது இந்த ஒப்பந்தத்திற்கு ஜனாதிபதி இணக்கம் தெரிவித்தால், ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதற்கென்று இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தி கொழும்புக்கு வருவாரா? என்பதே முதலாவது கேள்வியாகும். "திருப்திகரமான யோசனைகள் முன்வைக்கப்பட்டால், ராஜீவ் காந்தி கொழும்பு வருவதில், எவ்விதப் பிரச்சினையும் இருக்காது. ஆனால், ஒப்பந்தத்தின் பூரண பிரதி முன்னதாகவே பிரதமரிடம் கையளிக்கப்பட வேண்டும்" என்று தீக்ஷித் கூறினார்.

"இந்த ஒப்பந்தத்துக்கு அரசாங்கத்துக்குள்ளேயே பாரிய எதிர்ப்புகள் ஏற்பட்டு, ஜனாதிபதி ஜெயவர்த்தனா பதவியிழக்க வேண்டிய அபாயம் ஏற்பட்டால், ஜனாதிபதியின் பாதுகாப்புக்கும் அவர் தொடர்ந்து பதவியில் இருப்பதற்கும் ராஜீவ் காந்தி உத்தரவாதமளிப்பாரா" என்று திருமதி ஜெயவர்த்தனா கேட்டார். இந்த ஒப்பந்தம் அமுலாக்கப்பட்டால் ஜனாதிபதி பதவி இழக்கக்

*(அரசியல் தொடர்)*

கூடிய அபாயம் ஏற்படலாமென்று திருமதி ஜெயவர்த்தனா கொண்டிருந்த கவலையையே இக் கேள்வி பிரதிபலித்தது. அந்தளவுக்கு இந்திய எதிர்ப்பு உணர்வு அமைச்சரவைக்குள் நிலவியது.

ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு ஜனாதிபதிக்கு அரசியல் ரீதியிலோ பாதுகாப்பு ரீதியிலோ ஏதேனும் ஆபத்து ஏற்படுமென்றால், அவற்றைத் தவிர்த்துக் கொள்வதற்குத் தேவையான சகல உதவிகளையும் இந்தியா வழங்குமென்று தீக்ஷித் உத்தரவாதமளித்தார்.

இதனையடுத்து நகல் ஒப்பந்தத்தின் இறுதி வடிவத்தை விரைவில் சமர்ப்பிப்பதாக ஜனாதிபதி தெரிவித்தார். அத்தோடு எதிர்ப்புத் தெரிவித்த அமைச்சர்களின் ஆதரவைப் பெறுவதற்காக அவசர அமைச்சரவைக் கூட்டமொன்றினை கூட்டவுள்ளதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

இறுதித் தீர்மானமெடுக்கும் சுதந்திரத்தை அமைச்சர்கள் தனக்குத் தந்துவிட்டனரென்று மறு நாள் மத்தியானமளவில் ஜனாதிபதி ஜெயவர்த்தனா தீக்ஷித்திடம் தெரிவித்தார். இருந்தபோதும் சில அமைச்சர்கள் எதிர்ப்புத் தெரிவிப்பதாகவும் சொன்னார். இதன் பின்னர் சிரேஷ்ட அமைச்சர்கள் கலந்து கொண்ட கூட்டமொன்றில் உயர் ஸ்தானிகர் தீக்ஷித் கலந்து கொண்டு சில கேள்விகளுக்கு விளக்கமளிக்க வேண்டி நிலைமை ஏற்பட்டது.

இனப்பிரச்சினையைப் பொறுத்தவரை இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியை நம்பத் தாம் தயாரில்லையென்று சில அமைச்சர்கள் கூறினர். தமிழக அரசியல் தாக்கத்தின் காரணத்தினால், இந்தியா என்றுமே தமிழர்களை ஆதரித்து வருவதால்

**இணைந்து எழுதுவது**
**த. சபாரத்தினம்**
**+**
**அம்பி மகன்**

இணக்கப்பாடொன்று ஏற்படப் போவதில்லையென்று வேறு சிலர் கூறினர். தமிழ் தீவிரவாதிகளுக்கு இந்தியா தொடர்ந்தும் ஆதரவும் அடைக்கலமும் கொடுக்கமாட்டாதென்பதற்கு என்ன உத்தரவாதம்? என்று கேள்வி எழுப்பப்பட்டது. வடக்குக் கிழக்கு மாகாணங்கள் இணைக்கப்பட்டால், அது அங்கு வாழும் சிங்கள, முஸ்லிம் மக்களை அரசியல், சமூக, பொருளாதார ரீதியாகப் பாதிக்குமென்று சிலர் விசனம் தெரிவித்தனர்.

> **"இந்த ஒப்பந்தத்துக்கு அரசாங்கத்துக்குள்ளேயே பாரிய எதிர்ப்புகள் ஏற்பட்டு, ஜனாதிபதி ஜெயவர்த்தனா பதவியிழக்க வேண்டிய அபாயம் ஏற்பட்டால், ஜனாதிபதியின் பாதுகாப்புக்கும் அவர் தொடர்ந்து பதவியில் இருப்பதற்கும் ராஜீவ் காந்தி உத்தரவாதமளிப்பாரா" என்று திருமதி ஜெயவர்த்தனா கேட்டார்.**

இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டால், ஆயுதப்படைகள் முகாம்களுக்குள் முடங்க வேண்டியிருக்கும். ஊர்க் காவல் படையையும் விசேட அதிரடிப்படையையும் கலைத்து விட வேண்டியேற்படும். இதனால் இராணுவச் சதியேற்படக்கூடிய ஆபத்திருக்கிறதென்றும் வேறு சிலர் எதிர்ப்புத் தெரிவித்தனர். சுதந்திரக் கட்சியும் பௌத்த மகா சங்கமும் எந்தச் சூழ்நிலையிலும் இந்த ஒப்பந்தத்தை ஏற்றுக் கொள்ளப் போவதில்லை. சிங்களப் பகுதிகளில் இவை எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபடலாமென்றும் ஜே.வி.பி.வன்செயல்களைத் தூண்டிவிடலாமென்றும் அவர்கள் சுட்டிக் காட்டினர்.

வடக்குக் கிழக்கை இணைத்து அவர்களுக்கு சுயாட்சி வழங்கினால் நுவரெலியாவிலும் கண்டியிலும் வாழும் மலையகத் தமிழர்கள் தமது மாவட்டங்களையும் இணைத்து சுயாட்சி வழங்குமாறு கோரினால், அது மேலும் பிரச்சினையை ஏற்படுத்தலாமென்று அமைச்சர்களில் சிலர் ஆதங்கத்தை வெளிப்படுத்தினர்.

(தொடர்ந்து வடியும்....)




**கோவிந்தனிடம் நடந்தவற்றையெல்லாம் கேட்டுத் தெரிந்து கொண்ட ஜயந்தன், இந்த சக்தி முதல் யார் என்பதைக் கண்டு பிடிக்கிறான். அதை இல்லாமல் ஒழிக்க தேவியின் கோயிலுக்கு சென்று அங்கு தேவியின் சிலை மீது மிருகம் ஒன்றின் இரத்தத்தைத் தெளிக்கச் செல்கிறான். இனி......**

**அவை** பறந்தது ஒரே சமயத்தில் ஆயிரம் அம்புகளை எய்து விட்டது போலிருந்தது. திடுக்கிட்டு சந்து நாயர் தன்னையும் மீறித் தரையிலிருந்து ஒன்றரையடி உயரத்துக்கு உயர்ந்து குதித்தார். என்ன நடக்கப் போகிறதோ என்கிற பயங்கலந்த துடிப்புடன், ஜயந்தனது செயல்களையே வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தார்.

வௌவால் கூட்டம் பழையபடி மரத்துக்குத் திரும்பி, இருளுக்குள் தங்களது இருப்பிடங்களில் தஞ்சமடைந்தன. வௌவால்கள் இருட்டின் துளிகளாகக் கரைந்து மரத்தின் அந்தகாரத்தில் கரைந்து போயின.

"என்ன நடந்தது?" -சந்து நாயர் பிரமை பிடித்தவரைப் போல் கேட்டார்.

எல்லாவற்றையும் வியப்புடன் பார்த்துக் கொண்டிருந்த குமார் ஆலமரத்தின் மறைவிலிருந்து வெளியே வந்தார்.

அவரைப் பொறுத்தவரை விஞ்ஞானத்தை மீறிய அற்புதம் நிகழ்ந்து கொண்டிருக்கிறது. குமார் கருவறையின் படிக்கட்டு அருகே வந்து நின்றார்.



அதற்குள் ஜயந்தன் செம்புடன் கருவறைக்கு முன் புறம் வியாளியின் வடிவம் செதுக்கியிருந்த சிலையை நெருங்கியிருந்தார். இன்னும் மூன்றுபடிகளைக் கடந்தால் கருவறையிலுள்ள தேவியை நெருங்கியிருப்பார். ஜயந்தன் தனது இடது காலை முன்புறமாக எடுத்து வைத்தார்.

அடுத்த நிமிடம்-

கருவறையின் கதவு யாரோ மிதித்துத் திறப்பது போல் வெளிப்புறமாக விசையுடன் திறந்து கொண்டது.

அத்துடன் விசிலடிப்பது போன்ற சத்தத்துடன் வெளியே பாய்ந்து வந்த ஒன்று ஜயந்தனின் கையிலிருந்த செம்பின் சரட்டில் சிக்கி, செம்புடன் அந்தரத்தில் உயர்ந்து எழும்பத் தொடங்கியது கோயிலின் எல்லையைத் தாண்டி யாரோ எய்துவிட்டது போல் ஆற்றில் விழுந்து கவிழ்ந்து மறைந்தது.

**எழுதுவது**
**சிவன்**

கண்ணிமைக்கும் நேரத்துக்குள் நடந்து முடிந்த இந்தச் செயலுக்குப் பிறகு விசிலடிப்பது போல் விசையுடன் பறந்து போன பொருள் அதே வேகத்துடன் திரும்பி வந்து கருவறைக்குள் மறைந்ததுடன், கருவறையின் கதவுகளும் வலுவுடன் மூடிக் கொண்டன.

எத்தனையோ தடவை பைசாசிகமான செயல்களைச் செய்திருக்கிற ஜயந்தன், இந்த ஒருகணத்தில் பயந்து நடுங்கவே செய்தார். சட்டென்று அங்கிருந்து பின்னோக்கி நகரத் தொடங்கினார். சந்து நாயரின் பக்கத்தில் வந்து நின்றார். அதே நேரம் சற்று நேரத்துக்கு முன் பறந்து போன

"நான் நினைத்தது போல் விஷயம் அவ்வளவு சுலபமாக இல்லை. இந்தக் கோயிலிலுள்ள பகவதியின் சக்தி அதிகம்தான். உடனடியாக இதற்கு ஏதாவது மாற்றுவழி கண்டுபிடித்தே தீரவேண்டும்". -ஜயந்தன் கூறினார்.

"அந்தச் சத்தம் எங்கிருந்து கேட்டது?"

"என்னோட யூகம் சரியானதா இருந்தா கருவறைக்குள் உள்ள பகவதியின் கையிலுள்ள திரிசூலம் பாய்ந்து வந்து என் கையில் இருந்த செம்பைப் பறித்துக் கொண்டு போய்த் திரும்பியிருக்க வேண்டும்?" -ஜயந்தன் கூறினார்.

"அப்படியா சொல்றீங்க? அப்ப நாம உடனடியா இந்த இடத்திலேந்து கிளம்புறது நல்லது. ஒருவேளை அந்தச் சூலம் நம்ம மேலயும் பாயறதுக்கு வாய்ப்பு இருக்கு". சந்து நாயர் பயம் கலந்த குரலில் பேசினார்.

"இப்போதைக்குக் கிளம்ப வேண்டியதுதான். ஆனால், பிரச்சினை இத்துடன் தீரவில்லை. நாம உடனடியா ஏதாவது செய்யலேன்னா, எதிராளிங்க முந்திக்கிடலாம்". ஜயந்தன் கோயிலை மீண்டும் ஒரு தடவை திரும்பிப் பார்த்து விட்டு படிகளில் இறங்கத் தொடங்கினார்.

அவர்கள் இருவரும் கடைசிப் படியைத் தாண்டிக்கீழே இறங்கியதும், ஸ்ரீதேவி ஆலமரத்தின் மறைவிலிருந்து வெளியே வந்தாள். அவள் கருவறையின் வாசலை நோக்கி மெதுவாக நடந்தாள். கதவு அப்போது மிகவும் மெதுவாகத் திறந்து கொண்டது. உட்புற இருளில் ஏதோ ஓர் ஒளி அசைவதை அவள் பார்த்தாள். பின்புறமாகத் திரும்பிய ஸ்ரீதேவி, குமாரை அருகில் வருமாறு அழைத்தாள். அதுவரை

"உள்ளே பாருங்கள்!" -ஸ்ரீதேவி அவரிடம் கூறினாள்.

திரும்பிப் பார்த்தவர் வியப்பினால் செயலற்றுப் போனார். பகவதி சிலையில் மிகவும் பிரகாசமான ஏதோ ஒன்று இழைந்து கொண்டிருந்தது. அதுவும் கழுத்துப் பகுதியில்தான் அதன் பளபளப்பும் அசைவும் துல்லியமாகத் தெரிந்தது.

ஊன்றிக் கவனித்தபோதுதான் அப்படி இழைவது பெருவிரல் பருமனிலிருந்த தங்கநிற நாகம் என்பது புரிந்தது.

அதன் உடலிலிருந்து வெளிப்பட்ட வெளிச்சத்தில் பகவதி சிலையின் ஒருசில பகுதிகள் கண்ணுக்குத் தெரிந்தது. மிகவும் மெதுவாக இழைந்து நகர்ந்த அந்த நாகம் சூலத்தின் மீது ஏறி, பிறகு மறுபடியும் பகவதியின் கழுத்துப் பகுதிக்கே திரும்பியது.

"கவனிச்சீங்களா? அந்தப் பாம்போட வாயில நீலம் கலந்த பளபளப்புத் தெரியுதா?" -ஸ்ரீதேவி கேட்டாள்.

குமார் அதை முன்பே கவனித்திருந்தார்.

"அதுதான் நாகமாணிக்கம், மிகவும் அபூர்வமான பொருள் அது. நாகமாணிக்கம் இங்க இருக்கிற வரையிலும் என்னையும் உங்களையும் யாராலயும் ஒண்ணும் செய்ய முடியாது."

"யாராவது எடுத்துட்டுப் போயிட்டா...?" குமார் கேட்டார்.

"அதுக்கெல்லாம் வாய்ப்பே கிடையாது. நெருப்பைவிட ரொம்பவும் சக்தி வாய்ந்தது அதில் அடங்கியிருக்கிற சக்தி. அந்த நாகத்தை யாராவது தொட்டால்.. அடுத்த வினாடியே ஜுவாலைகளால் தகிக்கப்பட்டு இல்லாமல் போயிடுவாங்க."

(வாசனை வீசும்....)

மனதுக்கு நிம்மதி

# நலம் தரும் சொல்

பிரார்த்தனை செய்ய குறிப்பிட்ட நேரம் ஒதுக்குங்கள். குறிப்பிட்ட இடம் ஒதுக்குங்கள். ஏனெனில், இந்தப் பழக்கம் அந்த இடத்தையும், நேரத்தையும் கண்டவுடன் இயல்பாக நம்மை ஓர் 'ஈடுபடும் நிலைக்கு' - பிரார்த்தனை நிலைக்கு - எளிதாக அழைத்துச் செல்லும் என்று கூறுகிறார்கள்.

பிரார்த்தனையில் அடுத்த முக்கியமான பகுதி நம் வேண்டுகோளைத் திரும்பத் திரும்பச் சொல்வதாகும். திரும்பத் திரும்ப ஓர் எண்ணம் நினைக்கப்படும்போது, அது வலிமை பெறுகிறது. அதில் நம்பிக்கை பிறக்கிறது. நாளடைவில் நம்பிக்கை ஏறுகிறது. நம்பிக்கை ஏறிய எண்ணம் - வலுப்பெற்ற எண்ணம் - அதற்கான செயல்களை நிகழ்த்துவது எளிதாகிறது. திரும்பத் திரும்பச் செய்யும் செயல் பழக்கமாகிறது. நம்மால் நமது பழக்கத்தை விட முடிவதில்லை. பழக்கம் அவ்வளவு கஷ்டமாயிருக்கும்போது, ஏன் நல்ல பழக்கத்தை நாம் மேற்கொள்ளக் கூடாது? திரும்பத் திரும்பக் கூறும் எண்ணம் மந்திரசக்தி பெறுகிறது என்று எழுதுகிறார்கள்.

எண்ணங்களிலிருந்து பலன் பெற திரும்பத் திரும்ப (Repetition) என்பது ஓர் அற்புதமான உபாயம் என்று கூறுகிறார், ஒரு மகத்தான தத்துவ ஞானி. எமலி கூ என்ற பிரெஞ்சு மனோதத்துவ மேதையும் இந்த வழியைப் பின்பற்றியே பல நோயாளிகளின் நோய்களைக் குணம் ஆக்கினார்.

பாரதியாரைப்பற்றி நினைக்கும்போது ஏதோஅவர் 'ஓம் சக்தி' என்று கர்ஜிப்பதுபோல என் காதில் விழும். ஏனெனில் அவரது பாடல்களில் அதிகமாக அழுத்தமாக அந்த ஓங்கார நாதத்தை எங்கு பார்த்தாலும் கேட்க முடிகிறது. ஒரு சமயம் கொஞ்சம் பயம் வந்தபோது, கொஞ்சம் தயக்கம் வந்தபோது, கொஞ்சம் சந்தேகம் வந்தபோது, 'ஓம் சக்தி' என்று பாரதியாருடன் சேர்ந்து குரல் கொடுத்தேன். உண்மையைச் சொன்னால் எங்கிருந்தோ என்னுள் ஒரு புது சக்தி - நம்பிக்கை - வேகம், தீரம் - பிறந்ததைக் கண்டேன். 'எங்கள் தந்தையர் நாடென்ற பேச்சினிலே ஒரு சக்தி பிறக்குது மூச்சினிலே' என்று பாடிய வீர கவி அல்லவா அவன்?

இதைப்பற்றி நான் தயக்கத்துடன் எனது நண்பர் பரஞ்சோதியிடம் கூறிக் கொண்டிருக்கும்போது பரஞ்சோதி கூறினார். "இதிலென்ன தயக்கம்? உங்களுக்குப் பலன் தந்தது என்றால் இது எல்லோருக்கும் பயன் தரும். உங்களுக்கு என் அனுபவத்தைச் சொல்ல வேண்டும். ஏதாவது துயரம் வரும்போது, துரதிர்ஷ்டம் நேரும்போது, எதிர்பாராத இன்னல் வரும்போது நான் என்ன செய்வேன் தெரியுமா? ஒரு நாலு முறை 'சுற்றி நில்லாதே போ பகையே துள்ளி வருகுது வேல்' என்ற பாரதியாரின் பாடலைப் பாடுவேன். அப்படியே வேல் சும்மா துள்ளி விளையாடி எதிரிகளை நொறுக்கித் தள்ளி



நெருங்க முடியாதவாறு சிலம்பம் விளையாடுவதாகக் கற்பனை செய்வேன். அவ்வளவுதான். எல்லோரையும் அடித்து நொறுக்கி விட்டு மீண்டும் வேல் என்னிடம் வந்து சேரும். இன்னொரு விஷயம் உங்களுக்குச் சொல்லவேண்டும். 'சுற்றி நில்லாதே போ பகையே' என்பதுடன், "சுற்றி நில்லாதே போ துயரங்களே, சுற்றி நில்லாதே போ துரதிர்ஷ்டமே, கவலையே கெட்ட எண்ணமே என்று நானாகக் கொஞ்சம் பாரதியாரின் பர்மிஷனுடன் அவர் கவிதையை நீட்டிக் கொள்வது உண்டு" என்று கூறி விட்டு என்னைப் பார்த்தார், நண்பர் பரஞ்சோதி.

நான் அண்ணாந்து நோக்கினேன். பரஞ்சோதி பரஞ்சோதிதான்! பரஞ்சோதி கொடுத்த தெம்பில் என் விஷயத்தையும் அவர் விஷயத்தையும் உங்கள் முன் வைக்கிறேன். உபயோகித்துப் பாருங்கள்.

இதைத்தான் 'நலம் தரும் சொல்லை நான் கண்டு கொண்டேன்' என்று திருமங்கை ஆழ்வார் பாடுகிறாரோ? இதைத்தான் 'அல்லலெல்லாம் தீர எனக்கு ஆனந்தமாக ஒரு சொல்லை என்பால் வைத்ததை என் சொல்வேன் பராபரமே' என்று தாயுமானவரும் பாடுகிறாரோ?

உங்களுடைய நிலை வேறாயிருக்கலாம். நீங்கள் வேலை தேடிக் கொண்டிருக்கலாம். அட்மிஷனுக்காக அலைந்து கொண்டிருக்கலாம். நல்ல துணையை, செல்வத்தை, நோயற்ற வாழ்வை நாடிக் கொண்டிருக்கலாம். எதைத் தேடிக் கொண்டிருந்தாலும் பயப்படாமல் அந்தக் "கொம்பு மீசைக்காரரிடம்" போங்கள் - பாரதியைத்தான் சொல்லுகிறேன். அவருடைய பாட்டை, வீரத்தை உங்களது தேவைக்கேற்ப சற்று மாற்றிக்கொண்டால் நிச்சயம் அவர் சண்டைக்கு வரமாட்டார்.

அமெரிக்காவில் அரசியல் மாநாட்டில் இருந்து ஒரு சாதாரண கூட்டம்வரை முதலில் பிரார்த்தனை செய்துவிட்டுத் துவங்குகிறார்கள். என்ன பிரார்த்திக்கிறார்கள் என்று நினைக்கிறீர்கள்? 'ஆண்டவனே! இங்கு நாட்டையும் எங்களையும் பாதிக்கும் முக்கியமான முடிவு எடுக்கக் கூடியிருக்கிறோம். சரியான புத்தியைக் கொடுத்து எங்களுக்கு வழி காட்டு' என்ற மாதிரியில் மதகுருமார்கள் பிரார்த்தனை கூறுகிறார்கள்.

வெளிநாட்டிலாகாவின் முன்னாள் காரியதரிசி டீன் ரஸ்க் சிறுவனாயிருந்தபோது அவருக்குத் தெரிந்த ஒரு நீதிபதி கூறுவாராம்: 'எல்லாம் கடவுளால்தான் ஆகக் கூடும் என்று பிரார்த்தி. பின் எல்லாம் உன்னால்தான் ஆகக்கூடும் என்று காரியத்தைச் செய்.'

(தொடர்ந்து வரும்.........)

# முரசு குறுக்கெழுத்துப் போட்டி

வாசக நெஞ்சங்களே! உங்கள் சிந்தனைக்குத் தீனி போடும் வினாக்கள் அடங்கிய இப் போட்டியிலே ஆர்வமுடன் பங்குகொண்டு பரிசுகளையும், பாராட்டுக்களையும் பெற வாழ்த்துகின்றோம்.

குறுக்கெழுத்துப் போட்டி இல. 168க்கான சரியான விடைகளை அனுப்பி 250 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி.

எம்.மொஹமட் சரீப், 37, வைத்தியசாலை வீதி, திருகோணமலை.

## பாராட்டுப் பெறும் 10 அதிர்ஷ்டசாலிகள்.

1. கே.ஜே.தர்மலிங்கம், 19/1, கோவிந்தன் வீதி, மட்டக்களப்பு.
2. தே.ஆனந்தகுமரன், 274/11, வலியமுன வீதி, ஹேகித்த, வத்தளை.
3. திருமதி சீத்தா ஜெயபாலன், மருந்தகம், பிபிலை எஸ்டேட், பிபிலை.
4. க. நிரஞ்சன், பிரதிபிம்பராம வீதி, களுபோவில.
5. இஷாரா பேகம் ஜமீல் 390 ஏ, செமனரிவத்த வீதி, தென்னக்கும்பர.
6. ஏ.ஜே. பாத்திமா பஸ்னா, 61/1A/1, மகாபுத்கமுவ, முல்லேரியாவ.
7. ஆர்.கார்த்திகேசு, 3 1/3, 42 ஆவது ஒழுங்கை, கொழும்பு 06.
8. த. திவ்யா, புதிய தெரு, உப்புக்குளம், மன்னார்.
9. ஈ. மயூரன், கண்டி வீதி, வவுனியா.
10. த. சுமனதிலகன், பராக்கிரம வீதி, கொழும்பு 14.

## குறுக்கெழத்துப் போட்டி 170

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | ■ | 6 |
| 7 | 8 | ■ | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 | ■ | ■ |
| 19 | ■ | 21 | 22 | 23 | 24 |
| 25 | 26 | 27 | ■ | 29 | 30 |
| ■ | 32 | ■ | 34 | 35 | 36 |

### இடமிருந்து வலம்

1. உதைபந்தாட்டத்தில் புகழ்பெற்ற நாடு (குழம்பியுள்ளது).
7. ஆண்களின் சோகத்தின் வெளிப்பாடாகவும் இதை வர்ணிப்பர்.
10. கொடையாளி அல்லது இன்பம் என்றும் பொருள்படும் (திரும்பியுள்ளது).
13. கடவுள் அல்லது ஞானம் என்றும் கூறலாம் (குழம்பியுள்ளது).
21. இராசிகளில் ஒன்று (குழம்பியுள்ளது).
25. அடிமை என்றும் பொருள்படும் (குழம்பியுள்ளது).
29. இரண்டு என்ற எண்ணையும் குறிக்கும் (திரும்பியுள்ளது).
34. பைத்தியம் அல்லது மயக்கம் என்றும் கூறலாம்.

### மேலிருந்து கீழ்

1. விக்ரம் நடித்த திரைப்படமொன்று.
2. வயலினை இப்படியும் கூறலாம். (தலைகீழ்).
4. புகழ்பெற்ற நடிகை (குழம்பியுள்ளது).
6. காட்டு மிருகமொன்று (தலைகீழ்).
15. உயிரற்ற பொருள் (குழம்பியுள்ளது).
23. சூரியன் (குழம்பியுள்ளது).
24. சிலை அல்லது திருமகள் என்றும் பொருள்படும்.
26. அன்னை (தலைகீழ்)

### போட்டி விதிகள்:

இதற்குரிய விடையைக் கூப்பனில் நிரப்பி, அஞ்சலட்டையில் ஒட்டி 30.05.2006 க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள். அனுப்ப வேண்டிய முகவரி :

குறுக்கெழுத்துப் போட்டி இல-170
தினமுரசு வாரமலர்,
த.பெ. இல. - 1772,
கொழும்பு.

தங்கள் சரியான முகவரியையும், காசுக் கட்டளையை மாற்றக்கூடிய அண்மித்த தபாலகத்தின் பெயரையும் குறிப்பிடுக.

## குறுக்கெழுத்துப் போட்டி 168 விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 மி | 2 அ | 3 ன | 4 ம் | ■ | 6 தொ |
| 7 ஊ | 8 சா | 9 ம் | 10 ற | ■ | 12 டி |
| 13 கு | ■ | 15 த | 16 ச | 17 ம் | ■ |
| ■ | 20 வெ | ■ | ■ | 23 தே | 24 சு |
| 25 லை | 26 சா | ■ | 28 ர் | 29 ற | 30 தே |
| 31 கு | 32 க் | 33 தெ | ■ | 35 வா | 36 சி |

சரியான விடையை அனுப்புவோரில் முதல் அதிர்ஷ்டசாலிக்கு 250 ரூபா பரிசுண்டு. அடுத்த பத்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர்கள் தினமுரசில் பிரசுரமாகும்.

# புதிய நடையில் புதிய தத்துவங்கள்

- வழங்குவது ராஹில்

## நீ உதிராத பூ!

ஒரு துளி பெற்றதும் சிப்பிகூட தாய்மை அடைகிறது.

முத்து என்ற குழந்தையை அது பிரசவிக்கிறது.

மூங்கில் ஒரு துளி உண்டாலும் முத்தால் நிரம்புகிறது.

உண்மை துளியாக உன்னில் விழும்போது நீ முத்தாகிறாய்.

ஒளி உன்னில் உருவாகும்போது மொத்த மக்களுக்கும் நீ சொத்தாக மாறுகிறாய்.

உனது சொற்களில் வைரக்கற்கள் விளைகின்றன.

நீ பெறுமதி பெறுகிறாய்.

நீ வெளிச்ச வினைகள் விதைக்கின்ற போது இரவு கூட திடீரென விடிந்து விடுகிறது.

சூழலைச் சுற்றியுள்ள இருள்கூட இறந்து போகிறது.

உன் உயிரிலிருந்து ஒளி வெளிவரும் போது உனது பார்வை விழுகின்ற இடங்களில் பூக்கள் முளைக்கின்றன.

ஒருவனில் உன் விழிகள் விழுந்ததும் அவனைப் பற்றி ஒரு புத்தகம் அளவு உன்னால் கூற முடியும்.

அடுத்தவன் அகத்தில் உன்னால் உட்காரலாம்.

உன் நித்திரைத் திரையில் விழுகின்ற கனவுகள் முக்கால நிகழ்வுகளின் வகுப்பறை என்பதை நீ காண்பாய்.

மாணிக்கத்தைப் பட்டை தீட்டும் போது அது பிரபல்யமாகிறது.

உன் மனதிடம் நறுமண நினைவுகளால் நீ நெருங்கும்போது உதிராத பூ ஆகிறாய்.

உன் இருபது விரல்களையும் பிற உயிர்களுக்காக நீ ஒதுக்கு! உன் நாட்களே உன்னை மரியாதைப்படுத்தும்.

சுயநல விசம் உனது வாழ்க்கைப் பாலில் விழுந்தால் நீ நஞ்சாகிறாய்.

பிறர் நலத் தேன் உன்னிலிருந்து உதிரும் போது நீ எல்லோருக்கும் இனிப்பாகிறாய்.

உன் பாதையில் சாக்கடை வந்து சந்திக்காமல் வேலி செய் நீ!

பூஞ்சோலை வளர்த்து உன் மனப் பூமி எங்கும் ஆனந்தம் தூவு!

பொய்யின் பார்வையிலிருந்து தப்பித்து விடு!

பொய்; முட்டைகளிட்டு குஞ்சுகள் பொரித்து அது உன்னையே உணவாக்கக்கூடியது.

அதன் முகவரிக்கு உன் மனம் அனுப்பாதே!

உண்மை குடித்துப் பார்! இறுதி வரை இனிக்கும் அமுதம் அது!

உண்மையை உடைத்துப் பார்! அதற்குள்ளிலிருந்து அழகிய நட்சத்திரங்கள் உனக்குக் கிடைக்கலாம்.

# மனித நேயம்



-நா.ஜெயபாலன், பிபிலை.

**காலை** சூரியன் கடுகடுப்பாகவில்லை இன்னும்! உள்ளேயும் வெளியிலும் இத்மான காற்று இலேசாக வீசிக் கொண்டிருந்தது "ஐயா..." என்றவாறு தலையை சொறிந்து கொண்டு நின்ற பியுன் தங்கராசுவை கோபத்தோடு ஏறிட்டார் அந்த எஸ்டேட் 'பெரிய' கிளார்க்கர் சிவப்பிரகாசம்!

"ஐயா... காசு கொஞ்சம் வேணும்...! மகளுக்கு சீசன் டிக்கட் எடுக்கணும்! மாசக் கடைசி! கையில காசு இல்ல...! வழமை போல... நீங்கதான்..." அழாத குறையாகக் கெஞ்சி நின்றான் தங்கராசு.

"இந்தா பார் ராசு....! நீ இதுக்கு முன்னுக்கு வாங்கின கடன் வட்டியும் முதலுமா குட்டிப் போட்டுக்கிட்டு இருக்கு. நேத்து அந்திக்குத்தானே காசு இல்லன்னு சொன்னேன். விடிஞ்சவுடனே காசு வேணும்னா எப்படி? மொளைச்சா வரும்?" ஒப்பீஸ் வேலைப்பளு காரணமாக சிவப்பிரகாசத்தின் பி.பீ. கொஞ்சம் ஓவராகிப் போயிருந்தது.

போன மாதம் மகள் சடங்குக்குப் பணம் கேட்டான். அதற்கு முதல் மாதம் சம்சாரத்துக்கு வைத்தியம் பார்க்கப் பணம் கேட்டான். போன வாரம் யாரோ உறவினர் சாவுக்குப் பணம் கேட்டான் - எல்லாவற்றிற்கும் மறுக்காமல் பணம் கொடுத்தவர் இப்போது மறுக்கிறார் என்றால் அதற்குக் காரணம் இருக்கத்தான் செய்கிறது. மாதாமாதம் கடன்போக வட்டிப் பணத்தை ஐயாவுக்கு சாராயப் போத்தலாகத்தான் சப்ளை பண்ணுவது தங்கராசுவின் வழக்கம். ஆனால் ஏதோ ஒரு காரணத்தால் அப்படிச் செய்ய முடியாமல் போய்விட்டது. அதனால் 'தண்ணி' போட்டால் வரவேண்டிய 'வெறி', 'தண்ணி' போடாமலேயே வந்துவிட்டது ஐயாவுக்கு!

நாள் சம்பளத்தில் வாழ்க்கையை ஓட்டும் சாதாரண தோட்டத் தொழிலாளியான தங்கராசு, நோயாளி மனைவியையும், மூன்று பிள்ளைகளையும் காப்பாற்றுவதற்காக பெரிதும் சிரமப்பட்டான். எடுக்கின்ற சம்பளம் - சாப்பாட்டுக்கே போதவில்லை பற்றாக்குறை பலமுறையிலும் பயமுறுத்தியதால் அவ்வப்போது ஏற்படுகின்ற 'அவசர' தேவைகளை பெரிய கிளார்க்கரிடம் கடன் வாங்கித்தான் சரிக்கட்டிக் கொள்வான். அதற்காக - அவன் ஐயாவுக்கும் - ஐயா வீட்டுக்கும் 'மாடாக உழைப்பது', மறந்தும் கூலி கேட்காதிருப்பது, தங்கராசுவின் மனிதாபிமானத்துக்கு ஒரு எடுத்துக் காட்டு! எஸ்டேட்டில் 'தபால் சேவை' செய்து கொண்டு ஓய்வு நேரங்களில் தனக்கும் - தன் குடும்பத்துக்கும் 'பெரிய' 'பெரிய' - உதவிகளைச் செய்து வருவதால் தங்கராசுவின் உறவை அவ்வப்போது வருகின்ற கோபத்தால் முறித்துக்கொள்ள விரும்பாத சிவப்பிரகாசம், இப்போது அவனை மேலுக்காக சமாதானப் படுத்த விரும்பினார். "சரி...சரி ராசு மத்தியானம் போஸ்ட் ஒப்பீஸுக்கு போயிட்டு வரும்போது ஒப்பிஸுக்கு வந்திட்டுப்போ... காசு தர்றேன்...! இப்போ... இந்தக் கடிதங்களை உடனே போஸ்ட் பண்ணிட்டுவா..." என்று அவசரமாக தனது மேசை லாச்சியை திறந்து ஒரு கட்டுக் கடிதங்களை - அவனிடம் கொடுத்து அனுப்பி விட்டு - பெரிய கிளார்க்கர் தன் அலுவலக வேலைகளில் மூழ்கிவிட்டார்.

தூரத்தில் டீபெக்டரியிலிருந்து பன்னிரண்டு மணிக்கான சங்கு ஊதப்பட்டது. ஒப்பீஸ் ஸ்டாப்கள் பகல் சாப்பாட்டுக்கு - ஆயத்தமானார்கள். சிலர் வீட்டுக்குச் சென்றார்கள்; சிலர் கென்டினுக்குச் சென்றார்கள். சிவப்பிரகாசம் மட்டும் சாப்பாட்டுக்குச் செல்லவில்லை. அவர் எப்போதும் ஒரு மணிக்கு - தங்கராசு மூலம் வீட்டிலிருந்து சாப்பாடு வந்த பிறகு தான் சாப்பிடுவார். மாதக் கடைசியானபடியால் இன்று கணக்கு வேலை அவரை டென்சனாக்கிவிட்டிருந்தது. மேசைமீது பல புத்தகங்களை - விரித்து கம்பியூட்டரும் - கல்குலேட்டருமாக அவதிப்பட்டுக் கொண்டிருந்தார்; அதனால் அமைதியாக அங்குவந்து நின்ற தங்கராசுவை அவர் கவனிக்கவில்லை.

"ஐயா... ஐயா..." பின்னால் சென்ற தங்கராசு ஐயாவை அழைத்தான் அவர் திரும்பவில்லை. "ஐயா...நான்...தங்கராசு வந்திருக்கேன்...!" மீண்டும் அழைத்தான். இப்போது சாடையாக சிவப்பிரகாசம் திரும்பிப் பார்த்தார். தங்கராசு கையில் சாப்பாடு இல்லை. பசியோடு கோபமும் சேர்ந்துகொண்டது. "எங்கடா ராஸ்கல் சாப்பாடு." ஐயா ஆவேசமானார். "ஐயா நான் இன்னும் வீட்டுக்கே - போகலைங்க. காசு.. காசு.." - தடுமாறிய வண்ணம் தங்கராசு தன் கால்சட்டை பொக்கட்டில் கைவிட்டபோது சிவப்பிரகாசம் நிதானம் இழந்துவிட்டார். "பிளடி பாஸ்கட்... நான் சாப்பாடு கேட்கிறேன்..! உனக்குப் பணம் தேவைப்படுது" என்று ஆவேசத்தோடு அவன்மீது பாய்ந்து தங்கராசுவின் கழுத்தைப் பிடித்து கதவில் தள்ளிவிட்டார். பெரிய கிளார்க்கர் சிவப்பிரகாசம் தள்ளிய வேகத்தில் தங்கராசு தலை அடிபட தரையில் வீழ்ந்துவிட்டான். ஒப்பீஸுக்குள் திடீரென ஏற்பட்ட சத்தத்தைக் கேட்டு அங்கிருந்த அனைவரும் ஓடிவந்தனர். வந்தவர்கள் ஒருவாறு நிலைமையைப் புரிந்துகொண்டு பியுன் தங்கராசுவை மெல்லத் தூக்கி எடுத்து ஆசுவாசப் படுத்திவிட்டு, அவரவர்கள் வேலைகளைக் கவனிக்கச் சென்று விட்டனர்

சிறிது நேர மௌனத்தின்பின் தங்கராசு அழுது கொண்டே பெரிய கிளார்க்கரிடம் வந்தான்...

"ஐயா ஒருநாளும் இல்லாம இன்னைக்கு அவசரப்பட்டு கை நீட்டிட்டீங்க. பெரிய மனிசன் நீங்க அடிச்சா பரவாயில்ல... ஆனா... நான் சொல்றத கொஞ்சம் பொறுமையா கேளுங்க..! இந்தாங்க இந்த என்வலப்புல ஐயாயிரம் ரூபா.. பணம் இருக்கு! அவசரத்துல நீங்க போஸ்ட் பண்ணக் கொடுத்த கடிதங்களோட இந்தப் பணக் கவரும் இருந்திச்சு. இது ஒப்பீஸ் பணமோ, உங்க பணமோ தெரியல்ல. முதல் வேலையா பணத்த உங்ககிட்ட ஒப்படைக்கணும்னுதான் வீட்டுக்குக்கூட போகாம ஒப்பிஸுக்கு ஓடிவந்தேன் உங்ககிட்ட இந்தப் பணத்த கொடுக்கிறதுக்கு. ஆனா அதுக்கு முன்னாடி அவசரப்பட்டு நீங்க என்னைய அடிச்சுட்டீங்க. பசி கொடுமையில ஏதோ நடந்துடுச்சி... பரவாயில்லை...! பத்து நிமிசம் பொறுத்துக்கங்கோ. நான் வீட்டுக்கு ஓடிப்போய் அம்மாகிட்ட உங்களுக்கு பகல் சாப்பாடு வாங்கிட்டு வந்துடுறேன்."

தங்கராசு கண்களைத் துடைத்துக் கொண்டு எதுவுமே நடக்காதவன்போல் ஐயா வீட்டை நோக்கிப் போய்க் கொண்டிருந்தான். பெரிய கிளார்க்கர் சிவப்பிரகாசத்துக்கு பேரதிர்ச்சியாகப் போய்விட்டது. பியுன் தங்கராசுவின் விசயத்தில் 'நம்பி நடக்காதே' - என்ற அவரின் வறட்டு நம்பிக்கை இந்தச் சம்பவத்தின் பின் தவிடு பொடியாகிவிட்டது.

மனித நேயத்தை ஐயாவிடமில்லை அவனிடம் தான் நாம் கற்றுக்கொள்ள வேண்டும்!

# நீயில்லாத உலகிலே....!



நா. வத்சலா, புத்தளம்.

"**அம்மா** உங்ககிட்ட எத்தனை தடவை சொல்லி இருக்கேன். என்னோட வாழ்க்கையில இனி கலியாணங்கற பேச்சுக்கே இடமில்லைன்று. தயவு செய்து புரிஞ்சுக்குங்க. என்னால கலியாணம் பண்ணிக்க முடியாதுன்னா முடியாதுதான். ஏம்மா என்னை தொந்தரவு செய்றீங்க" என்று கூறி முடித்த மைதிலி, "மைவிழி! நான் சொல்றத கொஞ்சம் கேளு" என்று தன் தாய் அழைத்ததையும் கேளாமல் வெளியே சென்றுவிட்டாள். தான் எடுத்த அடுத்த முயற்சியும் தோல்வியுற்றதால் துன்பம் நிறைந்த கண்களால் தன் கணவனான சுந்தரத்தை நோக்கினாள் பாக்கியம்.

"அவ மனசு எப்பதான் மாறுமோ தெரியல. கொஞ்ச நாளைக்கு அவள ஒன்னும் கேக்காம இருக்கிறது நல்லது" என்று கூறிய சுந்தரம் தன் அறைக்குச் செல்ல காலை எடுத்து வைத்தவர் மீண்டும் திரும்பினார். "கொழும்பில இருக்கிற என் தம்பி வீட்டுக்குப் போவோணும்னு கேட்டிருந்தாயில்ல. அனுப்பி வை. மாறுதலான இடத்திற்குப் போனாலாவது கொஞ்சம் மனசு மாறுவாளான்னு பார்ப்பம்" என்று கூறிவிட்டு அறையை நோக்கிச் சென்று விட்டார்.

சுந்தரத்திற்கும் பாக்கியத்திற்கும் ஒரே மகள் தான் மைவிழி. ஒரே பிள்ளையாதலால் செல்லம் கொஞ்சம் அதிகமாகக் கொடுத்ததுடன் சுதந்திரமும் அளித்திருந்தனர். அவளுக்கு திருமண வயது வந்தவுடன் திருமண ஏற்பாடு செய்யும் போதுதான் அவள், தான் நித்யனை காதலிப்பதாகத் தெரிவித்தாள். அவர்களும் கோபப்படாமல் மைவிழியின் காதலுக்கு சம்மதம் தெரிவித்தனர். நித்யனின் வீட்டார் மட்டும் முதலில் மறுப்புத் தெரிவித்தாலும் நித்யனின் போராட்டத்தினால் அவர்களும் பச்சைக்கொடி காட்டத் தவறவில்லை. இதன் பிறகு இரு வீட்டாரும் உறவு கொண்டாடி மகிழ்ந்தனர். காதலர்களான மைவிழியும் நித்யனும் கூட மிக்க மகிழ்ச்சியுடன் பேசிப் பழகி வந்தனர். இவ்வாறு ஒருநாள் மைவிழியைக் காண வந்த நித்யன், தான் வேலை விடயமாக கொழும்பு செல்வதாக கூறிச் சென்றவன் திரும்பி வரவேயில்லை. அவன் சென்ற பேருந்து விபத்துக்குள்ளாகி அவ்விடத்திலேயே இறந்துவிட்டான் என்ற செய்தியே வந்தது. இதைக் கேட்ட மைவிழி இடியோசை கேட்ட அரவம் போல் துடித்தாள்; துவண்டாள்; அலறினாள்.

ஆனால் நித்யன், நித்யமாக அவளை விட்டுப் பிரிந்துவிட்டான். இந்நிகழ்ச்சியின் பின் புத்தி பிசகியவள் போல் திரிந்தவள் சில மாதங்களுக்கு முன்பு தான் சாதாரணமாக எல்லோரிடமும் பேசவே ஆரம்பித்தாள். இவ்வாறு மைவிழி சற்றுத் தெளிவாகிய பிறகுதான் அவளுக்கு வேறு ஒருவருடன் திருமணம் செய்து வைக்க முயற்சி மேல் முயற்சி எடுத்து ஒவ்வொரு முயற்சியிலும் தோற்றே போனார்கள் அவளது பெற்றோர்.

வெளியே சென்ற மைவிழி அருகிலுள்ள சிறுவர் பூங்காவினுள் நுழைந்தாள். அங்கேயிருந்த ஆசனமொன்றில் அமர்ந்தவளுக்கு சற்று முன்னர் வீட்டில் நடந்த சம்பவம் எண்ணத்தில் சுழல ஆரம்பித்தது. நாளுக்கு நாள் அவளின் பெற்றோரின் நச்சரிப்பு அதிகரிப்பதை அவள் உணரத்தவறவில்லை. அவர்களின் நச்சரிப்பில் இருந்து தப்பிக்க வழிதெரியாது குழம்பினாள். எவ்வளவு நேரமோ தெரியாது, அதையே நினைத்துக் குழம்பியவள் நேரம் சென்றுவிட்டதை உணர்ந்து வீட்டை நோக்கி நடக்கலானாள். வெளியே சென்று வீட்டுக்கு வந்த மைவிழியிடம் சில நாட்களுக்கு சித்தப்பா வீட்டில் இருந்து வரும்படி பாக்கியம் கூறினாள். அதற்கு 'சரி' என்பதாய் தலையை ஆட்டி விட்டு அறைக்குள் சென்றுவிட்டாள். மறுநாள் காலையிலேயே கிளம்பத் தயாரானாள் மைவிழி. அவளை வழியனுப்பவும் மீண்டும் அவளது திருமண விடயம் பற்றிப் பேசவும் நினைத்து வாசற்படியோரமாய் நின்றிருந்த சுந்தரமும், பாக்கியமும் அவள் வந்த நிலையைக் கண்டு அதிர்ச்சிக்குள்ளாகினர். பாக்கியத்திற்கு மயக்கமே வந்துவிடும் போலிருந்தது. அவள் நெற்றியில் என்றும் திகழ்ந்து கொண்டிருக்கும் திலகம் அன்றிருக்கவில்லை. அதற்குப் பதிலாக நீறு மட்டுமே இருந்தது. கலைவாணியைப் பறைசாற்றும் விதமாக வெளேரென்ற நிறத்தில் ஒரு புடவையை அவள் மேனியில் சுற்றியிருந்தாள். வேறு எந்த ஆபரணமும் அவள் மேனியை அலங்கரிக்கவில்லை. பயணத்திற்கான பை மட்டும் கையில் இருந்தது. இக்கோலத்தில் தன் மகளைப் பார்க்கவே அஞ்சிய சுந்தரம் வேறு பக்கம் திரும்பி சோகத்தின் உருவானார். பாக்கியம் ஏதோ மயக்கத்தில் நடப்பவள் போல் நடந்து வந்து மைவிழியை நோக்கி ஏதோ கூறுவதற்காய் வாயைத் திறந்தாள். ஆனால் அவள் வாயிலிருந்து சொற்களுக்குப் பதிலாக விம்மலே வெளிவந்தது. மைவிழி தனது தாயின் தோள்களைப் பற்றி "அம்மா நித்யனை என்னால மறக்க முடியல. அவர தவிர வேற ஒருத்தர என்னால கல்யாணம் பண்ணிக்க முடியாது. கல்யாணம் பண்ணிக்காம உங்களுக்கும் இந்த சமூகத்திற்கும் என்னால பதில் சொல்லவும் முடியாது. அதனால்தான் இந்த முடிவு. கல்யாணம் ஆகாமலேயே விதவை. இந்த கோலத்தில என்னை பார்க்கிற யாரும் ஏன் கல்யாணம் பண்ணிக்காம இருக்கிறங்கறத கேட்க முடியாது. ஏன் நீங்க கூட கேட்கமாட்டீங்க. இந்த முடிவு உங்க மனச பாதிக்கும்னு தெரியும். என்னை மன்னிச்சிடுங்கம்மா. எனக்கு வேற வழி தெரியல. நான் வர்றேன்" என்று ஒரே மூச்சாய் மனம் குமுறி கூறி முடித்தவள், பெற்றோரை வணங்கிவிட்டு பாதையில் இறங்கிச் சென்றாள். இவ்வாறு விதவைக் கோலத்தில் சென்று கொண்டிருந்த மகளுக்கு ஒன்றும் கூற முடியாதோராய் கண்களில் நீர்வழிய சிலையாக நின்றனர் சுந்தரமும் பாக்கியமும்.

படித்துச் சுவைத்தவற்றில் சிலவற்றை உங்கள் சிந்தனைக்காக முன்வைக்கிறோம். உங்கள் அநுபவத்தையும் எம்முடன் பகிர்ந்து கொள்ளுங்கள்

## சிந்தித்துப் பார்க்க...

# குறள் சொல்லும் வாழ்க்கைத் தத்துவம்

பொருளுக்கே முதலிடங் கொடுக்கும் இன்றைய உலக வாழ்க்கையானது; அறத்துக்கு எந்த அளவு மதிப்புக் கொடுக்கிறது என்று சிந்திப்போமேயானால், ''அறமா? அது எங்கே வாங்கலாம்?'' என்ற கேள்வியைக் கேட்பது போலிருக்கும். ஆனால், பேச்சில் மட்டும் அது ஏமாற்றத் தெரிந்தவர்களின் சித்தாந்தமாகக் கூறப்படும். இதில் அப்பாவிகளுக்கும், அறத்தை வளர்ப்பவர்களுக்கும் உடன்பாடு மிக மிகக் குறைவு. பொருளால் மட்டும் நிம்மதியான வாழ்வு கிட்டுமென்பதற்கு உத்தரவாதம் உண்டா?

***''இன்மையின் இன்னா துடைமை முறைசெய்யா***
***மன்னவன் கோற்கீழ்ப் படின்'' குறள் - 558***

அறம் பிழைத்த ஆட்சியாளன் கட்டுக்குட்பட்ட பொருளுடைமையும் துன்பந்தருவதே ஆயின் பொருளால் அடையும் நன்மைதான் என்ன?

# காத்திருந்த நாள்

**தருவது கற்பகன்**

**அருள்வர்மனின்** கைகளைப் பற்றிக் கொண்ட செண்பகவல்லி, "அதற்குள் என்ன அவசரம் வந்து விட்டது? நீங்கள் இங்கு வந்து அரை நாள் கூட ஆகவில்லையே! அதற்குள் என்னோடு இருக்கச் சலித்துவிட்டதா? நீங்கள் என்னோடு பேசுவது, பழகுவதெல்லாம் வெறும் போலிவேடம் என்பது எனக்கு புரிந்துவிட்டது" என்று எரிந்து விழுந்தாள். இதைக் கேட்டதும், அருள்வர்மன் அதிர்ந்து போனான். அவனது நாடி நரம்புகளெல்லாம் ஒரு கணம் ஸ்தம்பித்து நின்று விட்டது போன்றதோர் அதிர்வு... அதனால் ஏற்பட்ட இதயத்துடிப்பின் வேகம் அவனை நிலைதடுமாற வைத்தது. "செண்பகவல்லி!" என்று அவனை அறியாமலேயே கத்திவிட்டான். அப்படியானதொரு தொனியை இதுவரை கேட்டிராத செண்பகவல்லியும், திடுக்குற்றுத்தான் போனாள். இருவரும் அந்த அதிர்விலிருந்து விடுபட வெகு நேரம் பிடிக்கவில்லை. இருவரும் செய்வதறியாது ஏதோ நடந்துவிட்டதாக நினைத்தார்களோ என்னவோ, அருள்வர்மன் மூடி இருந்த கண்களைத் திறந்தான். அவன் முன்னிலையில் செண்பகவல்லி கலங்கிய கண்களோடு காட்சியளித்தாள்.



அவள் கண்களிலிருந்து தொடர்ந்தும் முத்துக்கள் உருண்டோடிக் கொண்டிருந்தன. அருள்வர்மனால் அவள் முகத்தை உற்று நோக்க முடியவில்லை. மெதுவாக அவளை நெருங்கினான். "செண்பகவல்லி! இன்னும் என்னை நீ புரிந்து கொள்ளாமலிருக்கிறாயே! போர்ச் சூழலிலும், உன் புன்னகை முகத்தைக் காணவேண்டும் என்றல்லவா புரவியைப் பறக்க விட்டேன். போதும் என்று நான் புறப்படவில்லைக் கண்ணே! உன் பொன் மேனி எனக்குப் போதைப் புதையல்தான். ஆனால், பொழுது விடியுமுன் போர்ப் பாசறைக்கு நான் செல்லா விட்டால் போய்விடும் செய்தி மன்னனுக்கு" என்ற அருள்வர்மனின் முகத்தில் தோன்றிய கலவரத்தைப் புரிந்து கொண்ட செண்பகவல்லி. "அத்தான் என்னை மன்னித்து விடுங்கள். புன்னகையே உருவான உங்கள் முகத்தில் புயலும் எழும் என்பதைக் காட்டிவிட்டீர்களே! பொல்லாதவர் நீங்கள். போலி என்று நான் சொன்னதற்கே இத்தனை கோபமென்றால் போர்க்களத்தில்... அப்பப்பா நினைத்து பார்க்கவே பயமாக இருக்கிறது. புதையல் என்றீர்களே, மீண்டும் இந்தப் புதையலைத் தேடி எப்போது புறப்படப் போகிறீர்கள்?" என்றாள் கிண்டலாக.

"பூரணை நாளை மறுநாள். பொறுத்திருக்க மாட்டாயா? ஒரு நாள்."

"போதும் உங்கள் கெஞ்சல்; பொறுமையில்லை எனக்கு நெஞ்சில்."

"போய்வருகிறேன் என்றால் பொங்கியெழுந்து விடுவாயோ?" புன்னகையோடு வழியனுப்பு கண்ணே! புலர்ந்து விடும் பொழுது.

"பொய்த்து விடாதே உங்கள் வாக்குறுதி"

புறப்படுகிறான் அருள்வர்மன். பொங்கியெழும் கண்ணீரோடு புரவியின் விரைவைப் பார்த்தவாறு நின்றாள் செண்பகவல்லி.

பொங்கியெழும் அலைகளைக் கிழித்துக் கொண்டு பூரணை நிலவு தன் கதிர்களைப் பரப்பிக் கொண்டு புறப்பட்டுவிட்டது பூவுலகை வலம் வர. புன்னகைத்த வட்டமுகம் போக விடைபெற்றதோ ஆழியிடம்? அதனால்தான் ஆழியின் மனக்குமுறல் அலைகளாய் எழுந்து ஆர்ப்பரிக்கின்றதோ தெரியவில்லை.

கதிரவன் மறைவதையே கண் கொட்டாமல் பார்த்துக்கொண்டிருந்த அருள்வர்மனின் மனதில் ஓர் ஆனந்தக் களிப்பு அலையாக எழுந்து அவன் ஆசைகளுக்கு உரமேற்றியது. ஆதவனின் மறைவை எதிர்பார்த்திருந்த அருள்வர்மனைப் போலவே அலைகளைத் தாண்டி ஆகாய வெளியிலிருந்து இருளை அகற்றிவிட்டதோர் பெருமிதத்தோடு உலாவந்து கொண்டிருந்தது வெண்ணிலவு. அருள்வர்மன் புரவியின் வேகம் போதவில்லையே என்று பொருமிக் கொண்டிருந்தான். போர்க்களத்திற் கூடப் புரட்சிப் பொருளாகக் கருதப்படும் அதிசய சக்திபடைத்த - அவனுக்குப் பிடித்தமான அந்த வெள்ளைப் புரவி, அருள்வர்மனின் காதல் வேகத்துக்கு ஈடுகொடுக்க முடியாமல் திண்டாடிக் கொண்டிருந்தது. ஆயினும் அது புயலாகப் பறந்து கொண்டிருப்பது அருள்வர்மனுக்குத் தென்படவில்லைப் போலும்.

புரவியை விட்டிறங்கிய அருள்வர்மன் ஓர்முறை அதைக் கூர்ந்து பார்த்தான். அது என்றுமில்லாதவாறு களைத்திருந்தது. அதன் உடலெல்லாம் வியர்வையின் தாகத்தால் வெண்ணிறம் மாறி, சாம்பல் பூர்த்திருந்தது. வாயிற் கூட வெண் நுரை சற்று அதிகமாகவே வெளிவந்திருந்ததைக் கண்ட பொழுதுதான் அது எவ்வளவு வேகமாக வந்திருக்கிறது என்பதை உணர முடிந்தது. அவனை அறியாமலேயே அதன் மீது அவனுக்கு ஏற்பட்ட அனுதாபம், அன்பு மிகுதியினால் அதைத் தட்டிக் கொடுத்தான். முடிந்த அளவு அதற்கு ஓய்வு கொடுக்கும் நோக்கம் தென்படவே கடிவாளத்தை அகற்றி அருகிலிருந்த பசும் புற்றரையில் அதை மேயவிட்டுவிட்டு அந்த மலர்வனத்தில் செண்பகவல்லியைக் காணவில்லையே என்ற எண்ணம் மேலோங்க சுற்றும் முற்றும் பார்த்தவன் கண்களில் அவள் தென்படவில்லை. ஏன்? என்று அவன் மனதில் கேள்வி எழுந்த போதுதான், குறிப்பிட்ட நேரத்துக்குமுன் தான் வந்து விட்டதை அவனால் உணரமுடிந்தது. அவள் வருகையை எதிர்பார்த்துக் காத்திருப்பதை விட வேறு வழியில்லை. சோலை நடுவில் அமைக்கப்பட்டிருந்த அழகு மண்டபத்தில் அமர்ந்து கொண்டான்.

சற்று கண்ணுறங்கலாமா? என்று நினைத்தவாறு அகன்ற பாறையால் அமைக்கப்பட்டிருந்த கற் தூணோடு சாய்ந்தவனுக்கு,கொலுசுச் சத்தம் விழிப்படைய வைத்தது. வாயில் பக்கம் பார்வையைத் திருப்பியவனுக்கு வியப்பு மேலிடவே கூர்ந்து கவனித்தான். கையிலோர் தட்டை ஏந்திய வண்ணம் செண்பகவல்லி முத்துக்கட்டிய சப்பரமென அசைந்து வருவது தெளிவானது.

வழக்கம் போலல்லாமல் இன்று அவள் வருவதற்கு முன்பாக தான் வந்துவிட்டதைச் சாட்டாக வைத்துக் கொண்டு அவளைக் கோபப்பட வைத்து அழகு பார்க்க வேண்டும் என்று குறும்புத்தனத்தால் அவளைக் கண்டவுடன், உறங்குபவன் போல் பாசாங்கு செய்தான்.

மண்டபத்தை அண்மித்த செண்பகவல்லி, ஒரு கணம் பிரமித்து நின்று விட்டாள். இங்கே உறங்கிக் கொண்டிருப்பது யாராயிருக்கும்? என்ற கேள்வி மனதில் எழுந்த மறுவினாடியே அவனது உடையும், தோற்றமும் அருள்வர்மன்தான் என்பதைக் காட்டிவிட்டது. இருந்தாலும் இப்படி நந்தவனத்தில் அதுவும், நங்கையைத் தேடி வந்தவன் தூங்கி வழியும் அளவுக்குச் சோம்பேறியல்லவே!... அவருக்கு ஏதாவது என்று எண்ணும் போதே அவள் நெஞ்சுக்குள் ஒருவிதமான படபடப்பு ஆரம்பித்து விட்டது. பதறியோடியவள் பக்கத்தில் அமர்ந்து கொண்டாள். மனமெல்லாம் மகிழ்ச்சித் தாண்டவமாடியது.

மாலைவேளை மயக்கம் - இதுதானோ?...

***"மாலை நோய் செய்தல் மணந்தார் அகலாத***
***காலை அறிந்த திலேன்."***
***அதி - 123, குறள் - 1226***

## சிந்தியா பதில்கள்

✉ **சிந்தியா! போருக்கான பாதை 100 மீற்றர் என்றால் இப்போதைக்கு நாம் எவ்வளவு தூரம் முன்னேறியுள்ளோம்.**

-வி.கஜன், வந்தாறுமூலை.

சரி பாதிக்கு மேல் கடந்தாகிவிட்டது. அது முன்னேற்றம் இல்லை பின் வாங்கல்தான்.

✉ **கருணா குழுவினர் தாமே தாக்கியதாக தெரிவிக்கும் சம்பவங்களைக்கூட படையினரே செய்ததாக புலிகள் கூறுகிறார்களே ஏன்?**

-தி.வைஸ்ணவி, கிரான்.

ஒரே கல்லில் இரண்டு மாங்காய் அடிக்கத் தான்.

✉ **மீண்டுமொரு யுத்தம் வரப்போவதாக நம்மவர்கள் இருப்பிடங்களைவிட்டு ஓடுகிறார்களே அதைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

-பா.சுரேந்திரன், திருமலை.

பாதுகாப்போம் என்றவர்களே ஓடுங்கள் என்று விரட்டும் போது ஓடித்தான் ஆகவேண்டும். என்ன தாயகம், மண் என்றெல்லாம் சொல்லிக் கொண்டிருக்கும் நாம் அடிக்கடி அவற்றை அநாதரவாக விட்டுவிட்டு ஓடி விடுகிறோம். அதைப்பற்றி அலட்டிக் கொள்ளாதவர்கள் அந்த மண்ணிலேயே இருந்து சாகவும் துணிந்து விடுகிறார்கள் என்பதுதான் வேதனையாக இருக்கிறது.

✉ **சிந்தியா நீங்கள் இலங்கையில் பிறந்ததையிட்டு எப்போதாவது கவலைப்பட்டதுண்டா?**

-தினேஸ், பண்டாரவளை.

இல்லை. ஆனால் இலங்கையை நினைத்து கவலைப்பட்டதுண்டு.

✉ **சர்வதேசத்திற்கு பாலசிங்கமும், தமிழ் செல்வனும் மாறிமாறி எச்சரிக்கை விடுக்கிறார்களே?**

-எஸ்.ராஜி, தோணிக்கல்.

பாரதியின் பாட்டு ஒன்றே பதிலாகிறது

"நெஞ்சில் உரமுமின்றி
நேர்மைத் திறமுமின்றி
வஞ்சனை செய்வாரடி கிளியே
வாய்ச்சொல்லில் வீரரடி."

✉ **'களவும் கற்று மற' என்று கூறுகிறார்கள் எனக்கு ஞாபக சக்தி அதிகம் எப்படி மறப்பது?**

-ஜெ.சந்திரன், மாத்தளை.

முடியாதுதான். வசமாக மாட்டிக்கொள்ளும் போது ஞாபகசக்திக்காக வருத்தப்படுவீர்கள்.

✉ **'யுத்தமெனும் நெருப்பாற்றை கடப்பதற்கு மக்களே எமது கவசம்' என்று புலிகளின் தலைவர் முன்பு ஒருமுறை கூறினார். அதன் உள்ளார்த்தம் புரிகிறதா?**

-சிவநேசன், நேரியகுளம்.

எதிரியின் இலக்காக மக்கள் நிறுத்தப்படுவார்கள் என்பதை தெளிவாகச் சொல்லியிருக்கிறார் இதில் வேறு என்ன உள்ளார்த்தம் இருக்கமுடியும். இன்று வரை அதுதான் நடக்கிறது.

✉ **சிந்தியா கவிதையைப் பற்றி ஒரு கவிதை சொல்ல முடியுமா?**

-எம்.ஐ.தௌபீக், புத்தளம்.

திருமலை தாமரை மகனின் கவிதை பற்றிய ஒரு கவிதை எனக்கு ஞாபகம் வருகிறது.

தாள்களின் மடியில்
பேனாக்களின் பிரசவிப்பில்
எண்ணங்களின் சாயலில்
எழுதப்படுகிறது கவிதை



சிம்பு – நயன்தாரா
வல்லவன்

✉ **சமீபத்தில் தங்களை அதிர்ச்சிக்குள்ளாக்கிய சம்பவம்?**

-குக்லினா அமீன், காத்தான்குடி.

கடந்த வாரம் நைஜீரியாவில் எண்ணெய் குழாயை வெட்டி திருட்டில் ஈடுபட்ட 53 பேர் தீவிபத்தில் கருகிப்போனதுதான். இத்தனைக்கும் திருட்டில் ஈடுபட்ட அவர்கள் சொத்து சேர்க்கவோ அல்லது இலாபமுழைக்கவோ அல்ல. அடுத்த வேளை உணவிற்காகவே அந்த திருட்டு இடம்பெற்றதுதான் சோகத்தின் உச்சக்கட்டம்.

✉ **சினிமா லேட்ர்ஸ்ட் கிசுகிசு ஏதாவது?**

-குத்தூஸ் அகமட், நிந்தவூர்.

தற்போதைக்கு சிம்பு நயன்தாரா ல்வ்ஸ் தான் ஹிட்டாக உள்ளது.

✉ **சாதாரண விமானங்களில் அதன் காற்றாடிகள் வேகமாக சுற்றுவதன் மூலம் வளி பின்தள்ளப்பட்டு அவை பறப்பை மேற்கொள்கின்றன. ஆனால் யுத்த விமானங்களில் காற்றாடிகளே இல்லையே?**

-பொ.சேந்தன், மஞ்சந்தொடுவாய்.

நீங்கள் சொல்வது சரிதான். யுத்த விமானங்களில் எரிபொருள் சக்தியானது காற்று அழுத்தமாக மாற்றப்படுகிறது. அடுத்த முறை நீங்கள் யுத்த விமானத்தை பார்க்கும்போது முன்பக்கம் காற்றாடிகளைத் தேடாமல் அதன் பின்புறம் பாருங்கள் ஒரு பெரிய அடுப்பு போல கனன்று கொண்டிருக்கும். அதுதான் சூட்சுமம்.

✉ **சிந்தியா நீங்கள் சந்திக்க விரும்பியும் இதுவரை சந்திக்க வாய்ப்புக் கிடைக்காத அரசியல் தலைவர் யார்?**

-முகமது காசிம், பேருவளை.

பிடல் கஸ்ரோ.

✉ **அல்லைப்பிட்டி?**

-இ.தாரணி, கெடோலிஸ்.

கடலில் குளிக்க விரும்பும் யாழ்ப்பாண மக்களுக்கு உல்லாச புரியாக இருந்த அல்லைப்பிட்டி, தெற்கு சாட்டியில் பளிங்கு போன்ற கடற்பரப்பும், நாலாபுறமும் கடல் இருந்தும் கற்கண்டு போல சுவையான குடி நீரை வாரி வழங்கிய அல்லைப்பிட்டி, மனித படுகொலைகள் மூலமும் ஒட்டு மொத்த மக்கள் வெளியேற்றத்தின் மூலமும் தலைப்புச் செய்தியானது கண்டு வேதனைப்படுவதைத் தவிர வேறு என்ன செய்ய முடியும்?

✉ **சிந்தியா! உங்கள் பொது அறிவுக்கு ஒரு சவால். உலகில் ஒரு இனம் உண்டு. அவர்களுக்கு எதிரிகள் இல்லை. அவர்களும் யாருக்கும் எதிரி இல்லை. அந்த இனத்திற்கு ஆட்சியாளர்களோ அல்லது தலைவர்கள் கூட எவருமே இல்லை. யார் அந்த இனத்தவர்?**

-க.கிருபாளினி, நல்லூர்.

நீங்கள் சொல்லாத மேலும் பல விடயங்களும் உண்டு. அந்த இன மக்களுக்கு பாஸ்போட் கூட இல்லை. ஆனால் விசா இல்லாமல் எந்த ஒரு நாட்டிற்கும் செல்லலாம். ஐ.நா.வின் விசேட தீர்மானம் கூட உண்டு. ஆனால் அவர்களில் ஒருவர் தன்னும் தமது தேசத்தைவிட்டு வெளியேறவில்லை. அவர்கள்தான் எஸ்கிமோ மக்கள்.

✉ **விண்வெளியில் இருந்து பூமிக்கு மின்சாரம் என்ற செய்தியை படித்தீர்களா?**

-விதூரன், உவர்மலை.

ஈர்ப்பு சக்தி இல்லாத அண்டவெளியில் காற்றாலைகள் போல தோற்றமளிக்கும் பாரிய டைனமோக்களை சுழலவைத்தால் எந்த எரிபொருட்களும் இல்லாமல் தங்குதடையற்ற மின்சாரத்தை பெறலாம் என்பது உண்மை. ஆனால் மின்சாரம் சேமிக்கப்பட்ட கலன்களை பூமிக்கு எடுத்து வருவதும் கொண்டு செல்வதும் சுண்டக்காய் காற்பணம் சுமைக்கூலி முக்கால் பணம் என்பதுதான் விஞ்ஞானிகளுக்கு இடிக்கின்றது.

✉ **முரட்டுத்தனமான டெனிம் துணியில் குழந்தைகளுக்கான சூட் தைக்கப்படுவது உகந்ததா?**

-பொ.தேவகி, கொழும்பு - 12.

குழந்தைகளுக்கான சூட் தைக்கப்படுவது ஒருபுறமிருக்க, டெனிம் துணியின் நதிமூலம் அறிந்தால் ஆச்சரியப்படுவீர்கள். டெனிம் என்பதற்கு சரியான தமிழ் கூடாரத் துணி. அதாவது கூடாரங்கள் அமைப்பதற்கு பயன்படுத்தப்பட்ட துணியில் ஓர் அமெரிக்கர் விளையாட்டாக காற்சட்டை தைக்கப்போய் அது உலகெங்கும் பாஷன் என்ற பெயரில் பற்றிக் கொண்டுவிட்டது.

# சாதனைக்கு வந்த சோதனை


**100 மீற்றர்** ஓட்டப் போட்டியில் தான் படைத்த உலக சாதனை நேரத்தில் குளறுபடி என்று கூறி மாற்றியது சரியானது அல்ல என்று அமெரிக்க வீரர் கெட்லின் வருத்தம் தெரிவித்துள்ளார்.

100 மீற்றர் ஓட்டத்தில் முதலாமிடம் பிடிப்பவர் உலகின் அதிவேக வீரர் என்ற பெருமையை பெறுகிறார். இந்த பெருமையை ஜமெய்க்காவைச் சேர்ந்த அசபா பவல் வகித்து வந்தார். கடந்த ஆண்டு ஜுன் மாதம் ஏதென்சில் நடந்த போட்டியில் அவர் 100 மீற்றர் ஓட்டத்தில் 9.77 வினாடியில் கடந்ததே உலக சாதனையாகும்.

இந்த சாதனையை அமெரிக்கவைச் சேர்ந்த ஜஸ்டின் கெட்லின் முறியடித்தார். கட்டார் நாட்டில் உள்ள டோகாவில் நடைபெற்ற கிரோன் ப்ரீ தடகள போட்டியின் 100 மீற்றர் ஓட்டத்தை கெட்லின் 9.76 வினாடியில் கடந்து புதிய சாதனை படைத்தார்.

கெட்லீன் 2004 ஆம் ஆண்டு ஏதென்சில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியில் தங்கப் பதக்கம் வென்றவராவார். கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் ஹெல்சிங்கியில் நடந்த உலக தடகள போட்டியின் 100 மீற்றும், 200 மீற்றர் ஓட்டத்தில் தங்கப் பதக்கம் வென்றவருமாவார்.

இதேவேளை கெட்லினின் சாதனை, உலக சாதனை



முறியடிப்பல்ல என்று சர்வதேச தடகள சம்மேளனம் அறிவித்தது. சம்மேளனம் இது தொடர்பாக கூறியதாவது, 9.76 வினாடியில் தான் போட்டி தூரத்தை கடந்து உள்ளார். அது தடகள விதிமுறைப்படி 9.77 வினாடியாக தான் கணக்கிடப்படும். அப்படி பார்க்கையில் கெட்லின் உலக சாதனை படைக்கவில்லை. ஜமெய்க்கா வீரர் அசபா பவலின் உலக சாதனையை (9.77 வினாடி) சமன் செய்து இருக்கிறார் என்றது. தனது உலக சாதனை தவறிப்போனது குறித்து மெரிக்க வீரர் ஜஸ்டின் கெட்லின் கூறியிருப்பதாவது,

எந்த ஒரு சராசரி மனிதனும் இந்த சூழ்நிலையில் நிலை குலைந்துதான் போவான். இந்த முடிவை உஎடுக்க அவர்களுக்கு 5 நாட்கள் ஆகிய இருக்கிறது. இது சாதாரண விடயமல்ல, உலக சாதனை படைத்து 5 நாட்கள் கழித்து அது சரியல்ல என்று சொல்வது ஏற்புடையது அல்ல. தற்போது உலகின் அதிவேக மனிதன் நான் தான் என்று கருதுகிறேன். உலக சாதனை தவறிபோனதால் ஏற்பட்ட கோபம் எனக்கு அதிக ஊக்கத்தை கொடுத்துள்ளது. நான் மீண்டும் உலக சாதனை படைப்பேன் என்றார்.

# ஸ்போர்ட்ஸ்

ஸ்போர்ட்ஸ் ஸ்போர்ட்ஸ் ஸ்போர்ட்ஸ்

## மெய்வல்லுனர் போட்டிகளில் ரோகான் தங்கப் பதக்கம் பெற்றார்

**பாங்கொக்கில்** நடைபெற்ற ஆசிய கிராண்ஸ் பிரிக்ஸ் மெய்வல்லுநர் போட்டியில், இலங்கை வீரர் ரோகான் பிரதீப் குமார 400 மீற்றல் ஓட்டத்தில் தங்கப் பதக்கத்தைப் பெற்றார்.

பெண்களுக்கான 200 மீற்றர் ஓட்டத்தில்



சுசந்திகா ஜெயசிங்கவுக்கு வெள்ளிப் பதக்கம் மட்டுமே கிடைத்தது.

ஆண்களுக்கான 400 மீற்றர் ஓட்டத்தில் ரோகான் பிரதீப் குமார அண்மையில் சிறப்பாக ஓடுவது குறிப்பிடத்தக்கது.

இவர் அண்மையில் அவுஸ்திரேலியாவில் நடைபெற்று முடிந்த பொதுநலவாய நாடுகளின் விளையாட்டு போட்டியில் 4x400 மீற்றர் அஞ்சல் ஓட்டத்தில் சிறப்பாக ஓடியவர்.

பாங்கொக்கில் நடைபெற்ற மெய்வல்லுநர் போட்டியில், 400 மீற்றர் ஓட்டத்தில் 45.81 வினாடிகளில் ஓடி, தங்கப் பதக்கத்தை பெற்றார். இப்போட்டியில் மற்றொரு இலங்கை வீரரான பிரசன்னா அமரசேகரா 46.42 வினாடிகளில் ஓடி வெள்ளிப்பதக்கத்தைப் பெற்றார்.

கடந்த 2 மாதங்களாக அமெரிக்காவில் தீவிர பயிற்சிகளைப் பெற்று வந்த சுசந்திகா ஜெயசிங்க, பாங்கொக்கில் 200 மீற்றர் ஓட்டத்தில் தங்கப் பதக்கத்தைப் பெறுவார் என்று அனைவரும் எதிர்பார்த்த போதிலும், இவர் இத்தூரத்தை 23.45 வினாடிகளில் ஓடி வெள்ளிப் பதக்கத்தையே பெற்றார்.

இப் போட்டியில் உஸ்பெக்கிஸ்தான் வீராங்கணை 23.29 வினாடிகளில் ஓடி தங்கப்பதக்கத்தைப் பெற்றார்.


## 11 - வர் அணிக்கு டிராவிட் தலைமை தாங்குகிறார்

**20** - 20 நலநிதி கிரிக்கெட் போட்டிக்கான உலக பதினொருவர் அணிக்கு ராகுல் டிராவிட் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். கடந்த ஆண்டு அக்டோபர் மாதத்தில் நிகழ்ந்த பூமி அதிர்ச்சி காரமாக பாதிக்கப்பட்ட பாகிஸ்தான் மக்களுக்கு நிதிதிரட்ட இங்கிலாந்தில் நலநிதி கிரிக்கெட் போட்டி ஒன்றை நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

இருபது 20 ஓவர்கள் அடிப்படையில் நடைபெறும் இந்தப் போட்டி லண்டன் ஓவல் மைதானத்தில் ஜுலை 10ஆம் திகதி நடைபெறவுள்ளது. இந்த போட்டியில் உலக பதினொருவர் பாகிஸ்தான் அணிகள்



மோதுகின்றன. இந்த போட்டிக்கான உலக பதினொருவர் அணியின் தலைவராக இந்திய வீரர் ராகுல் டிராவிட் நியமிக்கப்பட்டுள்ளார். மற்றும் அதிரடி ஆட்டக்காரர் தொனி, இலங்கை சார்பாக சுழற்பந்து வீச்சாளர் முரளிதரன், இங்கிலாந்து வீரர் பிளின்டொப், மேற்கிந்திய அணித்தலைவர் லாரா ஆகியோர் உலக பதினொருவர் அணியில் இடம்பிடித்துள்ளனர்.



இந்தப் போட்டிக்கான டிக்கெட் விற்பனை வரும் 30 ஆம் திகதி முதல் ஆரம்பமாவுள்ளது. இந்த போட்டியின் மூலம் கிடைக்கும் வருமானம் பாகிஸ்தான் பிரதமர் நிவாரண நிதிக்கு வழங்கப்படவுள்ளது.

## கடிதம் போவோம்....... 6ஆம் பக்கத் தொடர்ச்சி....

இத்தனை நவீன வளர்ச்சியிலும் கடிதம் வெளிப்படுத்தும் உணர்வு அபூர்வமானது. உறவுகளை நேசிக்கின்ற ஒவ்வொருவருக்கும் ஒரு கடிதத்தின் பெறுமதி வரையறுக்க முடியாததாகிறது. அதிலும் காதலில் தங்களைத் தொலைத்துவிட்டு அவனினதோ, அவளினதோ கடிதத்துக்காகக் காத்திருப்பதும், அதைக் கண்டுவிட்ட பிறகு அடிவயிற்றிலிருந்து மேலெழுகின்ற திருப்தியும் அனந்தமும் அனுபவித்தவர்களுக்கு மட்டுமே தெரியும். அதை விவரிப்பதும் விமர்சிப்பதும் அந்த உணர்வைக் கொச்சைப் படுத்துவதாக அமைந்துவிடும் என்ற பயம் எனக்கு.

கவிஞர்களின் கடிதம் தொடர்பான கற்பனைகள் எப்போதுமே என்னை அசத்துவனவாகவே அமைத்துவிடுகின்றன.

மனிதன் எல்லாவிதமான உணர்வுகளையும் ஒரு காகிதத் தாளில் வெளிப்படுத்திவிட முடிகிறது. எழுதியவரின் முகமாகவே கடிதம், நேசிக்கப்படுகின்றவர்களின் கண்களுக்குத் தெரிகிறது. மனது ஒழுகி ஊற்றிவிட்டதை சுமந்து கொண்டு கடிதம் ஊர் சுற்றி உரியவரிடம் அடைக்கலம் புகுந்து கொள்கின்றது.

முன்னாள் காதலிகளின் கடிதங்களை இன்னும் மறைத்து வைத்துக் கொண்டு அந்த நாட்களை அசைபோட்டுக் கொண்டிருப்பவர்களை எண்ணி கடிதமே சில சமயம் கண்ணீர் வடிக்கும். ஏன் முன்னாள் காதலர்களை நினைத்து கடிதங்களை மறைத்து வைத்துக் கொள்ளும் பெண்களை கடிதங்கள் கண்டுகொள்வதே அபூர்வம்தான்.

அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதியும் என் மரியாதைக்குரியவர்களில் ஒருவருமான ஆபிரஹாம் லிங்கன் அவர்கள், அவரின் மகனுக்குக் கற்பிக்கும் வாத்தியாருக்கு எழுதிய ஒரு நீண்ட கடிதத்தில் பலவிடயங்களைக் குறிப்பிட்டிருந்தாலும் ஒரே ஒரு வரி மட்டும் இன்னும் என்னை உஷார் படுத்திக் கொண்டிருக்கிறது "என் மகன் என்பதற்காக, தேவையான நேரத்தில் கண்டிக்காமல் விட்டு விடாதீர்கள். அப்படி ஒரு தவறை நீங்கள் செய்தால் பின்னாளில் அவன் எனக்கும் இந்த நாட்டுக்கும் பிரயோசனமற்றவனாகி விடுவான்" என்ற அந்த வரிகள், கடிதங்கள் பற்றிய நினைவு வரும்போதெல்லாம் வந்து கொண்டேயிருக்கும். இதேபோல் என் மரியாதைக்குரிய இந்தியாவின் தேசிய விடுதலைப் போராளி சுபாஸ் சந்திர போஸ் அவர்கள், அவரது மகளுக்கு எழுதிய இறுதிக் கடிதமும், அந்த நம்பிக்கை மிகுந்த வரிகளும் மறக்கமுடியாதவை. இப்படிப் பிரபலங்களின் கடிதங்களை ஞாபகப்படுத்தும்போது நான் ஒரு பிரபலத்தின் மறைவையொட்டி எழுதிய அனுதாபக் கடிதம் ஞாபகத்துக்கு வருகிறது. அதாவது இங்கிலாந்தின் முன்னாள் இளவரசி டயானாவின் மறைவு கேட்டு நான் அனுதாபக் கடிதம் எழுதினேன்; அவர் இளவரசி என்பதற்காக அல்ல. மிதி வெடிகளால் கால்களை இழந்து, அங்கவீனமாகிப்போகும் ஒருவரின் வாழ்க்கையின் துன்பங்களையும் ஏமாற்றங்களையும் உலகுக்கு எடுத்துக்காட்டும் விதமாக கால்களை இழந்தவர்களோடும் மிதிவெடி அகற்றலின்போதும் அவர்காட்டிய அக்கறையும் அதற்காக அவர் செய்த பரப்புரையும் அவர்மீதான விருப்பத்தை எனக்குள் துளிர்க்கச் செய்தது.

இப்போது சுவிட்ஸர்லாந்து நாட்டில் ஜெனீவா நகரில் அமைந்திருக்கும் மிதிவெடிகளுக்கு எதிரான அமைப்பின் அலுவலகத்திற்கு முன்னால், அதாவது ஐக்கியநாடுகள் சபை வாசலுக்கு முன்பாக அங்கவீனத்தின் அடையாளமாக நாற்காலியொன்று முக்காலியாக நிறுத்தப்பட்டிருக்கிறது. அந்த ஞாபகச்சின்னத்தை நினைக்கின்ற போதெல்லாம் டயானாதான் ஞாபகத்திற்கு வருவார். ஏனெனில் 1998ஆம் ஆண்டு இந்த ஒருகால் முறிந்த முக்காலியாகக் காட்சிதரும் நாற்காலியை முன்னின்று நிறுவியவர் அவரே. அந்த அமைப்பின் செயற்பாடுகளில் டயானா வகித்தப் பங்கு அபரீதமானது.

இதுதவிர இன்னும் இருவரின் மறைவுச் செய்தி கேட்டு அனுதாபக் கடிதம் எழுத முடியாமல் போய்விட்டதே என்று இன்றுவரை நான் கவலை கொண்டதுண்டு. அவர்கள் அன்னை தெரேசாவும், பாப்பரசர் அருளப்பர் சின்னப்பரும் தான். அவர்கள் வாழ்ந்த காலத்தில் நாமும் ஒரு மூலையில் வாழ்ந்து கொண்டிருந்தோம். சுருக்கமாக கூறுவதானால் அவர்கள் மனிதம் நேசித்தப்புனிதர்கள் அவ்வளவுதான்.

இன்றுவரை எனக்கு வாசிக்கக் கிடைக்காத கடிதம். கொலையாளி ஒருவன் தன் தூக்குத் தண்டனையைக் குறைக்கும்படி அல்லது தனது விடுதலைக்கு எழுதும் கருணை மனுக் கடிதம்தான் - அது எப்படியிருக்கும். ஒரு குற்றவாளி குற்ற உணர்வோடு எப்படி தனது கோரிக்கையை பதிவு செய்கிறான். சொற்களை எப்படி உபயோகப்படுத்துகிறான் என்பதைத் தெரிந்து கொள்ளும் என் ஆசை நீண்ட நாட்களாகவே உள்ளது. முகம் பார்த்து கதைக்கமுடியாத எல்லா வார்த்தைகளையும் ஒரு கடிதத்தில் பதிவு செய்ய முடிவதுதான் இன்றைக்கு வரையும் கடிதத்தின் தனித்தன்மை என்பது என் கருத்து. கடிதப் பரிமாற்றம் குறைந்து போனதற்கு இன்னொரு காரணமும் உண்டு. அதாவது நான் "பொரியம்மா" என்று எழுதிய காலத்தில் முத்திரை ஒன்று ஐம்பது சதம். இப்போது ஐந்து ரூபாய். ஒரு கடிதத்தின் பயன்பாடும் கிடைப்பதற்கு எடுத்துக் கொள்ளும் கால தாமதமும் மாறாமலே இருக்கிறபோது. விலைவாசி உயர்வு மட்டும் போட்டி போட்டுக் கொண்டு அதிகரித்துள்ளது.

இனியாவது இதயங்களை அனுப்பி உணர்வுகளை வாசிப்போம்.

## எண்களின் பலன்கள் எப்படி?

| எழுத்துக்கள் | எண்கள் | கிரகம் |
|---|---|---|
| A,J,I,Y,Q | - 1 எண் | சூரியன் |
| B,K,R | - 2 எண் | சந்திரன் |
| C,G,L,S | - 3 எண் | குரு |
| D,M,T | - 4 எண் | ராகு |
| E,H,N,X | - 5 எண் | புதன் |
| U,V,W | - 6 எண் | சுக்கிரன் |
| O,Z | - 7 எண் | கேது |
| F,P | - 8 எண் | சனி |

உதாரணம்: D.VISAGAN
4 6 1 3 1 3 1 5 = 24

## பிறப்பெண் - 5, கூட்டெண் - 3

5, 14, 23 போன்ற திகதிகளில் பிறந்து, பிறந்த திகதி, மாதம், வருடம் ஆகிய மூன்றையும் கூட்டி வருகின்ற கூட்டு எண்ணாகிய உயிர் எண் 3 வருமேயானால் இவர்கள புதன், குரு ஆதிக்கத்தில் பிறந்தவராவர். பார்ப்பதற்குக் ஓரளவு உயரமாகவும், கவர்ச்சியான தோற்றமுடையவராகவும் காட்சியளிப்பர். இவர்களது பற்கள் முத்துப் போன்று காட்சியளித்தாலும் முன் பற்கள் இரண்டும் சற்றுப் பெரிதாக இருக்கும். இளமையிலேயே சிலருக்கு முடி உதிர்ந்துவிடும். அதிக சிந்தனை செய்வதால் உடலில் உஷ்ணம் ஏறிக்கொண்டே போகும்.

சுறுசுறுப்பான இவர்கள் எப்பொழுதும் எதையாவது செய்துகொண்டும், திட்டம் தீட்டிக்கொண்டும் இருப்பர். நேர்மை, நீதி, ஒழுக்கம் போன்றவற்றில் சிறப்புற்று விளங்கும் இவர்களுக்குப் பெயர் பொருத்தமானதாக அமைந்து விட்டால் தான் செய்கின்ற உத்தியோகம், தொழில் போன்றவற்றில் சிறப்புற்று விளங்குவர். அதோடு செல்வச் சேர்க்கையும், வீடு, வாகனச் சேர்க்கையும் உண்டாகும். ஆனால் பெயர் நன்றாக அமையாவிட்டால் தான் செய்கின்ற காரியங்களில் தோல்வி காண்பர். நடவடிக்கைகள் மாறிவிடும். தேவையற்ற காரியங்களில் இறங்கி மாட்டிக் கொள்வர். கெட்ட பெயரையும் எடுப்பர்.இதனால் தன் பிறந்த திகதிக்குப் பொருத்தமானதாகப் பெயரை அமைத்துக் கொள்வது அவசியம்.

உத்தியோகம் பார்க்கும் இந்த எண்ணிக்கைக்காரர்கள் தான் செய்கின்ற வேலையில் கண்ணும் கருத்துமாக இருப்பதோடு உயர்ந்த இடத்தையும் எளிதில் பிடிப்பர். ஆனால் பெயர் பொருத்தமின்றி இருந்தால் கஷ்டத்திற்கு உள்ளாவர். கல்வி, கேள்விகளில் சிறந்து விளங்கும் இவர்கள் தன் தனித் திறமையால் உயர்ந்த நிலையை அடைவர். ஆனால் பெயர் பொருத்தமின்றி இருப்பவர்களின் திறமை முழுவதும் பிறருக்குப் பயன்பட்டுவிடும்.

மிகுந்த கெட்டிக்காரர்களான இவர்கள் அதிகம் பேச மாட்டார்கள். அப்படிப் பேசினாலும் அது பயனுள்ளதாகவே இருக்கும். 4 எண்காரர்களைப் போல் மனதில் வந்ததையெல்லாம் மறக்காமல் வெளியிட மாட்டார்கள். தான் சொல்ல வேண்டியதை சிந்தனை செய்தே சொல்லுவர். முன்பின் யோசனை செய்தே ஒரு காரியத்தில் இறங்குவர். இதனால் இவர்களை ஒரு நல்ல சிந்தனையாளன், அறிவாளி எனப் பலர் ஏற்றுக்கொள்வர். ஆனால் பெயர் நன்றாக அமையாவிட்டால் இவர்களுடைய திறமைகள் அனைத்தும் பிறருக்காகச் சென்றுவிடும். இதனால் பெயர் நன்றாக அமையவேண்டியது அவசியம்.

தொழில் செய்யும் இவர்களுக்குப் பெயர் நன்றாக அமைந்து விடுமேயானால் தொழிலில் நிகரற்ற லாபத்தை அடைவர். எல்லோரும் மதிக்கும் மனிதராக வாழ்வர். பலருக்கு வேலைகொடுக்கும் பாக்கியவானாக இருப்பர். என்றும் செல்வம் இவர்களுக்குக் குறையாது. இதே போன்று உத்தியோகத்தில் இருப்பவர்களின் பெயரும் சிறப்பாக அமைந்துவிட்டால் உத்தியோக உயர்வும், முன்னேற்றமும் கூடிக்கொண்டே போகும். ஆனால் பெயர் பொருத்தமானதாக அமையாவிட்டால் எல்லாத் திறமையும் வீணாகிவிடும்.

இவர்களது மனம் புதிய ஆராய்ச்சியிலும், கண்டுபிடிப்புகளிலும் இறங்கிவிடும். உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசத் தெரியாததால் தனக்குப் பிடிக்காதவைகளை உடனே பகிரங்கமாகக் கூறிவிடுவர். இதனால் சிலருடைய பகையும் இவர்களுக்கு உண்டாகும். சமயம், சட்டம், சங்கீதம் போன்றவற்றில் மனம் லயிக்கும். கலைஞானம் கொண்டவர்களாதலால் கலையைக் கற்கவும், ரசிக்கவும் செய்வர். தொழில் கூடங்களைக் கண்டு களிப்பதிலும், பல வியாபாரங்களைப் பற்றித் தெரிந்து கொள்வதிலும், வெளிநாட்டைப் பற்றித் தெரிந்து கொள்வதிலும் ஆர்வம் உடையவர்கள். தான் செய்யும் ஒவ்வொரு காரியமும் பலருக்குப் பிரயோசனப்பட வேண்டும் எனப் பாடுபடுவர்.

இவர்கள் எந்தக் காரியத்தையும் ஆலோசிக்காது அவசரப்பட்டுச் செய்ய முன்வரமாட்டார்கள். ஆனால் பெயர் நன்கு அமையாதவர்கள் அவசரப்பட்டு இறங்கி சில விஷயத்தில் மாட்டிக் கொண்டும் தவிப்பர். எதையும் நுணுக்கமாகச் செய்யும் இவர்களை மற்றவர்கள் மதிப்பர். இதனால் இவர்கள் தகுதி உயர்ந்து கொண்டே செல்லும். செய்யும் தொழிலை மதித்து வாழும் இவர்களைவிட்டு எப்போதும் சக்தி பிரிவதில்லை. அடக்கமாகப் பேசுவதும் தான் நினைத்த காரியத்தை நோக்கியே செல்வதும் இவர்களிடம் உள்ள சிறப்பாகும். பெயரை நன்றாக அமைத்துக் கொண்டால் இவர்கள் என்றும் சீரும் சிறப்புமாக வாழ்வர்.

**தொழில்:**

இவர்களுக்கு கமிஷன், காண்ட்ராக்ட், ஏஜென்ஸீஸ் போன்ற தொழில்களெல்லாம் சிறப்பாகும். வாகனத்தாலும், பல்வேறு பொருட்களை வியாபாரம் செய்வதாலும் முன்னேற்றம் பெறுவர்.

**நோய்:**

இந்த எண்ணிக்கைக்காரர்களுக்கு இரத்தக் கொதிப்பு, மூட்டுவலி, உஷ்ண வியாதிகள், கண் நோய் போன்றவைகள் வந்து நீங்கும். பெயர் பொருத்தமாக அமைந்துவிட்டால் நோய் அதிகம் வருவதில்லை.

**பெயர் அமைக்கும் முறை:**

5 என்ற புதனும், 3 என்ற குருவும் ஆதிக்கம் கொண்ட இவர்களுக்குப் புதன், குரு ஆதிக்கத்திலே அமைத்துக் கொள்வது சிறப்பாகும். புதன் ஆதிக்கமான 14, 23, 32, 41, 50, 59, 77 போன்ற எண்களிலும், குரு ஆதிக்கமான 21, 39 போன்ற எண்களிலும் பெயரை அமைத்துக் கொள்து சிறப்பாகும்.

**பின்பற்ற வேண்டியவை:**

| | |
|---|---|
| யோகமான எண் | - 5, 3, 9. |
| யோகமான திகதிகள் | - 5, 14, 23; 3, 12, 21, 30; 9, 18, 27. |
| யோகமான மோதிரக்கல் | - வைரம், ஜிர்கான், எமிதிஸ்ட். |
| யோகமான நிறம் | - வெளிர் நீலம், சாம்பல் நிறம், றோஸ், ஆரஞ்சு, கத்தரிப்பூ நிறம் |
| ஆகாத நிறம் | - பச்சை. |
| ஆகாத திகதிகள் | - 6, 15, 24. |

அடுத்த வாரம் பிறப்பெண் 5, கூட்டெண் 4 பற்றிப் பார்ப்போம்.

# வில்லியம் ஷேக்ஸ்பியர் என்ற எட்வர்ட் - டி - வேர் (கி.பி. 1550 - 1604 நூற்றாண்டு)

## உலகை வியக்க வைத்தவர்கள்

**சென்றவாரத் தொடர்ச்சி**

**இன்னொரு** வாதமும் உண்டு. எழுத்தாளர் வில்லியம் சேக்ஸ்பியர் நன்கு கற்றறிந்த மேதையாகத் தோன்றுகிறார். அவருடைய சொல்லாட்சித் திறன் இதற்குச் சான்று; வேறெந்த நாடகாசிரியரையும்விட, மிக அதிகமான சொற்களை அவர் கையாண்டிருக்கிறார்; பிரெஞ்சு, லத்தீன் இரு மொழிகளிலுங்கூட அவர் புலமை பெற்றவராக இருந்திருக்கிறார்; சட்டச் சொற்களை மிகத் துல்லியமாகக் கையாண்டிருக்கிறார். பண்டைய இலக்கியங்களில் அவர் நுண்மான் நுழைபுலம் பெற்றவராகத் திகழ்ந்திருக்கிறார்; ஆயினும், அவர் ஒரு பல்கலைக் கழகத்தில் படித்ததில்லை என்பதை எல்லோரும் ஒப்புக் கொள்கின்றனர். முன் கூறியது போல், அவர் இலக்கணப் பள்ளியில் படித்தாரா என்பதுகூட ஐயத்திற்கிடமாகவே உள்ளது.

மற்றொரு செய்தியும் உள்ளது. எழுத்தாளர் சேக்ஸ்பியர் மேட்டுக்குடி (Aristocratic) ஆதரவாளராகவும், உயர் குடிப் பின்னணியுடையவராகவும் தோன்றுகிறது. நரி வேட்டை, வல்லூறு வளர்ப்பு (Falconry) போன்ற உயர் குடியினர் விளையாட்டுகளில் நல்ல தேர்ச்சி இருந்தது. அரசவை வாழ்க்கையையும் அரசவை சூழ்ச்சிகளையும் அவர் நன்கறிந்திருந்தார். இதற்கு மாறாக, இந்த சேக்ஸ்பியர் ஒரு சிறிய நகரிலிருந்து வந்தவர்; ஒரு நடுத்தர வர்க்கப் பின்னணியைக் கொண்டிருந்தவர்.

இந்த சேக்ஸ்பியரின் வாழ்க்கை பற்றிய இன்னும் ஏராளமான அம்சங்களும் உண்டு. இவை, புகழ் பெற்ற எழுத்தாளர் வில்லியம் சேக்ஸ்பியர் இவர்தான் என்ற கருதுகோளுக்கும் பொருந்துவனவாக இல்லை. இந்தக் கருதுகோளை ஏற்றுக் கொள்வதற்குத் தடங்கலாக உள்ள இன்னும் எத்தனையோ இடர்ப்பாடுகள் குறித்து எழுதுவதற்கு என்னிடம் நிறையச் சான்றுகள் உள்ளன. (இது பற்றி இன்னும் அதிகமான விவரங்கள் அறிய விரும்பும் வாசகர்கள் சார்ல்டன் ஆக்பர்ன் (Charlton Ogburn) எழுதிய "மர்மமான வில்லியம் சேக்ஸ்பியர்" (Mysterious William Shakespeare) என்ற அரிய நூலைப் பார்க்க. இந்த இடர்பாடுகள் ஒவ்வொன்றுக்கும் மரபுமுறை வாழ்க்கை வரலாற்றாசிரியர்கள், கருதுகோள் விளக்கங்களை உருவாக்கியிருப்பது உண்மை.



இந்த விளக்கங்களில் சில ஏற்றுக் கொள்ள முடியாதவை; ஆனால், ஒவ்வொன்றையும் தனித் தனியே ஆராய்ந்தால் அது உண்மை என்றே சொல்லத் தோன்றும்.

எடுத்துக்காட்டாக, புகழ் பெற்ற மனிதர்களிடமிருந்து வரும் கடிதங்களைப் பத்திரமாகப் பாதுகாக்க வேண்டும் என்பது பொதுவாக மக்களின் மனப்போக்காக இருந்து வந்தபோதிலும், சேக்ஸ்பியர் எழுதிய நேர்முக அல்லது வாணிகக் கடிதம் ஒவ்வொன்றும் அவருடைய குறிப்புகள், குறிப்பேடுகள், எழுத்துப்படிகள் ஆகியவற்றுடன் அடியோடு மறைந்து போயின என்பதை ஏற்றுக் கொள்வோம். இந்தத் தலைசிறந்த ஆங்கிலக் கவிஞர், தமது கல்லறையில் காணப்படும் சிறுபிள்ளைத்தனமான நையாண்டிப் பாடல் வரிகளைத் தமது கல்லறை வாசகமாக எழுதினார் என்பதையும் ஏற்றுக் கொள்வோம். தமது நாடகங்களில், அறிவார்ந்த, கற்றறிந்த பெண்மணிகளைப் போற்றிச் சித்திரித்த ஒருவர், தம் புதல்வியரை எழுத்தறிவின்றி வளர்த்தார் என்பதையும் ஒப்புக் கொள்வோம். இங்கிலாந்தில் மிகவும் போற்றப்பட்ட எழுத்தாளராக சேக்ஸ்பியர் விளங்கிய போதிலும், ஸ்டிராட் .:.போர்டிலிருந்த அவருடைய நண்பர்களில், குடும்பத்தினரில், அண்டை அயலாரில் ஒருவர் கூட அவரை ஒரு நடிகராகவோ, கவிஞராகவோ, நாடகாசிரியராகவோ குறிப்பிடவில்லை என்பதையும் ஏற்றுக் கொள்வோம். இவை நடந்திருக்க இயலாது; இருந்தாலும் நடந்ததாகக் கொள்வோம்.

**வியப்புக்கள் தொடரும்....**

## காதிலை பூ கந்தசாமி

**நோட்டீஸ் பலகை**



நான் சொல்வ தெல்லாம் பொய்.
பொய்யைத் தவிர
வேறொன்றுமில்லை
*-காதில பூ கந்தசாமி-*

வணக்கமுங்கோ!

**நானும்** கன நாளா வெயிட் பண்ணிக் கொண்டு வந்தனான், உவர் ஈரோஸ் பாலாவை ஒரு நாளெண்டாலும் சந்திச்சு நேரடியா ரெண்டு வார்த்தை கதைக்கவேணுமெண்டு. அம்புட்டார் பாருங்கோ, அப்புடியே அமுக்கிப்போட்டன். எண்டாலும் காதிலை பூவோடை கதைக்க மாட்டன் எண்டவராம். பிறகு விளக்கமாகச் சொல்லியனுப்பினன். எப்புடியெண்டு யோசிக்கிறியளோ? காதிலை பூவெண்டது என்னுடைய பெயர். அதுக்காக என்ர காதிலை பூ இல்லையுங்கோ எண்டு விளக்கமாகச் சொல்லவும்தான் அவர் சம்மதிச்சவர்.

***கா.பூ.** :- ஹலோ ஈரோஸ் பாலா! எப்புடி இருக்கிறியள்?*

**ஈ.பா.** :- இப்ப நான் புலி பாலா தெரியுமோ?

***கா.பூ.** :- அது இருக்கட்டும். நீங்க புலிகளின்ர முக்கியஸ்தர் எண்டால் அப்ப சு.பா., பாலா போன்ற மற்றவை முக்கியஸ்தர் இல்லையோ?*

**ஈ.பா.** :- இங்க பாரும், உப்பிடி வில்லங்கமான கேள்வியளைக் கேட்டு குழப்பாமல் ஏதும் கேக்கிறதா இருந்தால் டக்கெண்டு கேளும் பாப்பம்.

***கா.பூ** :- சரி, டக்கெண்ட படியாலை கேக்கிறன்... அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவைப் பற்றி என்ன நினைக்கிறீங்கள்?*

**ஈ.பா.** :- புலிகளின்ர பக்கமிருந்து சொல்ல வேணுமெண்டால், அவர் அரசியல் வேலைத்திட்டத்தை மக்களுக்குள்ள புகுத்தி, மக்களுக்குப் போராட்ட குணத்தை தளர்ந்து போகச் செய்யிறார். தனிப்பட்ட கருத்துச் சொல்லுறதெண்டால், புலிகளோடை நான் சேரேக்க அவர் உந்தக் கட்சியை நிறுவியிருந்தால் நானும் அவருடன் சேர்ந்திருப்பேன். இப்போது முடியாது.

***கா.பூ** :- சரி, கூட்டுச் சேரிறதைப் பத்திச் சொல்லுறியள். அப்புடியெண்டால் உந்தத் தமிழ் கூட்டமைப்பு பற்றி என்ன சொல்லப்போறியள்?*

**ஈ.பா.** :- உது தமிழ் கூட்டமைப்பு இல்லை; சந்தர்ப்பவாத கூட்டமைப்பு. அவைக்கு கொள்கையுமில்லை; ஒரு வேலைத் திட்டமுமில்லை. சோறு கண்ட இடம் சொர்க்கம் எண்டு வெந்ததைத் திம்பினம். விழுந்த இடத்தில தூங்குவினம்.

***கா.பூ.** :- ஏன் சந்தர்ப்பவாதக் கூட்டு எண்டிறியள்?*

**ஈ.பா.** :- பின்ன என்ன, என்னைப் பாருங்கோ. எனக்கு அந்த நேரத்தில சரியெண்டு பட்டுது புலிகளோடை சேர்ந்திட்டன். ஈரோசைக் கலைச்சிட்டன். இவை என்னடாவெண்டால் முழுசா சேரவும் இல்ல; அதே நேரத்தில தங்கட கட்சிகளையும் முன் நிறுத்தவுமில்ல. உந்த ஈ.பி.டி.பி.க்காரர் சொல்லிற மாதிரி இவை உண்மையில கூத்தமைப்புக்காரர்தான்.

***கா.பூ.** :- உந்த விசயத்தில உங்களை நினைச்சால் புல்லரிக்குது தெரியுமோ? அது சரி, அவை ரெண்டுங்கெட்டான் பார்ட்டியெண்டால் பின்ன ஏன் அவையை எம்.பி.யாக்கி வச்சிருக்கியள்?*

**ஈ.பா.** :- அதைக் கவ்விக் கொண்டு வாலை ஆட்டிக் கொண்டு கிடக்கினம் பார்க்கயில்லையே?

***கா.பூ.** :- சரி, உங்கட தலைவர் என்ன சொல்லுறார்?*

**ஈ.பா.** :- அதை நீங்கள் அவர் கார்த்திகை மாசம் வாசிக்கிற ஆண்டறிக்கையிலதான் கேக்க வேணும். அது தயாராகும் வரையும் அவர் மக்கள்முன் தோன்றி ஒன்னும் பேசமாட்டார்.

***கா.பூ.** :- சரி, உங்களுடன் இருந்த பழைய ஈரோஸ் உறுப்பினர்களுக்கு நீங்கள் என்ன சொல்ல விரும்புறியள்?*

**ஈ.பா.** :- உங்களை நடுத்தெருவில விட்டதுக்காக நான் ஒவ்வொரு நாளும் கண்ணீர் விடுகின்றேன். அந்தத் துரோகத்துக்கான விளைவைத்தான் இப்போது நான் அனுபவித்துக்கொண்டிருக்கிறேன். என் அவசரத்தனத்தால் ஈரோஸ் சின்னாபின்னமாகி விட்டதையும், என்னுடன் இருந்த நீங்கள் என்னை நொந்து திட்டியதையும் ஒவ்வொரு இரவிலும் பயங்கரக் கனவுகளாகக் கண்டு வருகிறேன். உங்கள் ஒவ்வொருவரினதும் தன்மான உணர்ச்சியையும் எண்ணிப் பெருமைப்படுவதோடு, சுய திருப்தியுமடைகிறேன். இந்த நேரத்தில் நமது அன்புக்குரிய சின்னபாலா கொல்லப்படுவதற்கு எனது பங்களிப்பும் இருந்ததற்காக உங்கள் அனைவரிடமும் மன்னிப்புக் கேட்கிறேன்.

***கா.பூ.** :- எப்புடி உங்களாலை இவ்வளவு தாராளமாக தவறுகளை ஏற்றுக்கொள்ள முடிகிறது?*

**ஈ.பா.** :- என்ன செய்ய, நான் ஆரம்பித்த பயணம் சரியானதுதான். இடையில சில வரலாற்றுத் தவறுகள் நடந்துவிட்டன. நானும் தவறு செய்துவிட்டேன்.

***கா.பூ.** :- சரி, தவறை உணர்ந்து கொள்ளும் நீங்கள் அதை ஈடுகட்ட மாட்டீர்களா?*

**ஈ.பா.** :- நிச்சயமாக ஈடுகட்ட வேண்டும். அதற்கான கால நேரம் வரும்வரை காத்திருக்கிறேன். அது ஒரு நாள் நடக்கும்.

***கா.பூ.** :- அது எண்டால் எது?*

**ஈ.பா.** :- அதுக்கு விளக்கம் தர முடியாது. வரலாறு உணர்த்தும். அப்போது என் பழைய தோழர்களும் ஏற்றுக் கொள்வார்கள்.

***கா.பூ.** :- இறுதியாக தமிழ் மக்களுக்கு என்ன சொல்லப் போறியள்?*

**ஈ.பா.** :- நானாக எந்தக் கருத்தையும் தெரிவிக்க முடியாது. அது ஈரோஸ் பாலாவின் கருத்தாக எடுக்கப்பட்டுவிடும் என்பதால் பின்னாளில் என்னை மாமனிதராக அது மாற்றி விடும். இருந்தும் ஒன்று மட்டும் சொல்வேன், நான் செய்த தவறும் தவறான போராட்ட அணுகுமுறையும் தமிழ் மக்களுக்கு ஒரு நாளும் கௌரவமான அரசியல் உரிமைகளைப் பெற்றுத் தராது. ஆகவே மக்கள் சிந்திக்க வேண்டும்.

***கா.பூ.** :- ஓ...கோ. போதும்...ரொம்பவும் தான் சென்டிமெண்டாக இருக்கு. இங்க எனக்கே கண்கலங்கின மாதிரி இருக்கு...நன்றிங்கோ.*

**யாவும் கலப்படமற்ற கற்பனை**

## இந்த வாரம் உங்கள் பலன்

(25.05.2006 தொடங்கி 31.05.2006 வரை)

**சோதிட மாமணி தில்லை**

### இந்த வாரக் கிரக நிலை

இடபம் - சூரியன், புதன். கர்க்கடகம் - சனி, செவ்வாய். கன்னி - கேது. துலாம் - வியாழன். மீனம் - இராகு. மேடம் - வெள்ளி.
சந்திரன் மேடம், இடபம், மிதுனம் இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.

**மேடம் :** (அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்.) தொழில் கெடுதி, பணவிரயம், மனக்கலக்கம், தூர இடப் பயணம், வெளியிட வாழ்க்கை, உறவினர் உதவி, உத்தியோகக் கஷ்டம், மேலதிகாரிகள் தொல்லை, மாணவர் கல்விக் குழப்பம், புதிய கல்வி முயற்சி, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 04.**

**இடபம் :** (கார்த்திகைப் பின் முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்து முன்னரை.) தொழில் பலிதம், பொருள் வரவு, மனமகிழ்ச்சி, அந்நியர் சகவாசம், கடன் பயம், குடும்பக் கலகம், உத்தியோகப் பகை, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி மாற்றம், விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 03.**

**மிதுனம் :** (மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்.) தொழில் நன்மை, காரியானுகூலம், பெரியோர் சகவாசம், இனசன நன்மை, குடும்பப் பேறு, உத்தியோகப் பொறுப்பு, மாணவர் கல்வி மேன்மை, விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- புதன்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 05.**

**கர்க்கடகம் :** (புனர்பூசத்து நாலாங்கால், பூசம், ஆயிலியம்.) தொழில் மாற்றம், மனக்கலக்கம், பணச்செலவு, வீண்துயர், புதிய முயற்சி, இனசனப் பகை, மனக்கலக்கம், உத்தியோகச் சிறப்பு, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- திங்கள்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 07.**

**சிங்கம் :** (மகம், பூரம், உத்தரத்து முதற்கால்.) தொழில் நன்மை, காரியானுகூலம், மனமகிழ்ச்சி, உயர்ந்த எண்ணம், பெரியோர் சகாயம், குடும்பப் பொறுப்பு, செலவதிகம், உத்தியோகச் சிரமம், மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்விக் குழப்பம், விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 01.**

**கன்னி :** (உத்தரத்துப் பின் முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை.) தொழில் கலக்கம், செலவு மிகுதி, கடன் படல், பெரியோர் உதவி, மனக்குறை நீங்கும், குடும்ப நன்மை, உத்தியோகச் சிறப்பு, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- புதன்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 05.**

**துலாம் :** (சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்.) தொழில் அலைச்சல், பாரிய செலவு, மனப்பயம், வெளியிட வாழ்க்கை, அந்நியர் உதவி, குடும்பக் கஷ்டம், உறவினர் உபத்திரம், உத்தியோகச் சிரமம், பதவி மாற்றம், மாணவர் கல்வி மந்தம், விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 06.**

**விருச்சிகம் :** (விசாகத்து நாலாங் கால், அனுஷம், கேட்டை.) தொழில் நன்மை, உயர்ந்த நிலை, பெரியோர் சகாயம், மனக்குறை நீங்கும், இனசன நன்மை, குடும்ப மகிழ்ச்சி, உத்தியோகப் பொறுப்பு, மாணவர் கல்வி கஷ்டம், விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்.**
**அதிர்ஷ்ட இலக்கம் :- 04.**

**தனு :** (மூலம், பூராடம், உத்தராடத்து முதற் கால்.) தொழில் சிறப்பு, புதிய முயற்சி, செலவதிகம், வெளியிடப் பயணம், மனக்கலக்கம், தேகசுகக் கஷ்டம், குடும்பப் பிரிவு, உத்தியோகப் பாரம், மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- வியாழன்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 02.**

**மகரம் :** (உத்தராடத்துப் பின் முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை.) தொழில் பயம், செலவு மிகுதி, கடன் படல், மறைமுக எதிர்ப்பு, பெரியோர் உதவி, குடும்ப நன்மை, உத்தியோக உயர்ச்சி, மாணவர் கல்வி மாற்றம், விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- திங்கள்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 07.**

**கும்பம் :** (அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்.) தொழில் மேன்மை, பெரியோர் பகை, வீண் மனஸ்தாபம், தேகசுகக் கஷ்டம், குடும்ப மகிழ்ச்சி, சுபகாரிய நன்மை, உத்தியோகப் பொறுப்பு, மேலதிகாரிகள் நன்மை, மாணவர் கல்வி நன்மை, விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 03.**

**மீனம் :** (பூரட்டாதி நாலாங் கால், உத்திரட்டாதி, ரேவதி.) தொழில் உயர்ச்சி, பிரயாசை மிகுதி, பண வரவு, தூர இடப் பயணம், மனக்குறை நீங்கும், குடும்ப சகாயம், வெளியார் தொல்லை, உத்தியோக முயற்சி, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- திங்கள்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 01.**

Regd. as a News Paper at the G.P.O.(QD/06/NEWS/2006)

இதய வீணை

தினமும்

மாலை 6.30 தொடக்கம்
இரவு 8.30 மணி வரை

அடக்கப்பட்ட மக்களின் உணர்வுகள் கருத்துக்களாய் கதைகளாய்... செய்திகளாய்... நமது காதுகளில்

கிழக்கு மாகாணம் 107.9, 104.5
வட மாகாணம் 92.2
கொழும்பு 105.6


நாடு முழுவதும் தென்றல் FM அலைவரிசையில்....

இதய வீணையின் பொதுத் தொடர்புகளுக்கு
இதய வீணை
த.பெ. இல - 1665
கொழும்பு.
தொலை பேசி :- 0773114208
Web - www. tirradio.com
E-Mail : idayaveenai@hotmail.com
info@tirradio.com

இலங்கையில் ஒலிபரப்பாகும்
இதயவீணை நிகழ்ச்சிகள் இப்பொழுது
ஐரோப்பிய நாடுகளில் வாழும்
எமது தாயக உறவுகளுக்காக
செய்மதி ஊடாகவும் ஒலிபரப்பப்படுகிறது


| | |
|---|---|
| Satellite : | HotBird - 6 |
| Location : | 13° East |
| Frequency : | 10971MHz |
| Polarity : | Horizontal |
| Symbol rate : | 27.500 Msb |
| FEC : | 3/4 |
| Transponder : | 133 |

## பெரிய வெட்டு



பொதுவாக நாம் சில தேவையான கடதாசி மற்றும் துணிகளை வெட்டுவதற்கு கத்தரிக்கோலை பயன்படுத்துவோம். ஆனால் இங்குள்ள கத்தரிக்கோலை யாராலும் சாதாரண துணிகளை வெட்ட பயன்படுத்த முடியாது. ஏனெனில், இதன்அளவு அப்படியானது. ஆம் இது உலக சாதனைக்காக தயாரிக்கப்பட்டது. அமெரிக்காவை சேர்ந்த தையல் கலைநிபுணர் ஒருவர் தன் தொழில் சார்நத சாதனையை செய்வதற்காக இக் கத்தரிக்கோலை உருவாக்கியுள்ளார். விரிந்திருக்கும் போது இதன் அளவு 0.9 மீற்றர், சாதாரணமான மூடியிருக்கும் போது இது 0.82 மீற்றராகும். இதன் நுனி முழுமையாக சவர அலகுகளால் ஆக்கப்பட்டவை என்பது மற்றுமொரு செய்தி.

## பார்க்க மட்டும்...



## பெரிய மாலை




அருகில் உள்ளவர் ஏதோ பழங்குடியினர் என்று நினைக்கத் தோன்றுகிறதா? இல்லவே இல்லை இவர் ஒரு சாதாரண தொழிலாளிதான். இவர் சாதனை செய்வதில் வல்லவராவர். இவரின் 40 ஆவது பிறந்த நாளை முன்னிட்டு சாதனை ஒன்றை நிலைநாட்டினார். இதற்காக இவர் சுவிங்கம் சுற்றும் பேப்பர்கள் பலவற்றினை கோர்த்து மாலை செய்துள்ளார். இதன் நீளம் அண்ணளவாக 14,037 மீற்றர் (46,053 அடி) யாகும். இது கிட்டத்தட்ட 125 அமெரிக்க கால் பந்து மைதானத்தின் நீளம் வருமாம். இதன் நிறை 286 கி.கி. ஆகும். இதனை உருவாக்க இவர் வாங்கிய சுவிங்கம்களுக்காக செலவழித்த தொகை 53,833 அமெரிக்க டொல்ர்களாகும்.

## முட்டைகள்

பொதுவாக முட்டைகள் நீள்வட்ட வடிவானவை. அதனால் இவைகளை நிலையாக நிறுத்த முடியாது. ஆனாலும் முட்டைகளை நிலையாக நிறுத்துவோம் என்று புறப்பட்ட அமெரிக்க பிரின்ஜம் பல்கலைக்கழக மாணவர்கள் இதனை செய்தும் காட்டியுள்ளனர். இவர்கள் 1,290 முட்டைகளை 6 மணித்தியாலங்கள் 30 நிமிடங்கள் நிலைநிறுத்தியிருக்கிறார்கள். என்ன இதுவும் ஒரு சாதனை தானே.





## உயிரிழப்பு

எரிமலை வெடிப்பு மற்றும் இதர அனர்த்தங்கள் மூலம் உயிரிழப்புகள் ஏற்பட்டுகின்றமை தவிக்க முடியாத ஒன்றாகி விட்டது. ஆனால் இங்கே உயிரிழப்புகளாலேயே சாதனை படைக்கப்பட்டுள்ளது. 1902 ஆம் ஆண்டு மேற்கிந்திய தீவுகளில் ஏற்பட்ட எரிமலை வெடிப்பினால் கிட்டத்தட்ட 30,000 உயிரினங்கள் கொல்லப்பட்டனவாம் ஒரு நாட்டில் மட்டும். எரிமலைக் குழம்புகள் மணிக்கு 160 கி.மீ. வேகத்தில் தூக்கி எறியப்பட்டனவாம். இதன் போது தான் அதிகம் உயிரிழப்பு ஏற்பட்டதாம்.

## நிரந்தரமானது

சினிமாக் கொட்டகைகளில் பெரிய திரைகள் வைத்துத் தான் படம் காட்டப்படும் என்பது அனைவரும் அறிந்ததே. ஆயினும் சில இடங்களில் மொபைல் விஷன் எனப்படும் நடமாடும் திரைகள் உள்ளன. இதன் மூலம் பாதையில் செல்லும் போதே நிகழ்ச்சி எதனையும் பார்க்கலாம். இது அசையக்கூடியது. ஆனால்இங்குள்ளதோ அசையாத திரை ஆனாலும் மிகப் பெரிய திரை இது சிட்னி நகரில் தான் இருக்கிறதாம். இத் திரை பனசொனிக் நிறுவனத்தின் காரியாலயததின் முன் தான் வைக்கப்பட்டுள்ளதாம். ஐ மக்ஸ் தியேட்டர் என அழைக்கப்படும் இத் தியேட்டரின் திரையின் நீள அகலம் 35.72 x 29.57 மீற்றராகும். இது கூடைப்பந்தாட்ட மைதானம் ஒன்றினைப் போல இரு மடங்கு பெரிதானதாம். இந்த தியேட்டரில் 540 பார்வையாளர்கள் உட்கார்ந்து காட்சிகளை ரசிக்க முடியுமாம் என்றால் பார்த்துக் கொள்ளுங்கள்



## வேகமான பெண்கள்



பெண்கள் என்றால் நிதானம் என்பார்கள். ஆனால் இங்கு கதை தலைகீழாக மாறி இருக்கிறதே. பனிச்சறுக்கு போட்டிகளில் ஈடுபடும் பெண்களே இவர்கள். இவர்கள் ஒரு குழுவாகவே பனிச் சறுக்கு போட்டியில் பங்கு பற்றுவார்களாம். தென் கொரியா நாட்டைச் சேர்ந்த இவர்கள் 1500 மீற்றர் தூரத்தை 2 நிமிடம் 21 செக்கனில் கடந்து புதிய சாதனை ஒன்றை நிலைநாட்டினார்களாம்.